# பரியார் பல்கலைக்கழகம்

**(NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)**

**State University - NIRF Rank 59 - NIRF Innovation Band of 11-50)**

**சேலம் - 636 011**

## தாலைநிலை மற்றும் இணையவழி கல்விமையம்

## முதுகலைத்தமிழ்

**(முதல் பருவம் - முதலாமாண்டு)**

## முதன்மைத்தாள் - 1 : தால்காப்பியம் - எழுத்ததிகாரம்

# (Candidates admitted from 2025 onwards)

# PERIYAR UNIVERSITY

## CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

## M.A தமிழ் 2025 admission onwards

### CORE I

தொல்காப்பியம் - எழுத்து

Prepared by:

முனைவர். வே. பூர்ணா
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11

Scrutinized & Verified by:

BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

# பாடம் நோக்கம்

- காலந்தோறுமான இலக்கண வளர்ச்சிப்போக்கை அறிந்து கொள்ளச் செய்தல்.
- தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழ் எழுத்திலக்கணத்தைக் கற்பித்தல்.
- எழுத்துக்களின் உருவாக்கம், ஒலிப்பான், ஒலிக்கும் இடங்கள், ஒலிப்பு முறை, எழுத்துக்கள் புணரும் முறைகள் ஆகியவற்றை அறிதல்.
- பழங்காலந்தொட்டு வழங்கிவரும் தனிமொழிகளையும் அவற்றின் இடையில் நிற்கும் எழுத்து மரபையும் வகைப்படுத்திக் கூறுதல்.
- நன்னூலோடு தொல்காப்பியத்தை ஒப்பீட்டு மொழி வளர்ச்சிப் போக்குகளையும் இலக்கண வேறுபாட்டு நிலைகளையும் விளக்குதல்.

# பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் | 4-48 |
| 2 | புணரியல், தொகைமரபு, உருபியல் | 49-115 |
| 3 | உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல் | 116-231 |
| 4 | குற்றியலுகரப் புணரியல் | 232-273 |
| 5 | தொல்காப்பியம் – நன்னூல் ஒப்பீடு | 274-287 |

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

உரையாசிரியர் பாவலரேறு பேராசிரியர் ச. பாலசுந்தரம்

# அலகு -1

## (அ) நூன் மரபு

### நோக்கம் :

தமிழ் மொழியின் இலக்கண வளத்தை அறிதல், தமிழ் எழுத்துக்களின் வைப்புமுறை, வகை, தொகை, பகுப்பு, எழுத்துக்களின் அளபு, ஒலிநிலை, எழுத்துக்களின் வரிவடிவம், சுட்டெழுத்துக்கள், வினாஎழுத்துக்கள் ஆகியனவற்றை அறிதல்.

### எழுத்துக்களின் வகையும் வடிவமும் ஒலியளவும்

இசைப்பதும் ஒலிப்பதுமாகிய ஒலி எழுத்துக்கள் மரபுகளை உணர்த்தும் பகுதி என்பது இதன் பொருள் இஃது ஆறாவதன் தொகை மொழி. இத்தொகை, அன்மொழித் தொகையாய். எழுத்தொலிகளைப் பற்றிய இலக்கணங்கூறும் இயலை உணர்த்தி நின்றது. நூல் என்பது நூவல் என்னும் குறைவினையின் நீட்சியாய் ஆக்கம் பெற்ற சொல். நூவல் நூல் ஒவ் என்னும் குறைச் சொற்கிளவிகளான் ஆக்கம் பெற்றது. இதன் பொருள் நாவால் ஒலிக்கப் பெறுவது' என்பதாகும். நாவால் உந்தப் பெறும் ஒலி என்பது கருத்து. வழக்கின் கண் இச்சொல் "சினையிற்கூறும் முதலறிகிளவி" என்னும் ஆகுபெயரிலக்கணத்தான் (புத்தகமாகிய) நூலினை உணர்த்தலாயிற்று. இதன் இயற் பொருள் ஒலியெழுத்து என்பதாகும்.

மரபு என்பது (மருவு) மருவுதல் என்னும் தொழிற்பெயரின் அடியாகப் பிறந்த குறியீட்டுச் சொல்லாகும். தொன்று தொட்டு நியதியாக வருதல் என்பது இதன் பொருள். அ஀து ஈண்டுத் தமிழ் நெறியுணர்ந்த சான்றோரான் தொன்று தொட்டு வழங்கப்பெற்று வரும் இலக்கணநெறியை உணர்த்தி நின்றது. எனவே, இவ்வியலுள் கூறப்பெறும் எழுத்தொலி மரபுகள் தமிழ்மொழிக்கே உரியவை என்பது புலனாகும்.

# தமிழ் எழுத்துக்கள்

## முதல் எழுத்து

**எழுத்தெனப் படு(ப)வ**

**அகரமுதல் னகர இறுவாய்**

**முப்பஃ தென்ப**

**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே (1)**

தமிழ்மொழி எழுத்துக்களின் தொகையும் வகையும் முறையும் பெயரும் கூறுகின்றது.

தனித்துவரல் மரபினையுடைய எழுத்து எனச் சிறப்பித்துச் சொல்லப் பெறுவன. சார்ந்துவரல் மரபினையுடைய மூன்றுமல்லாமல் அகரமாகிய எழுத்து முதலாக னகரமாகிய எழுத்து ஈராக உள்ள முப்ப஀து என்பதாகும்.

## சார்பெழுத்து

**அவை தாம்**

**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**

**ஆய்தம் என்ற**

**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன** **(2)**

சார்ந்துவரல் மரபினையுடைய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் என்ற முப்பால் ஒலிப்பியல்புடையதும் ஆகிய மூன்றும் மேற்கூறப்பெற்ற முப்பது எழுத்தொடு ஒருபுடையதாக ஒத்த தன்மையன உடையதாம்.

## உயிரெழுத்துக்கள்

**ஔகார இறுவாய்ப்**

**பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப** **(8)**

அகர முதல் ஔகார இறுவாயாக உள்ள எழுத்துப் பன்னிரண்டும் உயிர் எனப் பெயர் பெறும் என்பதாம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

## மெய்யெழுத்துக்கள்

**னகர இறுவாய்ப்**

**பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப** **(9)**

ககரம் முதல் னகர இறுவாயாக உள்ள எழுத்துப் பதினெட்டும் மெய் என்னும் பெயர் பெறும்

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர ல, வ, ழ, ள, ற, ன.

## குறில்

**அவற்றுள்**

**அ இ உ**

**எ ஒ என்னும் அப்பா லைந்தும்**

**ஓரள பிசைக்கும் குற்றெழுத்தென்ப** **(3)**

மேற்கூறிய முப்பத்து மூன்றனுள் அ இ உ எ ஒ என்னும் அக்கூற்று எழுத்து ஐந்தும் ஒவ்வொன்றும் ஒரு மாத்திரையளவினதாய் இசைக்கும். அதனான் அவற்றைக் குற்றெழுத்து எனப் பெயரிட்டுக் கூறுவர்.

## நெடில்

**ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்**

**ஈரளபு இசைக்கும் நெட்டெழுத் தென்ப** **(4)**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் அக்கூற்று எழுத்து ஏழும் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரையளவினதாக இசைக்கும். அதனான் அவற்றை நெட்டெழுத்து என பெயரிட்டுக் கூறுவர்.

## வல்லினம்

**வல்லெழுத் தென்ப கசட தபற** **(19)**

மெய்பதினெட்டனுள் கசடதபற என்னும் இவ்வாறனையும் வல்லெழுத்து எனக் கூறுவர்.

## மெல்லினம்

**மெல்லிழுத் தென்ப ஙஞணநமன** **(20)**

ங ஞ ண ந ம ன என்னும் இவ்வாறனையும் மெல்லெழுத்து எனக் கூறுவர்.

## இடையினம்

**இடையெழுத்தென்ப யரல வழள (21)**

யரலவழள என்னும் ஆறனையும் இடையெழுத்து எனக் கூறுவர்.

## மாத்திரை

**கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே (7)**

கண் இமைத்தற்குரிய கால எல்லையும் கைந்தொடித்தற்குரிய கால எல்லையும் ஆகிய அளவையே ஒரு மாத்திரையின் அளபாகும் என்பது ஒசையளவினை நுட்பமாக உணர்ந்தோர் கண்டுரைத்த நெறியெனக் கூறுவர் புலவர்.

**மூவளபு இசைத்தல் ஓரெழுத்து இன்றே (5)**

எழுத்துக்களுள் எந்த ஒரு எழுத்தும் விகாரவகையானன்றி இயல்பாக மூன்று மாத்திரையளவற்றாய் இசைத்தலின்றி எனக் கூறுவர் ஆசிரியர்.

**நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (6)**

விளிக்கவும் பா என்னும் ஓசை நிகழவும் அசை நிறைக்கவும் பிறவாறு எழுப்பவும் எழுத்துக்களின் ஓசையை நீட்டுதலை விரும்பின் அவ்வளவிற்கு அவ்வளபுடைய எழுத்து இசையைப் பிளவுபடாமற் கூட்டி எழுப்புக. கூட்டப் பெற்ற அவ்வளபினையுடைய எழுத்துக்கள் வரிவடிவின் கண்ணும் அடையாளமாக எழுதிக் கொள்ளப் பெறும்.

## மெய், உயிர்மெய்களின் மாத்திரை

**மெய்யின் அளபே அரையென மொழிய (11)**

உயிரொடு இசையாமல் உயிரைச் சார்ந்ததும் உயிர்மெய்யினைச் ஒலிக்குமிடத்து மெய்யெழுத்து ஒவ்வொன்றிற்கும் மாத்திரை அளபு அரையெனக் கூறுவர்.

**மெய்யோடு இசையினும் உயிரியல் திரியா (10)**

சார்ந்துவரல் மரபினவாகிய எழுத்துக்கள் மூன்று மெய்யெழுத்திற்குக் கூறிய அவ்வியல்பினவாய் (ஒவ்வொன்றும்) அரை மாத்திரை பெற்று நிற்கும் என்று கூறுவர்.

## மகரக்குறுக்கம்

**அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**

**இசையிடன் அருகும் தெரியுங்காலை (13)**

பதினெண்மெய்களும் இதழியைந்து முக்குவளியாற் பிறக்கும் மகரப்புள்ளி எழுத்துத் தனக்குரிய அரைமாத்திரையினின்று குறுகி ஒலித்தலும் உடையதாகும். அதனை ஆராயுமிடத்து அங்ஙனம் ஒலிக்குமிடம் சிறுபான்மையாகும். இசையென்பது ஈண்டு ஒலி என்னும் பொருள்பட நின்றது. குறுகுமிடம் பின்னர்க் கூறப்படுதலின் இது கூறுவாம் என்னும் உத்தி

# எழுத்துக்களின் வடிவம்

## மகரத்தின் வடிவம்

**உட்பெறு புள்ளி உருவாகும்மே (14)**

அரையளபு குறுகும் மகரம் இதழியைந்து பிறவாமல் இதழ்சிறிது உள்வாங்க ஒடுங்கிப் பெறும் ஒலியளவிற்கேற்ப உருவாகி நிற்கும். உட்பெறுதலாவது இதழ் உள்மடங்கி நிற்றல், இதழ் மடங்கும் என்பது இதழியைந்து பிறக்கும். பகார மகாரம்' என்பதனாற் பெற்றாம்.

## மெய்யெழுத்தின் வடிவம்

**மெய்யின் இயற்கை புள்ளியொடு (ம்) நிலையல் (15)**

பிறப்பியலுட் கூறப்பெறும் முறைமையான் உருவாகி வடிவுபெறும். மெய்யெழுத்துக்களின் தன்மையாவது அவை ஒலிப்புடையனவாயும் நிற்கும்.

புணர்ச்சி விகாரத்தாற் குன்றிய புள்ளியொடும்' என்ற உம்மையாற் புள்ளியொடு நில்லாமல் உயிரோடு இயைந்து உயிர்மெய்யளவும் நிற்கும் என்று கொள்க. (உயிர்மெய் = உயிர்க்கும் மெய்)

எகர ஒகர வடிவம் - இகர உகர வடிவம்

**எகர ஒகரத்தியற்கையு மற்றே (16)**

இஃது உரையாசிரியன்மார் கொண்ட பிழையான பாடம். இந்நூல் பாடம். நெறிக்கியைந்த

'இகர உகரத் தியற்கையு மற்றே' என்பதே பாவலர் பாடம்.

சார்பெழுத்து மூன்றனுள் முப்பாற்புள்ளி என ஓதப்பெற்ற ஆய்தம் தவிர்ந்த ஏனைய குற்றியலிகரம். குற்றியலுகரம் ஆகியவற்றின் இயல்பும் மெய்யெழுத்திற்கு கூறிய அவ்வாறேயாம்.

அஃதாவது இவையும் அரை மாத்திரை அளவு புள்ளி பெற்று ஒலிக்கும் என்றவாறு. வரிவிடிவின்கண் அடையாளம் செய்து கோடல் இவற்றிற்கும் ஒக்கும்.

## உயிர்மெய் எழுத்தின் வடிவம்

**புள்ளியில்லா யெல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்**
**ஏனை உயிரொடு உருவுதிரிந் துயிர்த்தலும்**
**ஆயி ரியல உயிர்த்த லாறே (17)**

மெய் பதினெட்டும் ஒலிப்பில்லனவாய்த் தத்தமக்கு உரிய பிறப்பிடங்களில் தனித்தனி உருவாகி நின்று உயிர்ப்பொடு வெளிப்படுங்கால், அகர உயிரைத் துணைக் கொண்டு உயிர்க்குமிடத்துத் தம் உருத்திரியாமல் இசைத்தலும் ஏனைய உயிர்களைத்துணைக் கொண்டு உயிர்க்குங்கால் (அவ்வுயிர்கட்டுஏற்பத்) தம் உருச்சிறிது திரிந்திசைத்தலும் என உயிர்மெய் எழுத்துக்கள் இசைக்கும் முறைமையான் இருவகை இயல்பினை உடையவாம்.

## மெய்ம்மயக்கம்

**அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்**
**மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை (22)**

வளியிசையானும் பிறப்புமுறையானும் மூவகையனவாக மேல் ஓதப்பெற்ற பதினெட்டு மெய்களும் மொழிக்கு உறுப்பாக வழக்குப் பெற்று

இயலுமிடத்து, ஒன்றொடு ஒன்று தொடர்ந்து நிற்றலான் மெய்யொலி மயங்குதலை ஆராயுமிடத்து ...

இச்சூத்திரம் மேல்வரும் சூத்திரங்களுக்கு அவாய் நிலையாய் இயைந்து பொருள் விளக்கும் அதிகாரச் சூத்திரமாகும்.

## உடனிலை மெய்ம்மயக்கம்

**மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்**
**தம்முன் தாம்வரூஉம் ரழஅலங் கடையே (30)**

ஈழ என்னும் இரண்டுமல்லாத ஏனைய பதினாறு புள்ளி எழுத்துக்களும் தத்தமக்கு முன்னர்த் தாம் வந்து தமது ஒசை திண்ணிதாகப் புலப்பட மயங்கும் என்றவாறு.

ஒத்த எழுத்துக்கள் இணைந்து வருங்கால் நின்ற எழுத்தின் முன் வரும் எழுத்தின் ஓசை திண்ணிதாய் அழுத்தம் பெறுதலின் அதுவும் ஓராற்றன் மயக்கமே என்பதனை அறிவித்தற்கு 'மெய்ந்நிலை' சுட்டின் தம் முன் தாம் வரூஉம் என்றார். மெய்நிலை பொருள்நிலை, பொருளாவது ஈண்டு ஓசை. சுட்டுதல் கருதுதல், அஃதாவது ஒலியழுத்தத்தைக் கருதின் என்றவாறு.

## வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

**ட ற ல ள என்னும் புள்ளி முன்னர்க்**
**கசப என்னும் மூவெழுத் துரிய (23)**

மெய்ம்மயங்குடனிலை தெரியுங்காலைச் சொற்கு உறுப்பாக டற என்னும் வல்லெழுத்தும் லள என்னும் இடையெழுத்தும் புள்ளியாக நிற்க அவற்றின் முன் தொடரும் க ச ப என்னும் (உயிர்) மெய்யெழுத்துக்கள் அவ்வொலியொடு மயங்கற்கு உரியவாகும்.

**எ-டு :**

வட்கார் - கற்க, செல்க - கொள்க எனவும்

வெட்டி - முயற்சி, வல்சி நீள்சினை எனவும்

நுட்பம் - கற்பனை, செல்ப கொள்ப எனவும் வரும்.

**அவற்றுள்**

**லளகான் முன்னர் யவவும் தோன்றும் (24)**

மேற்கூறிய நான்கனுள் லள என்னும் இடையெழுத்துக்கள் புள்ளியாக நிற்க அவற்றின் முன் யவ என்னும் (உயிர்) மெய்யெழுத்துக்களும் தொடர்ந்து மயங்குதற்குரியவாம்.

**எ-டு :**

வில்யாழ் - வெள்யானை செல்வம்

கள்வர் என வரும் .

சொல்யாத்தான் - வில்வளைத்தான்

எனப் புணர்மொழியுள்ளும் வரும்

வில்யாழ் - வெள்யானை பண்புத்தொகை.

**ஙஞண நமன எனும்புள்ளி முன்னர்த்**

**தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே (25)**

ஙஞண நமன என்னும் புள்ளியெழுத்துக்கள் நிற்க நெடுங்கணக்கினுள் அவ்வவற்றின் மேலிடத்து நிற்கும் வல்லெழுத்துக்கள் நிரலே வந்து இவற்றின் ஓசையொடு மயங்குதற்குப் பொருந்துவனவேயாகும்.

நிலை ஒத்தன என மாறுக. நிலையாவது மயங்கும் நிலை. இவை மெல்லெழுத்தொடு தொடர்தலின் தம்வன்மை திரிந்து நிற்குமென்க.

**எ-டு :**

பொங்கர் - தஞ்சம், கொண்டல்,

**அவற்றுள்**

**ணனஃகான் முன்னர்க்**

**கசஞப மயவ அவ் ஏழும் உரிய** **(26)**

மேற்கூறப்பெற்ற ஆறனுள் ணகர னகரப்புள்ளிகளின் முன் மேற்கூறிய டகரறகரங்களேயன்றி ஒவ்வொன்றின் முன்னரும் கசஞபமயவ என்னும் ஏழு (உயிர்) மெய்யெழுத்துக்களும் தனித்தனியே வந்து அவற்றின் ஒசையொடு மயங்கற் குரியவாம்.

**எ-டு :**

வண்டு- வெண் சாந்து, வெண் ஞான்

**ஞநமவ என்னும் புள்ளி முன்னர்**

**யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே** **(27)**

ஞநம என்னும் மெல்லெழுத்தின் முன்னும் வ என்னும் இடையெழுத்தின் முன்னும் யகர (உயிர்) மெய் வந்து அவற்றின் ஒசையொடு மயங்குதல் பொருளுடையதயாம்.

**அவற்றுள்**

**மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும் (28)**

மேற்கூறியவற்றுள் மகரப்புள்ளியின் முன் யகரமேயன்றி வகர (உயிர்) மெய்யும் வந்து மயங்கும். வகரம் வந்து மயங்குங்கால் மகரம் தன் ஒலிகுன்றி உட்பெறு புள்ளி மகரமாகும் என்பதனை "வகாரமியையின் மகாரம் குறுகும்" என்பதனான் அறிக. இதனானும் மயக்கம் என்பது தனி எழுத்தொலி பற்றி ஆராய்ச்சியே என்பது புலனாகும்.

**எ-டு :**

தரும் வளவன்; நிலம் வலிது

**யரழ என்னும் புள்ளி முன்னர்**

**முதலா கெழுத்து நுகரமொடு தோன்றும் (29)**

யாழ என்னும் புள்ளி எழுத்துக்களின் முன்னர் மொழிக்கண் முதலாகி வரும் என்னும் கதநபமசவயஞ் என்னும் ஒன்பது உயிர் மெய்யெழுத்தும் மொழி முதலாகாமல் புணர்ச்சி இயல்பான் மிக்குவரும். ஙகர ஒற்றும் தனித்தனியே வந்து அவற்றின் ஒசையொடு மயங்கும்.

# சுட்டும் வினாவும்

## சுட்டெழுத்து

**அ இ உ அம்மூன்றும் சுட்டு (31)**

அ, இ, உ என்னும் அம்மூன்று உயிரெழுத்துக்களும் சுட்டுதற்குரியவாதலின் சுட்டு என்னும் பெயரான் வழங்கப்படும்.

## வினா எழுத்து

**ஆ கா ஒ அம்மூன்றும் வினாஅ (32)**

அ, ஏ, ஒ என்னும் அம்மூன்று எழுத்துக்களும் வினா என வழங்கப்பெறும். இதுவும் ஆட்சிப்பொருட்டாய இலக்கணக் குறியீடேயாம்.

**அளபிறந்திசைத்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார்புலவர் (33)**

பண்ணத்தியாயும், தேவபாணியாயும், பண்ணமைந்த பரிபாடலாயும் வரும் இயற்றமிழ்ச் செய்யுள், உயிர் எழுத்துக்கள் நான்கு மாத்திரையினும் கடந்து இசைத்தலும் ஒற்றெழுத்துக்கள் அளபெடையைக் கடந்து இசைத்தலும் உள, என்று மொழிவனவற்றை, ஏழிசையொடு பொருந்திய நரம்பினையுடைய யாழ் நூலிடத்தனவாம் என்று கூறுவர் இயற்றமிழாசிரியர்.

## தொகுப்புரை:

தமிழ் எழுத்திலக்கணச் சிறப்பு, இலக்கணத்தின் தேவை, எழுத்துக்களின் வகை, தொகை, பகுப்புமுறை, முதல் எழுத்துக்கள், சார்பெழுத்துக்கள், எழுத்துக்களின் ஒலி அளவு, மாத்திரை, உயிர் எழுத்து, மெய்எழுத்து, எழுத்துக்களின் வரிவடிவம், மகர, எகர, ஒகரத்தின் வரிவடிவநிலை, உயிர் மெய் எழுத்துக்கள், புள்ளிபெறும் எழுத்துக்கள், வல்லினம் ,மெல்லினம் , இடையினம், எழுத்துக்களின் மயக்கம்,

உடனிலை, வேற்றுநிலை மெய்ம்மயக்கங்கள், சுட்டு, வினா எழுத்துக்கள் போன்றவை தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

## நூன்மரபு முற்றியது

### (அ) நூன் மரபு

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மெய்யெழுத்தின் மாத்திரைஅளவு

 அ) ½ ஆ) 1 இ) 2 ஈ) ¼

2. போன்ம் இதில் ‘மகரமெய் பெறும்’ மாத்திரை அளவு

 அ) கால் ஆ) அரை இ) ஒன்று ஈ) இரண்டு

3. பாக்கு, மூச்சு என்பன எவ்வகைக் குற்றியலுகரம்?

 அ) வல்லினம் ஆ) மெல்லினம் இ) இடையினம் ஈ) உயிரினம்

4. அங்காந்து இயலும் எழுத்துக்கள்

 அ) அ, ஆ ஆ) இ,ஈ இ) எ,ஏ ஈ) ஐ, ஔ

5. இதழ்குவி எழுத்துக்களில் ஒன்று

 அ) ஆ ஆ) ஏ இ) ஐ ஈ) ஔ

**குறுவினாக்கள்**

1. முதலெழுத்துக்கள் எத்தனை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்?
2. உயிர் எழுத்துக்களின் வகைகள் யாவை?

3. உயிர்க்குறிலின் மாத்திரை எத்தனை?
4. ஆய்த எழுத்திற்கு எத்தனை மாத்திரை?
5. பகரத்திற்கும் மரகத்திற்கும் உள்ள வேறுபாடாகத் தொல்காப்பியனார் குறிப்பிடுவது யாது?
6. மெய்ம்மயக்கம் என்றால் என்ன?
7. உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன?
8. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன?
9. சுட்டெழுத்துக்கள் யாவை?
10. முதலெழுத்துக்கள் விளக்குக.

**கட்டுரை வினாக்கள்**

1. சார்ப்பெழுத்துக்கள் யாவை? கட்டுரைக்க.
2. தமிழ் எழுத்துக்களின் மாத்திரையைக் குறிப்பிடுக.
3. தமிழ் எழுத்துக்கள் வடிவங்களைக் குறிப்பிடுக.
4. மெய்ம்மயக்க வகைகளை விளக்குக.
5. சுட்டு, வினா ஆகியவற்றை விளக்குக.
6. "இகர உரகத்து இயற்கையும் மற்றே' விளக்குக.

# (ஆ) மொழி மரபு

## நோக்கம் :

முதல்எழுத்துக்கள், சார்பெழுத்துக்கள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய எழுத்துக்கள் நிலை அறிதல், அளபெடை,

ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள், எழுத்துக்களின் இயக்கம், முதல் எழுத்துக்கள், மொழி இறுதி எழுத்துக்கள் ஆகியனவற்றை அறிந்துகொள்ளுதல்

## மொழிமரபு:

மொழிமரபு என்னும் தொகைமொழி, மொழியினது மரபுகளைக் கூறும் இயல் என விரியும் அன்மொழித்தொகை. நூன்மரபிற் கூறிய எழுத்துக்கள் மொழியாகும். முறைமையும், அவை மொழிக்கண் நிற்கும் நிலையும், மொழிப்பொருள் மாறாமல் எழுத்து மாறிவரும். போலிமரபும் பற்றிக்கூறுதலின் இவ்வியல் மொழிமரபு எனப்பட்டது.

மேற்கூறிய குற்றியலுகரம் முதலாய மூன்றும் சார்ந்துவரல் மரபின ஆகலானும், எழுத்தளவினை நீட்டம் வேண்டின் நீட்டுதல் மொழிக்கண் நிகழ்தலானும் அவற்றின் இயல்புகளை நூன்மரபின் ஒழிபாக இவ்வியலின் தொடக்கத்தில் முறையாக வைத்துக் கூறிப் பின்னர் மொழியாக்கமும் போலியும் மொழி முதனிலை கடைநிலை இருநிலைகளும் கூறுகின்றார்.

## சொல்லில் எழுத்துக்கள் இடம் பெறல்

மொழி மரபு என்னும் தொகைமொழி. மொழியினது மரபுகளைக் கூறும் இயல் என விரியும் அன்மொழித்தொகை. நூன் மரபிற் கூறிய எழுத்துக்கள் மொழியாகும் முறைமையும் அவை பொழிக்கண் நிற்கும் நிலையும் மொழிப்பொருள் மாறாமல் எழுத்து மாறி வரும். போலிமரபும் பற்றிக் கூறுதலின் இவ்வியல் மொழிமரபு எனப்பட்டது.

**குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**

**யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**

**ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே (1)**

சார்ந்து வரல் மரபின் எனப்பெற்ற மூன்றனுள் குற்றியலிகரம் 'மியா' என்னும் உரையசையிடைச் சொல்லின்கண் அச்சொல்லின் உறுப்பாக நிற்கும் யா என்னும் எழுத்திற்கு மேல் அவ்விடத்து வரும் மகர மெய்யை ஊர்ந்து நிற்கும்.

## புணர்மொழி குற்றியலிகரம்

**புணரியில் நிலையிடைக் குறுகலும் உரித்தே**

**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும் (2)**

மேற்கூறிய குற்றியலிகரம், சொற்கள் புணர்ந்தியலும் நிலைமையின்கண் தனக்குரிய அரைமாத்திரையினும் குறுகி ஒலித்தற்கும் உரியதாகும். அங்஬னம் அது குறுகி ஒலிக்குமிடத்தினை உணரக்கூறின் அவ்விலக்கணம் குற்றியலுகரப் புணரியலுள் விளக்கமாகும்.

**எ-டு:**

ஆடு + யாது =ஆடியாது

## குற்றியலுகரம்

**நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி ஈற்றும்**

**குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே (3)**

குற்றியலுகரம் ஈரெழுத் தொருமொழியின்கண் நெட்டெழுத்தின் பின்னரும் இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழிகளினது இறுதியிலும்

ஆறுவல்லெழுத்தினையும் ஊர்ந்து நிற்றல் வேண்டும். நெட்டெழுத்தென்றது. உயிர் உயிர்மெய்கட்குப் பொதுப்பட நின்றது.

## புணர்மொழிக் குற்றியலுகரம்

**இடைப்படின் குறுகும் இடனுமா றுண்டே**

**கடப்பா டறிந்த புணரிய லான (4)**

மேற்கூறிய குற்றியலுகரம் நெறிமுறை அறிதற்குரிய புணர்ச்சி இயல்பினான் இரு மொழிகளுக்கு இடையே நிற்பின் தனது அரைமாத்திரையளவினும் குறுகி ஒலிக்கும் பக்கமும் உண்டெனக் கூறுவர்.

# அளபெடை

**குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**

**நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே (8)**

செய்யுட்கண் வரும் மொழியிடத்து (பா என்னும் உறுப்பு நிகழ்தற்கும் சீராதற்கும்) வேண்டுமளவின்றி எழுத்துக் குன்றிசைப்பின் அதன்கண் உள்ள நெட்டெழுத்தின்பின் அதன் இனமாகிய உயிர்க்குற்றெழுத்து அதனைச் சார்ந்து நின்று இசை நிறைக்கும்.

**ஐ ஔ என்னும் ஆயி ரெழுத்திற்கு**

**இகர உகரம் இசைநிறை வாகும் (9)**

இனக்குற்றெழுத்தில்லாத ஐகாரம் ஔகாரம் என்னும் அவ்இரண்டெழுத்திற்கு முறையே இகரமும் உகரமும் ஒத்த குற்றெழுத்தாய் இசை நிறைவு செய்யும்.

# மொழி அமைப்பு

## ஓரெழுத்தொரு மொழி

**நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி (10)**

தனித்து ஓரெழுத் தொருமொழியாகி வருவன நெட்டெழுத்து ஏழுமேயாம்

**குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே (11)**

குற்றெழுத்து ஐந்தும் தனித்து நிறைவுடைய மொழியாக வருதலில்லை. நிறைவுடைய மொழியாவன பெயரும் வினையுமாம். எனவே குறைவுடையனவாய் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாக வரும் என்பது கருத்து.

## ஈரெழுத்தொருமொழி - தொடர்மொழி

**ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொருமொழி**
**இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே (12)**

எழுத்தானாம் மொழிகளின் வகை தோன்றிய முறைமை ஒரெழுத்தானாகிய தொரு வகையும் ஈரெழுத்தானாகிய தொரு வகையும் இரண்டினும் மிக்க எழுத்தானாகிய தொரு வகையுமுட்பட மூன்று வகைகளேயாம்.

# ஒலிப்பு முறை

**மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் (13)**

ஒலிப்பில்லாத நிலைமையுடைய மெய்யெழுத்துக்களின் இயக்கம் அகரச் சாரியையொடு பொருந்தி வரும் என்றது. மெய்யெழுத்துக்கள் தம்மைச் சுட்டி உணர்த்த வருமிடத்து அ என்னும் சாரியை இடைச்சொல்லைப் பொருந்தியே இயங்கும்.

## ஈரொற்று மயக்கம்

**யரழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்**
**கசதப ஙஞநம ஈரொற் றாகும் (15)**

தனிமொழியின் இடையே யரழ என்னும் மூன்றும் ஒற்றாய் முன் நிற்க. அவற்றின் பின்னர்க் கசதப ஙஞநம என்னும் எட்டும் ஒற்றாய்த் தனித்தனி இணைந்து ஈரொற்றாக நிற்றற்காகும்.

**அவற்றுள்**
**ரகார ழகாரம் குற்றொற் றாகா (16)**

மேற்கூறியவற்றுள் முன்னிற்பன மூன்றனுள் ரகரமும் ழகரமும் கசதப ஞவநம் என்பவற்றொடு இணைந்து வருங்கால் தனிக்குற்றெழுத்தினைச் சார்ந்து நிற்றற்காகா.

**குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்**
**தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல (17)**

குற்றெழுத்து நெட்டெழுத்தென்னும் குறியீடுகளைத் தொல்லாசிரியன்மார் மாத்திரையளவையாற் கொள்ளுதலான் ஓராற்றான் தொடர்மொழியின் எல்லாம் செய்கைப்படுமிடத்து நெட்டெழுத்து இயல்பினவாகும்.

## மகரக்குறுக்கம்

**னகாரை முன்னர் மகாரங் குறுகும் (19)**

செய்யுளுள் சொல்லிறிறுதிக்கண் ஈரொற்றாய் நிற்குமென்ற னரகத்தின் முன்னிற்கும் மகரம் தன் அரை மாத்திரையிற் குறுகும்.

## ஐகாரக் குறுக்கம்

**ஓரள பாகும் இடனுமா ருண்டே**

**தேருங் காலை மொழிவயினான (24)**

மொழிக்கண் மேற்கூறிய அய் என்னும் மாற்றெழுத்துக்கள் கூறுமிடங்களை ஆராயுமிடத்து அவை ஒரு மாத்திரை அளவினவாய் நிற்குமிடமும் உண்டு.

# போலி

## ஐகாரப் போலி

**அகர இகரம் ஐகாரம் ஆகும் (21)**

மொழிமுதற்கண் அகரமும் இகரமும் இணைந்து ஐகாரத்திற்கு மாற்றெழுத்துக்களாகும். மாற்றெழுத்தினைப் போலி எழுத்தென்பது இடைக்கால வழக்காகும்.

**அகரத் திம்பர் யகரப் புள்ளியும்**

**ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (23)**

அகரத்தின் பின் இகாமேயன்றி அகரமும் அதன்பின் நிற்கும் யகர ஒற்றும் ஐ என்னும் நெட்டெழுத்தினது பொருள்படத் தோன்றி வரும்.

## ஔகாரப் போலி

**அகர உகரம் ஔகார மாகும் (22)**

மொழி முதற்கண் அகரமும் உகரமும் இணைந்து ஔகாரத்திற்கு மாற்றெழுத்துக்களாகும்.

**இகர யகரம் இறுதி விரவும் (25)**

மொழி இறுதிக்கண் இகரமும் யகரப் புள்ளியாயும் விரவி வரும்.

# மொழி முதல் எழுத்துக்கள்

## மொழி முதலில் உயிரெழுத்துக்கள்

மொழி என்பதற்குச் சொல் என்பது பொருள். அதை அடிப்படையாகக் கொண்டு சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்களை வகைப்படுத்தியமை இயம்புதலாகும்.

**பன்னீ ருயிரும் மொழிமுல லாகும் (26)**

உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழிக்கு முதலாக வருதற்காகும்

**எ-டு :**

அன்பு, ஆவி, இனிமை, ஈகை, உந்தி, ஊழி, என்பு, ஏணி, ஐயை, ஒட்டகம், ஓங்கல், ஔவியம்

**உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா (27)**

மெய், புள்ளி, உயிர்மெய் என்னும் மெய்யெழுத்து நிலை மூன்றனுள் உயிர்மெய்யல்லாத ஏனை மெய்யும் புள்ளியும் மொழிக்கண் முதலாக வாரா. எனவே உயிர் மெய்யாயே வரும் என்றவாறு

## மொழி முதலில் மெய்யெழுத்துக்கள்

**க த ந ப ம எனும் ஆவைந் தெழுத்தும்**

**எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே (28)**

க த ந ப ம என்னும் ஐந்து மெய்களும் ஒவ்வொன்றும் பன்னிரண்டு உயிரிசைகளோடு கூடி முதலாதற்குச் செல்லும், உயிர் என்றது உயிரெழுத்தின் இசையினை (ஆர்-அசை) .

**எ-டு :**

கனி, கானல், கிணை, கீரி, குவளை, கூந்தல், கெண்டை, கேளிர், கைதை, கொடை, கோடல், கௌவை எனவும் தளை, தாழை, திங்கள், தீணி, தும்பை, தூணி, தெவ்வர், தேவர், தையல், தொண்டு, தோண்டு, தௌவை எனவும் நளி, நாரை, நிலம், நீளம். நுங்கு. நூல் நெற்றி, நேயம், நைவளம். நொய்யல், நோன்பு, நௌவி எனவும் பழம், பாகன், பிளை, பீடு, புரை, பூமி, பெடை, பைதல், பொருப்பு, போர்வை, பௌவம் எனவும் மழை, மாடம், மின்னல், மீளி, முருகு, மூக்கு, மெய், மேவல், மையல், மொழி, போனை, மௌவல் எனவும் வரும்.

**சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**

**அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே (29)**

சகரமாகிய எழுத்தும் அ ஐ ஔ என்னும் மூன்றும் அல்லாத ஏனைய உயிரோசைகளுடன் மேலனவற்றைப் போல மொழிமுதலாதற்குச் செல்லும். உம்மை எச்சு உம்மை மூன்றும் என்னும் முற்றும்மை தொக்கது. கிளவி கிளந்தலை உடையது என எழுத்தின் மேலாயிற்று.

**உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்**

**வஎன் எழுத்தொடு வருதல் இல்லை** **(30)**

வகரமென்னும் மெய்யெழுத்து உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிரிசைகளோடு கூடி மொழிக்கு முதலாக வருதலில்லை. ஏனையெட்டொடும் கூடிவரும் என்றவாறு. ஒடுவை உயிரொடு கூட்டுக.

**ஆஎ ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய** **(31)**

ஞகாரம் என்னும் மெய் மொழிமுதலாதற்கு ஆ எ ஒ என்னும் மூன்று உயிரோசைகளும் உரியவாம்.

**ஆவோ டல்லது யகர முதலாது** **(32)**

யகரமெய் ஆ என்னும் உயிரிசையோடல்லாது ஏனைய உயிரிசைகளோடு கூடிமொழி முதலாகாது.

**எ-டு:**

யா, யாழ், யானை, யாங்கு என வரும். 'யவனர்' என்பது திசைச்சொல் யவன் என்பது யாவன் என்பதன் விகாரம். இனி யூபம் என்னும் எழுத்தொடு புணர்ந்த வடசொல் புறனடையாற் கொள்ளப்படும். யுகம், யூகம், யோகம், யெளனம் முதலியவை இசையாது சிதைந்தனவாதலின் கொள்ளப்பெறா என்க.

**முதலாஏன தம்பெயர் முதலும்** **(33)**

உயிர்மெய்யாம் மொழி முதலாகா எனக்கொள்ள வைத்த நடண ரலழறளன என்னும் ஒன்பது மெய்களும் சில உயரிசைகளொடு வரா என

மேல் விலக்கப்பெற்ற ஏனையவும் தம்பெயரைச் சுட்டி வழங்குமிடத்து முதலாக வரும்.

## மொழி முதலில் குற்றியலுகரம்

**குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் (34)**

சார்பெழுத்து மூன்றனுள் குற்றியலுகர எழுத்து முறைப்பெயர்களுள் முன்னிலைப்பெயர் ஒன்றன் மருங்காகி, ஒற்றாய் நிற்கும் நகரப்புள்ளியின் மேல் உள்ள நகர மெய்யை ஊர்ந்து மொழிக்கு முதலாகும். (எ.டு) நுந்தை.

**முற்றிய லுகரமொடு பொருள் வேறுபடா அ (து)**
**அப்பெயர் மருங்கின் நிலையிய லான (35)**

மேற்கூறிய குற்றியலுகரம் நுந்தை என்னும் பெயரிடத்து நிற்றலான் முற்றியலுகரத்தொடு பொருளான் வேறுபடாது என்றது 'கதநபம' எனும் என்ற நூற்பாவான் நகர மெய் எல்லா உயிரொடும் செல்லும் என்றதனான் நகர மெய்யை ஊர்ந்து முற்றியலுகரமும் வருமன்றே? அவ்வழி அதுவும் நுந்தை என நிற்கும் அங்ஙனம் முற்றியலுகரம் ஊர்ந்து நிற்கும் நுந்தை என்பதும் குற்றியலுகரம் ஊர்ந்து நிற்கும் நுந்தை என்பதும் பெயர் ஆதலின் பொருள் வேறுபடாது என்றவாறு .

**எ-டு :**

| | | |
|---|---|---|
| குற்றியலுகம் | - | முற்றியலுகரம் |
| **(எ.டு)** | - | **(எ.டு)** |
| நாடு (ஊர்) | - | நாடு (ஆராய்சு) |
| காது (செவி) | - | காது, (கொல்வாயாக) |

# மொழி இறுதி எழுத்துக்கள்

## மொழி இறுதியில் உயிரெழுத்துக்கள்

**உயிர் ஔ எஞ்சிய இறுதி யாகும் (36)**

ஔகார உயிர் தவிர்ந்த ஏனைய பதினொரு உயிர் எழுத்துக்களும் மொழி இறுதிக்கண் நிற்றற்கு ஆகும்.

குற்றுயிர்கள் தனித்து ஈறாகா, அளபெடையின் கண் ஈறாகும் என்க. இனி ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே (இடை -33) எனப் பின்னரும் வலியுறுத்துவார்.

**கவ வோ டியையின் ஔவு மாகும் (37)**

மேல் விலக்கப்பட்ட ஔகாரம் ககர வகர மெய்களோடு இணைந்த உயிர்மெய்யாயின் ஈறாக நிற்றற்காகும்.

உயிர்மெய் ஓரெழுத்தே எனினும் ஓசைபற்றி புணரியல் விதி கூறுதலானும் “உயிர் மெய்யிறும் உயிரீற்றே” என்பது இலக்கணமாகலானும் ஈண்டுகூறும் மொழிநிலைகள் புணரியலுக்குக் கருவிகளாகவானும் “கவவோடியையின் ஔரளவுமாகும்" என்றார்.

## எகரம் அளபெடையில் இறுதியில் வருதல்

**எ என வருமுயிர் மெய்யீ றாகாது (28)**

எ எனப்படும் உயிர்எழுத்து மெய்யொடு கூடி மொழியீறாக வராது, அளபெடையாக ஈறாகும். என்பது கருத்து. "ஈற்று நின்றிசைக்கும் ஏ என் இறுதி, கூற்றுவயின் ஓரளபாகலும் உரித்தே" (இடை - 38) என்பதனான்

மெய்யோடு கூடி ஈறாகுங்கொல் என்னும் ஐயம் நீங்க, 'ஆகாது' என வலியுறுத்தியவாறு.

## ஓகரம் அளபெடையில் இறுதியில் வருதல்

**ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே (39)**

மேற்கூறிய எகாமேயன்றி ஒகரமும் நகர மெய்யோடு கூடி வருதலல்லாத இடத்து அவ்விலக்கணத்தே ஆகும் என்றது ஒகரம் நகர மெய்பொடு கூடியல்லது பிறமெய்களொடு கூடி மொழி இறுதிக்கண் வாராதென்றவாறு.

## எ-டு :

நொக் கொற்றா - நொ அலையல் என வரும்

## ஏகாரமும் ஓகாரமும்

**ஏ ஓ எனும் உயிர் ஞகாரத் தில்லை (40)**

ஏகார ஓகாரங்கள் என்னும் உயிரெழுத்துக்கள் ஞகர மெய்யோடு கூடி ஈறாதல் இல்லை. ஏனைய மெய்களோடு கூடி ஈறாகும்.

பொருட்பேற்றால் ஏனையமெய்களோடு கூடி ஈறாகும் என நின்றதெனினும் இவற்றிற்கும் இனி வருவனவற்றிற்கும் ஙகரமெய் ஒழியக் கொள்க. என்னை ஙகரம் ஒரு மொழியின் முதலிலோ ஈற்றிவோ மொழியாக்கம் பெற்று வாராமையானும் குற்றியலிகரம், குற்றியலுகரம் இதனை ஊராமையானும் என்க.

## உகரமும் ஊகாரமும்

**உ ஊ காரம் நவவொடு நவிலா (41)**

உகர ஊகாரம் ஆகிய உயிரெழுத்துக்கள் நகரமெய் ஆகியவற்றொடு கூடி மொழியிறுத்திக்கண் இசைக்கமாட்டா. ஏனைய மெய்களோடு கூடி இசைக்கும்.

**உச்ச காரம் இருமொழிக் குரித்தே (42)**

சகரத்தொடு கூடி வரும் முற்றியலுகரம் இரு சொற்களுக்கு உரித்ததாகும்.

**எ-டு :**

உசு, முசு, என வரும். பசு, வசு முதலியன ஆரியச் சொற்கள்.

அரசு, முரசு என்றார் போல வரும் ஏனையவை. புணர்மொழி நோக்கி முற்றிய லுகரமாயும் குற்றியலுகமாயும் நிற்றற்கேற்பன வாதலின் திரிபின்றி முற்றுகரமாக வருவன இவை இரண்டுமே என வரையறை கூறினார்.

**உப்ப காரம் ஒற்றென மொழிப**

**இருவயின் நிலையும் பொருட்டா கும்மே (43)**

பகர மெய்யை ஊர்ந்து வரும் முற்றுகரச்சொல் ஒன்றே. அஃது தொழிற்பெயர். ஏவல் வினை ஆகிய இரண்டிடத்தும் நிற்கும் பொருண்மையுடையதாகும்.

**எ-டு :**

தபு, நீதபு என வரும். தபு கெடுவாயாக! பெயராயின் தவறு என்பது பொருளாம் அது இக்காலத்து தப்பு என வழங்கும்.

**எஞ்சிய வெல்லாம் எஞ்சுத லிலவே (44)**

'கவவோடியையயின்' ஔவுமாகும் என்பது முதலாக இதுகாறும். விதந்து கூறப்பட்ட ஔ, எ. ஓ. எ, ஒ, உ, ஊ என்பவை தவிர்ந்த அ ஆ இ ஈ ஐ ஆகிய ஐந்து உயிர்களும் எல்லா மெய்களோடும் கூடி ஈறாதற்குக் குறைவில.

எஞ்சியவை எல்லா மெய்யொடும் ஈறாம் என்றாற்போலக் கூறாமல் எஞ்சுதல் இல் என எதிர்மறை முகத்தாற் கூறினமையின் ஞகரம், ஒழிந்த ஏனைய மெய்களே கொள்க.

**ஞண நமன யரல வழள என்னும்**

**அப்பதி னொன்றே புள்ளி யிறுதி** **(45)**

ஞண நமன யரல வழள என்னும் அப்பதினொரு புள்ளிமெய்களே மொழியிறுதியில் வரும். ஏகாரத் தேற்றம்.

**எ-டு :**

உறிஞ், விண், வெரிந் வளம், வான், செய், வேர், வேல், தெவ், யாழ், வேள் எனவரும் வெரிந் என்பது வெந் எனவும் வரும். மெல்லெழுத்தாதல் இனம் பற்றினகரத்தை இடையே சேர்த்துக் கூறினார்.

**உச்சகாரமொடு நகாரம் சிவனும்** **(46)**

நகரப்புள்ளி மேற்கூறிய சகர உகரத்தைப் போல இரண்டே சொற்களில் ஈறாக வரும்.

**உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே**

**அப்பொருள் இரட்டாது இவணை யான** **(47)**

ஓகாரம் மேற்கூறிய பகர உகரத்தொடு ஒத்த நிலைமைத்து, ஆயினும் இது அதுபோலப் பொருள் இரண்டாகாது. என்றது; ஞகரப்புள்ளி தபு என்பது போல ஒரு சொல்லில் மட்டும் ஈறாக வரும் எனினும் அதுபோல இது இருபொருள் தராது. என்றவாறு.

அப்பொருள் என்றது அதுபோல என்னும் பொருட்டாய் நின்றது. இவ் ஆடையும் அந்நூலானியன்றது என்புழிப் போல என்க. இவணை என்பதில் ஐகாரம் சாரியை.

**எ-டு:**

**உரிஞ் என வரும்.**

**வகரக் கிளவி நான்மொழி ஈற்றது** **(48)**

வகரமாகிய புள்ளி எழுத்து நான்கு சொற்களை ஈறாக உடையதாகும்.

**எ-டு:**

அவ், இவ், உவ், தெவ் என வரும்.

கதவு, புதவு, வரவு என்றாற் போல வருவனவற்றுள் இறுதி உகரம் சாரியை என்பதை உணர்ந்தோரும் இவை வகராறாம் கொல்? என மயங்குதலின் ஆண்டு நிற்கும் வகரமெய் சாரியை உகரத்தை ஏற்க வந்த உடம்படுமெய் என்பதை உணர்த்த வகர ஈற்றுத் சொற்களை வரையறுத்தோதினார்என அறிக.

**மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**

**னகரத் தொடர்மொழி ஒன்பஃதென்ப**

**புகரறக் கிளந்த அஃறிணை மேன** **(49)**

இதன் பயன் மகர னகரங்கள் ஒன்றற்கொன்று மாற்றெழுத்தாக வரும் என்பதும். னகராஈற்று அஃறிணைச் சொற்களுள் சில மாற்றெழுத்துப்பெற்று வாரா என்பதும் உணர்த்துதலாம்.

னகரப் புள்ளியை ஈறாக உடைய (ஈரெழுத்தொரு மொழியல்லாத) தொடர்மொழிகளுள், மகர ஈற்றுத் தொடர் மொழிகளாக மயங்குதலினின்று வரையறுக்கப்பெற்றவை, அஃறிணைப் பொருள்மேல் குற்றமறக்கிளக்கப் பெற்ற ஒன்பது சொற்கள் எனக் கூறுவர் புலவர்.

**எ-டு :**

எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், சுடான், வயான் என வரும்.

## தொகுப்புரை:

மொழி மரபு என்பதன் விளக்கம், குற்றியலுகரம், குற்றியலுகரம், ஆய்தம், அளபெடை சொல்லாக்க நிலைப்பாடுகள், எழுத்துக்களின் இயக்கம், தனிமெய்களின் இயக்கம், உயிர்மெய்களின் இயக்கம், ஈரொற்று உடனிலை, தொடர்மொழி நிலை , போலி எழுத்துக்கள், மொழிக்கு முதலாக அமையும் எழுத்துக்கள், மொழிக்கு இறுதியில் அமையும் எழுத்துக்கள், உச்சகாரம், உப்பகாரம், மொழி இறுதி ஆகாக மெய்கள் போன்றவை விளக்கப்பட்டன.

**மொழிமரபு முற்றியது**

## (ஆ) மொழி மரபு

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உ,ஊ,ஒ,ஓ என்னும் நான்கு உயிரும் எவ்வெழுத்தோடு வருவதில்லை

   அ) க ஆ) ப இ) ர ஈ) வ

2. குற்றெழுத்துக்கள் பெறும் சாரியை.

   அ) கரம் காரம் கான் ஆ) கரம் இ) காரம் ஈ) கான்

3. உடம்படு மெய்யெழுத்துக்கள்.

   அ) ய,ப் ஆ) வ்,ப்; இ) ய்,ச் ஈ) ய்,வ்

4. பருத்தி +செடி= பருத்திச்செடி என்றமைவது

   அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) இயல்பு

5. உயிரெழுத்துக்கள் நிலைமொழியாக நின்று வருமொழி நாற்கணத்தோடு புணர்தல்

   அ) உயிர் மயங்கியல் ஆ)புள்ளி மயங்கியல் இ)உருபியல்

   ஈ) குற்றியலுகரப் புணரியல்

**குறுவினாக்கள்**

1. குற்றியலிகரம் என்றால் என்ன?
2. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. ஆய்தம் வருமிடத்தை விளக்குக.
4. அளபெடுக்கும்எழுத்துக்கள் எவை?

5. சொல் உருவாகும் நிலை குறித்து தொல்காப்பியனார் குறிப்பிடுவன வற்றைக் கூறுக

6. ஓ ரெழுத்தொரு மொழி - சிறு குறிப்பு வரைக.

7. மகரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

8. மொழிமுதல் குற்றியலுகரம் - விளக்குக.

9. போலி - சிறு குறிப்பு வரைக.

10. மொழிக்கு முதலில் வரும் உயிரெழுத்துக்கள் யாவை?

**கட்டுரை வினாக்கள்**

1. மொழிக்கு இறுதியில் வரும் மெய்யெழுத்துக்கள் யாவை?

2. மொழி இறுதியில் உயிர்எழுத்துக்கள் இடம் பெறுமா விளக்குக.

3. உச்சகாரம் மொழிக்கு இறுதியில் வரும் இரு சொற்கள் யாவை?

4. உப்பகாரம் மொழிக்கு இறுதியில் வரும் ஒரே சொல் எது?

5. மொழிக்கு இறுதியில் வரும் உயிர் மெய் எழுத்துக்கள் யாவை?

# (இ) பிறப்பியல்

## நோக்கம்:

எழுத்துக்களின் பொதுப்பிறப்பினை அறிதல், உயிர் எழுத்த எழுத்துக்கள் ஆகியன பிறத்தல், வல்லின, மெல்லின எழு ஆக்கநிலை, வளிஇசை வேறுபாடு ஆகியன அறிதல் .

## பிறப்பியல்

எழுத்துக்களை வரையறை செய்து கொண்ட பின்னரே அவை பற்றிய பிறப்பியல்புகளைக் கூறுதல் முறைமையாதலின் நூன் மரபிலும் மொழி மரபிலும் அவற்றின் தொகைகளையும், இயக்கங்களையும் வரையறை செய்து, அவற்றின் பின்னரும் சொற்கள் நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியாயும் தொடருங்கால் அவற்றின் ஈற்றிலும் முதலிலும் நிற்கும் எழுத்துக்கள் ஓரியல்பும் மூன்று திரியும் கொள்ளும் இயல்பினை அவற்றின் பிறப்பமைதிகாட்டி உணர்த்தல் வேண்டுதலின் புணரியலுக்கு முன்னருமாக இப்பிறப்பியலை ஆசிரியர் ஒதுகின்றார்.

மேலிரண்டியல்களுள் கூறப் பெற்ற எழுத்துக்களின் பிறப்பமைதி கூறுதலின் இது பிறப்பியல் எனப் பெயர் பெற்றது. பிறப்பாவது கருக்கொண்டு உருப்பெற்று வடிவமைந்து வெளிப்படும் நிலையாகும்.

### எழுத்துக்களாவது பொதுப்பிறப்பு

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**

**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**

**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**

**அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்**

**உறுப்புற் றமைய, நெறிப்பட நாடி**

**எல்லா எழுத்தும் சொல்லுங் காலை**

**பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல**

**திறப்படத் தெரியும் காட்சி யான** (1)

எல்லா எழுத்தும் மொழிக்கு உறுப்பாக நிகழும் எல்லா எழுத்துக்களும் உந்திமுதலா முந்து வளிதோன்றித் தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலை இ கொப்பூழினிடமாகத் தோன்றி மேலெழும் (உதானன் என்னும்) ஒசைக்காற்று, தலையும் மிடறும், நெஞ்சுமாகிய மூவகைக் களத்தும்நிலை பெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண் முறைநிலையான் உறுப்புற்றமைய பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமுமாகிய ஐவகை வினைக் களங்கள் உட்பட அவ்எட்டு வகையாகிய தன்மையுடைய உறுப்புகளைப் பொருந்திய மைதலான், நெறிப்பட நாடிச்சொல்லுங்காலை அவற்றை, அவற்றின் இயல்பு தோன்ற நோக்கி ஒருவன் சொல்லுமிடத்து, வேறு வேறியல பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இலக்கணத்தையுடைய பிறப்பிலான் ஆகும் அவற்றின் உருவும் வடிவும், காட்சியான் திறப்படத் தெரியும் காட்சியளவையான் செம்மையாகப் புலப்படும்.

எண் வகை உறுப்பினுள் நெஞ்சம் மிடறும் தலையும் அதிர்வு உறுப்புக்கள். மூக்கும் அண்ணமும் பல்லும் நிலையுறுப்புக்கள். நாவும்

இதழும் இயங்குறுப்புக்கள் ஆகும். முந்துவளியான் தோன்றும் (நாதம்! ஓசை ஒன்றேயாயினும் நெஞ்சு வளியின் அடர்த்தியானும் மிடற்றுவளியின் துரப்பினானும் மூக்குவளியின் செறிவினானும், இயங்குறுப்புக்களின் இயக்கத்தானும் அவ்வோசை வெவ்வேறெழுத்தொலிகளாய்த் திறப்படத் தெரிவன ஆயின என்சு இயங்குறுப்புக்களின் அமைப்பினான் வரிவடிவம் செய்து கொள்ளும் நெறியை உய்த்துணர வைத்தார் தொன்னூலார். என்னை? வரிவடிவம் காலந்தோறும் எழுது கருவி, எழுதப்படும் கருவிகட்கு ஏற்ப மாறுபடுதலின்.

உலக மொழி எழுத்துக்கள் யாவற்றிற்கும் பொருந்த எழுத்தொலிக் கோட்பாடுகளை விளக்கும் இச்சூத்திரத்தின் நுட்பங்களை விரிக்கின் பெருகுமாகலின் மாணாக்கர் ஆய்ந்துணர்க.

## உயிரெழுத்துக்கள் பிறத்தல்

**அவ்வழிப்**

**பன்னீ ருயிரும் தந்நிலை திரியா**

**மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் (2)**

மேற்கூறிய நெறிமுறையான் உயிர் எழுத்து பன்னிரண்டும் தம் தன்மை திரியாவாய் மிடற்று வளியினாற் பிறந்திசைக்கும். தம்நிலையாவது குறில், நெடில், மாத்திரையளபு ஆகிய தன்மைகளாம். வினைக்கள முயற்சி மேற்கூறுவார்.

## அ ஆ பிறத்தல்

**அவற்றுள்**

**அ ஆ ஆயிரண்டு அங்காந் தியலும் (3)**

மேற்கூறிய உயிர் பன்னிரண்டனுள் அகரம் ஆகாரமாகிய இரண்டும் அண்ணத்தின் செயலாகிய அங்காத்தல் முயற்சியான் வெளிப்பட்டு இயலும். அங்காத்தல் அண்ணாத்தல்,

## இ ஈ எ ஏ ஐ பிறத்தல்

**இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்**

**அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன**

**அவைதாம்**

**அண்பல் முதல்நா விளிம்புற லுடைய (4)**

உயிர் எழுத்துக்கள் இ ஈ எ ஏ ஐ என்று சொல்லப்படும். அவ்ஐந்து எழுத்துக்களும் மேற்கூறியவற்றொடு ஒத்த தன்மையவாம். அவை அண்பல்லடியை நாவினது விளிம்பு பொருந்துதலாகிய முயற்சி உடையவாய்ப் பிறக்கும்.

## உ ஊ ஒ ஓ அள பிறத்தல்

**உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்**

**அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும் (5)**

உயிரெழுத்துக்களுள் உ ஊ ஒ ஓ ஔ என்று சொல்லப்படும் அவ் ஐந்து எழுத்துக்களும் அங்காத்தலுடன் இதழ் இரண்டும் முன்னோக்கிக் குவிதலாகிய முயற்சியாற் பிறக்கும்.

**தத்தம் திரிபே சிறிய என்ப (6)**

மேல் சிலவும் பலவுமாக ஒருங்கு வைத்து உயிரெழுத்துக்கட்கு வினைக்கள முயற்சி கூறப்பட்டிருப்பினும் ஒவ்வொன்றும் தம்முள் சிறிது வேறுபாடுடையவாம்.

குறிலும் நெடிலும் ஒன்றிலிருந்து ஒன்று நீடலும் குறுகலுமின்றித் தனித்தனியே பிறத்தலான் அவற்றின் திரிபு உணரப்படும். இகர ஈகாரங்கள் அண்பல்லை நாவிளிம்பு நன்கு பொருந்தவும், எகர ஏகாரங்கள் ஓரளவு பொருந்தவும், ஐகாரம் அணுகிப் பொருந்தவும் பிறத்தலை இசைத்துக் கண்டு கொள்க. அவ்வாறே உகர ஊகாரங்களின் முயற்சியும், ஒகர ஓகாரங்களின் முயற்சியும் ஔகாரத்தின் முயற்சியும் வேறுபடுதலை இசைத்துக் கண்டு கொள்க.

இப்புறனடையை இனிவரும் மெய்யெழுத்து, சார்பெழுத்துக்களின் பிறப்பு விதிகளுள் இணைத்துக் கூறப்பெறும் எழுத்துக்கட்கும் கொள்க. இச்சூத்திரம் அரிமாநோக்கமாக நின்றது.

## மெய்யெழுத்துக்கள் பிறத்தல்

### க ங பிறத்தல்

**ககார ஙகாரம் முதல் நா அண்ணம் (7)**

ககரம் ஙகாரம் என்னும் மெய்யெழுத்துக்கள் அடிநா அடி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

'உற' 'இயலும்' என்பவை மேலைச் சூத்திரத்தினின்று அதிகரித்தன. பின்வரும் இரண்டு சூத்திரங்கட்கும் இஃதொக்கும்.

## ச ஞ பிறத்தல்

**சகார ஞகாரம் இடை நா அண்ணம்** **(8)**

சகரம் ஞகரம் என்னும் மெய்யெழுத்தக்கள் இடை நா இடை அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

## டண பிறத்தல்

**டகார ணகாரம் நுனிநா அண்ணம்** **(9)**

டகாரம் ணகாரம் என்னும் மெய்யெழுத்துக்கள் நுனிநா நுனி அண்ணத்தைப் பொருந்தப் பிறக்கும்.

'தத்தம் திரிபே சிறிய' என்றதனான் நாச்சிறிது உள்வளைதல் கொள்க.

## த ந பிறத்தல்

**அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்**

**நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்**

**தாம்இனிது பிறக்கும் தகார ஞகாரம்** **(11)**

தகரமும் நகரமுமாகிய மெய்யெழுத்துக்கள் தாம், அண்ணத்தைப் பொருந்தியிருக்கும் பற்களின் அடிப்பகுதியின் இருப்பக்கங்களிலும் நாவினது முற்பகுதி விரிந்து தனது வடிவு நன்கு பொருந்தத் தகரமும், நாநுனி விரிந்து ஒற்ற நகரமும் தத்தம் இயல்பு தோன்ற இனிது பிறக்கும்.

## ற ன பிறத்தல்

**அணரி நுனிநா அண்ணம் ஒற்ற**

**றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்** **(12)**

றகரம் னகரம் ஆகிய இரண்டு மெய்யெழுத்துக்களும் நாவின் நுனி (சிறிது வளைந்து) மேனோக்கி எழுந்து அசைந்து விரிந்து அண்ணத்தை நன்கு தொட்டு நிற்க பிறக்கும்.

அணருதல் = மேல் நோக்கி அசைந்து விரிதல் (அண்ணத்தை நோக்கிச் செல்லுதல் அணர்தலாயிற்று)

## ர ழ பிறத்தல்

**நுனிநா அணரி அண்ணம் வருட**
**ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்** **(13)**

ரகரம் ழகரம் ஆகிய இரண்டு மெய்யெழுத்துக்களும், நாவின் நுனி, மேல் நோக்கி அசைந்தெழுந்து அண்ணத்தை வருடப்பிறக்கும்.

## லள பிறத்தல்

**நா விளிம்பு வீங்கி அண்பல் முதலுற**
**ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்**
**லகாரம் ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்** **(14)**

`லகரம் ளகாரம் ஆகிய இரண்டு மெய்யெழுத்துக்களும் முறையே நாவினது விளிம்பு ஆண்பல்லின் அடிப்பகுதியை நெருங்கி அவ்விடத்து அண்ணத்தைப் பொருந்தி நிற்கவும், வருடவும் பிறக்கும்.

## ப ம பிறத்தல்

**இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்** **(15)**

பகரம் மகரம் ஆகிய மெய்யெழுத்துக்கள் கீழிதழ் மேலிதழைப் பொருந்தப் பிறக்கும். செயவென் எச்சம் திரிந்து நின்றது.

## வ பிறத்தல்

**பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும் (16)**

வகரமெய் மேற்பல்லின் முற்பகுதியைக் கீழ் இதழ் சிறிது மடங்கிச் சென்று பொருந்தப் பிறக்கும்.

பல் இதழ் எனப் பொதுவில் நின்றவேனும் ஏற்புழிக்கோடலான் மேற்பல் கீழிதல் எனக் கொள்க. இதழ் சிறிது மடங்குதலும் அதனானே கொள்க. இம்மூன்றினையும் இதழ்வழி மெய்யெழுத்தென்பர் மொழி நூலார்.

## ய பிறத்தல்

**அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை**

**கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும் (17)**

யகரமெய் அண்ணத்தைச் சேர்ந்த, மிடற்றெழும் வளியிசையானது விளிம்புற்று நிற்கும் அடிநாவினை நெருங்கிப் பொருந்தப் பிறக்கும்.

**மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கம்**

**சொல்லிய பள்ளி நிலையின வாயினும்**

**மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும் (18)**

ஙஞணநமன என்னும் மெல்லெழுத்துக்கள் ஆறும் அவற்றின் கிளை எழுத்துக்களாகிய வல்லெழுத்துக்களொடு சேர்த்துச் சொல்லிய வினைக்கள் முயற்சியான் வடிவுற்று நிலைபெற்றனவாயினும் அவை

வெளிப்படுங்கால்மூக்கு வளியிசையினது கட்டுக்கோப்பினான் இசைக்கும். இதனான் இவற்றின் கிளையாகிய வல்லெழுத்துக்கள் நெஞ்சு வலியான் இசைக்கும் என்பது பெறப்படும்.

## சார்பெழுத்துக்கள் பிறத்தல்

**சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்**

**தேர்ந்த வெளிப்படுத்த ஏனை மூன்றும்**

**தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி**

**ஒத்த காட்சியிற் றம்மியல்பு இயலும் (19)**

சார்ந்துவரினல்லது தமக்கியல் பிலவெனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும் இடமும் பற்றுக்கோடுமாகத் தத்தமக்கேற்ற தலைமை எழுத்துக்களைச் சார்ந்து ஒரு

மொழிக்கண் எழுத்தொலியாக வருதலன்றித் தாமாகத் தனித்து வரும் இயல்பில்லாதன என ஆராய்ந்தறிந்து கூறப்பெற்ற சார்பெழுத்துக்கள் மூன்றும், தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி = தாம் சார்ந்து தோன்றும் தலைமை எழுத்துக்களின் வளியிசை வினைக்கள முயற்சிப் பிறப்பியல்களொடு ஒருங்கொத்து ஒத்த காட்சியின் தம்மியல்பு இயலும் தத்தம் இயல்பொடு கூடி அவ்விரண்டு தன்மையும் ஒத்த தோற்றத்தொடு உருவாகிப் பிறக்கும். காட்சி = வடிவத்தோற்றம்.

## தொகுப்புரை:

தனிஎழுத்துக்களின் இலக்கணத்தை நூன்மரபினும், மொழிகளில் வைத்து அறியக்கூடிய சார்பெழுத்துக்களின் இலக்கணத்தையும், மொழிகளின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் எழுத்துக்களின்

இலக்கணத்தையும் மொழிமரபிலும் கூறிய ஆசிரியர் இவ்வியலில் அவ்வெழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தைக் கூறார் முதலெழுத்து, சார்பெழுத்துக்களின் பிறப்பியலை உணர்த்த; பிறப்பியல் என்னும் பெயர்பெற்றது.

எழுத்துக்களின் பொதுப்பிறப்பு, எழுத்துப்பிறப்பின் ஆக்கநிலை, துணைநிலைக் கருவிகள், அங்காத்தல், வெடிப்புநிலை, உறழ்வுநிலை, உயிர் எழுத்துக்களின் பிறப்புநிலை, மெய்எழுத்துக்களின் பிறப்புநிலை, சார்பெழுத்துக்களின் பிறப்புநிலை பிறப்பின் ஆக்கம் வெவ்வேறு ஆக நிலைபெற்றது.

**பிறப்பியல் முற்றியது**

**பயிற்சி வினாக்கள்**

**அருஞ்சொற்பொருள் விளக்கம்**

1. மாத்திரை – கால அளவு
2. உறழ்வு – பிறழ்தல்
3. காட்சி - அறிவு
4. மிடறு – குரல்வளை
5. அண்ணம் - மேல்வாய்
6. முப்பாற் புள்ளி – ஆய்தம்
7. தெவ்வர் - பகைவர்
8. முசு - குரங்கு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நுனிநா அணரி அண்ணம் வருட பிறக்கும் எழுத்துக்கள்

அ) ரகரம் ழகரம் ஆ) பகரம் மகரம் இ) டகார ணாகரம் ஈ) சகார ஞகாரம்

2. இதழ்குவி எழுத்துக்களில் ஒன்று

அ) ஆ ஆ) ஏ இ) ஐ ஈ) ஔ

3. பகரம் மகரம் ஆகிய மெய்யெழுத்துக்கள் ஒலிக்கப் பயன்படும் உறுப்பு

அ) கீழ் இதழ் ஆ) மேலிதழ் இ) பொருந்தப் பிறக்கும் ஈ) பல்லிதழ்

4. டகார ணகாரம் -------------------------

அ) கீழ் இதழ் ஆ) மிடற்றெழு இ) அணரி நுனிநா ஈ) நுனிநா அண்ணம்

5. அவ்வழிப் பன்னீ ருயிரும் ----------------------
அ) தத்தமக்கேற்ற ஆ) தந்நிலை திரியா

இ) தந்நிலை திரியும் ஈ) தமக்கியல்

## குறுவினாக்கள்

1. எழுத்தொலிகளை ஒலிக்கப் பயன்படும் உறுப்புகள் எவை?

2. எழுத்துக்களின் பொதுப் பிறப்பை உணர்த்துக.

3. உயிர் எழுத்துக்களின் பிறப்பை விளக்கி வரைக.

## கட்டுரை வினாக்கள்

1. மெய் எழுத்துக்களின் பிறப்பை விளக்கி வரைக.

2. சார்பெழுத்துக்களின் பிறப்பை விளக்கி வரைக.

## பாடநூல்

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாவலரேறு பாலசுந்தரனார் உரை - பெரியார் பல்கலைக்கழகம் வெளியிடு - சேலம் - 11, 2012

**Web Sources**

1. TamilHeritageFoundationwww.tamilheritage.org<http://www.tamilheritage.org

2. Tamilvirtual Universitylibrary-www.tamilvu.org/libraryhttp://www.virtualvu.org/

# அலகு -2

## (அ) புணரியல்

### நோக்கம் :

மொழிகளின் பொதுப்புணர்ச்சி, புணர்ச்சி நிலையும் எழுத்துக்களும் அறிதல், சொற்கள் புணரும் நிலை அறிதல், மரூஉச்சொற்கள் புணர்த புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி அறிதல், வேற்றுமை உருபுகள் ,புணரும் நிலை அறிதல், எழுத்துச் சாரியைகள் குறித்து அறிந்துகொள்ளுதல்.

### புணரியல்

மொழிமரபியல் கூறப்பெற்ற இலக்கண முறைமையான் ஆக்கம் பெற்ற மூவகை மொழிகளும், பெயர்ச் சொல்லும் தொழிற் சொல்லுமாக ஒன்றொடு ஒன்று தொடருங்கால், அவற்றின் இறுதியும் முதலும் இடையறவுபடாமல் இயையும் நிலையே புணர்ச்சியாம்.

அவை, பட்டாங்கு புணர்தலும் திரிபுற்றுப் புணர்தலுமாகிய இருநிலைமைகளை எய்தும். திரிதல் ஒரு சொல்லின் ஈற்றெழுத்தும் முதலெழுத்துமேயன்றி இடைநின்றனவும் திரியும் ஒரோவழி அச்சொல் முழுதும் திரிதலுமுண்டு, பிறிதோர் எழுத்தையோ சொல்லையோ துணைக் கொள்ளுதலும் உண்டு. அங்ஙனம் திரிதற்குக் காரணம் எழுத்துக்களின் பிறப்பிட வேறுபாடேயாதலின் பிறப்பியலின் பின்புணரியல் வைக்கப் பெற்றது. புணர்ச்சியை ஆசிரியர் இயற்கை, தொழில், இயல்பு, பண்பு முதலிய சொற்களானும் குறிப்பிடுவார்.

மெய்மையும் உயிரையும் ஈறும் முதலுமாகக் கொண்டு சொற்கள் புணரும் நிலை மிகப் பரப்புடையதாகலின் அவ் இலக்கணத்தை ஆறு இயல்களாகப் பகுத்துக் கொண்டு ஓதுகின்றார்.

## ஈற்றெழுத்துக்கள்

**மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தின்**
**இரண்டு தலையிட்ட முதலா கிருபஃது**
**அறுநான் கீற்றொடு நெறிநின் றியலும்**
**எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்**
**மெய்யே உயிரென்று ஆயி ரியல (1)**

நூன் மரபினுட் கூறப்பெற்ற முப்பத்து மூன்று எழுத்துக்களுள் இருபத்திரண்டு எழுத்துக்களை முதலாகவும், இருபத்து நான்கு எழுத்துக்களை ஈறாகவும் கொண்டு நெறியாக இயங்கும் எல்லா மொழிகட்கும். இறுதியும் முதலுமாக நிற்கும் எழுத்துக்கள் (தொகுத்து நோக்கின்) மெய்யும் உயிரும் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு இலக்கணத்தனவாகும்.

## மெய்யீறு

**அவற்றுள்**
**பொய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் (2)**

மெய்யே உயிரென்றாயீரியல என்றவற்றுள் ஈற்றின்கண் நிற்கும் எல்லா மெய்களும் ஒலிப்புடைய புள்ளி மெய்யாக நிற்கும்.

மொழிமரபின்கண் மெய்யெழுத்துக்கள் மொழிமுதற்கண் உயிர்மெய்யாக வன்றிப் புள்ளிமெய்யாக நில்லா என நியமித்தமையான் ஈற்றில் நிற்கும் மெய் புள்ளியொடு நிற்குமென ஈண்டுக் கூறப்பட்டது. எல்லாம் என்றதனான் இடைநிற்பனவும் புள்ளியொடு நிற்குமெனக் கொள்க.

**எ-டு :**

உரிஞ், அரண், வெரிந், மரம், அலவன், வாய், சுடர், கடல், தெவ், புகழ், உதள் என வரும்.

## குற்றியலுகர ஈறு

**குற்றிய லுகரமும் அற்றென மொழிப (3)**

சார்பெழுத்து மூன்றனுள் மொழி ஈற்றுக் குற்றியலுகரமும் மேற்கூறிய மெய்களின் தன்மைத்தாகும் என்றது புள்ளியொடு நிற்கும் என்றவாறு

குற்றியலுகரமும் ஆய்தமும் மொழியிறுதிக்கண் நில்லாமையின் குற்றியலுகரத்தை விதந்தோதினார். மெய்யீறெல்லாம் எனக்கூறி மாட்டெறிந்தமையின் ஈற்றுக் குற்றியலுகரம் என்பது பெறப்பட்டது. இதன் பயன் 'புள்ளியீற்று முன்' என்னும் சூத்திரத்தான் இனிது விளங்கும்.

## உயிர்மெய்யீறு

**உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே (4)**

மொழியீற்றின்கண் நிற்கும் உயிர்மெய்யும் உயிரீற்றின் இயல்பினதாகும் என்றது. புணருமிடத்து உயிரீறு போலப் புணர்ச்சி விதி எய்தும் என்றவாறு.

'மெய்யே உயிரென்றாயீரியல' என்றதனான் கூட்டொலியாகிய உயிர்மெய் யாதனுள் அடங்கும்; என நின்ற ஐயம் நீங்க அ்ஃது உயிரீறு போல நிற்கும் என்றார். மொழிமுதற்கண் நிற்கும் உயிர்மெய் மெய்முதலாகும் என்பதனை 'உயிர்மெய் யல்லன மொழி முதலாகா' என மேற் கூறப்பட்டமையான் ஈண்டு ஈற்று உயிர்மெய்யை விதந்தோதினார்.

## எழுத்து வகைப் புணர்ச்சி

**உயிரிறு சொன்முன் உயிர்வரு வழியும்**
**உயிரிறு சொன்முன் மெய்வரு வழியும்**
**மெய்யிறு சொன்முன் உயிர்வரு வழியும்**
**மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்**
**இவ்வென அறியக் கிளக்குங் காலை**
**நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று**
**ஆயி ரியல புணர்நிலைச் சுட்டே** **(5)**

புணர்ச்சி நிலைமையாகிய கருத்து இவை என அறியக் கிளந்து கூறுமிடத்து உயிரீற்றுச் சொல்லின்முன் உயிர் முதன்மொழி வரும் வழியும், உயிரீற்றுச் சொல்லின்முன் மெய்ம் முதல் மொழி வரும் வழியும். மெய்யீற்றுச் சொல்லின்முன் உயிர் முதன் மொழி வரும் வழியும், மெய்யீற்றுச் சொல்லின்முன் மெய்ம் முதன்மொழி வரும் வழியும்,

அம்மொழிகள் முதற்கண் நிறுத்தப்பெற்ற சொல்லும். அதன் பொருள் விளக்கங் கருதிக் குறித்து எதிர்வரும் சொல்லும் என அவ்விரண்டு இலக்கணத்தனவாகும்.

ஒருவர் ஒரு கருத்தைத் தொடர்மொழியாற் கூறமுற்படுங்கால் அடுத்தடுத்து வரும் சொல்லின் பொருள் நிலைக்கேற்ப முதற்சொல்லை அமைத்துக் கூறுவராதலின் நின்ற சொல் என்னாது நிறுத்த சொல் என்றும் அவ்வாற்றானே எதிர்வரும் சொல்லையும் குறித்து வருகிளவி என்றும் குறியீடு செய்தார். இக்குறியீடுகளின் நுண்மையை இடைக்கால இலக்கணநூலார் ஓராராயினர்.

## சொல் வகைப்புணர்ச்சி

**அவற்றுள்**

**நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு**

**குறித்து வரு கிளவியின் முதல்எழுத்தியையப்**

**பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்**

**பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**

**தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்**

**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென**

**ஆக்கந் நான்கே மொழிபுணர் இயல்பே** **(6)**

நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியுமாகிய அவற்றுள் நிறுத்த சொல்லின்கண் ஈறாகி நிற்கும். எழுத்தொடு குறித்து வருகிளவியின் முதல் எழுத்து இயையப் பெயர்ச் சொல்லொடு பெயர்ச் சொல்லைப் புணர்க்கு

மிடத்தும் பெயர்ச் சொல்லொடு தொழிற்சொல்லைப் புணர்க்குமிடத்தும் தொழிற்சொல்லோடு பெயர்சொல்லைப் புணர்க்குமிடத்தும் தொழிற் சொல்லொடு தொழிற்சொல்லைப் புணர்க்குமிடத்தும் திரிபுறும் வகை மூன்றும், இயல்பாகும் நிலை ஒன்றும், என அம்மொழிகள் புணருங்கால் ஆங்கு எய்தும் இலக்கணம் நால்வகையாகும்.

'ஆங்கு' என்றதனான் அத்திரிபுகள் சொல்லின் மூன்றிடத்தும் ஏற்ற பெற்றி நிகழும் என அறிக. தொழில் என்றது தெரிநிலையும் குறிப்புமாகிய வினைச்சொற்களையும் எச்ச வினைகளையும் சிறுபான்மை தொழிற் பெயர்களையுமாம்.

**எ-டு:**

கபிலர் நூல் - நம்பி கற்றான்

உண்டான் சாத்தன் எனவும்,

அவன் பொன்னன் எனவும்

பொன்னன் - குழையன் எனவும் வரும்.

**அவைதாம்**

**மெய்பிறி தாதல் மிகுதல் குன்றல் என்று**

**இவ்வென மொழிப திரியு மாறே** **(7)**

நிறுத்தச் சொல்லும் குறித்து வருகிளவியுமாகிய புணர்மொழிகள் தாம் திரியும் முறைமையாவது, பிறப்பிடத் தடுமாற்றத்தான் வடிவு வேறுபடுதலும் ஒலிமிகுதலும் ஒலிகுன்றலும் ஆகிய இவை என்று கூறுவர். ஆசிரியர்

பொன் + குடம் =பொற்குடம் - மெய் பிறிதாதல்

கிளி + பிள்ளை கிளிப்பிள்ளை - மிகுதல்

அற + நெறி அறநெறி - குன்றல்

பொன் + மலை =பொன்மலை - இயல்பு

**நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும்**

**அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குறிய (8)**

மேற்கூறிய நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் பெயர்ச்சொல்லும் தொழிற்சொல்லுமாகப் பட்டாங்கு வருதலேயன்றி அவை அடையெடுத்து வரினும் புணரியல் நிலைக்கு உரியனவாம்.

அஃதாவது பெயரோடு பெயரைப் புணர்க்குங்காலும் பெயரொடு தொழிலைப் புணர்க்குங்காலும் என்றதனான் பெயர்ச்சொல்லும் தொழிற்சொல்லும் பட்டாங்குவரல் வேண்டும். போலும், என நின்ற நிலைமை ஓர்ந்து அவை தாமேவரினும் அடையெடுத்து வரினும் புணர்க்கப்படும் என்று கூறியவாறு அடையாவன. பெயர்ப் பொருளும் வினைநிலையும், பண்பு, செயல் முதலியவற்றான் எய்தி நிற்கும். சிறப்புக்களை உணர்த்திப் பொதுமை நீக்கியும் சிறப்பித்தும் நிற்கும் நால்வகைச் சொற்களுமாம்.

**எ-டு:**

கிள்ளிவளவன் நாடு, உலகளந்தான் இறைவன், தொல்காப்பியன் நூல், கறிசோறு உண்டான் எனவும் பிறவாறும் வரும்.

## பொருள்வகைப் புணர்ச்சி

**வேற்றுமை குறித்த பொருள் மொழி நிலையும்**

**வேற்றுமை அல்வழிப் பொருள்மொழி நிலையும்**

**எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்**

**ஒழுக்கல் வலிய புணருங் காலை (10)**

மேற்கூறிய சொற்கள் வேற்றுமைப் பெயருள் நிலைகுறித்த சொற்களும், வேற்றுமை வழியல்லாத (அல்வழிப்) பொருள் நிலை குறித்த சொற்களுமாய்ப் புணரும் அங்ஙனம் அவை இரு வழியாகிப் புணருமிடத்து அவை எழுத்தும் சாரியையும் பெறுதலாகிய அவ் இரு பண்பினொடு நடத்தலை வலிமையாக உடையனவாகும்.

ஒழுக்கல் வலிய என்றார். எழுத்து என்றது. சாரியை மொழிகளைப்போலப் பொருள் வேறுபாட்டினைச் செய்யாமல் புணர்ச்சிக்குத் துணைபுரியுமளவில் நிற்கும். அது பொருள் வேறுபாடு செய்யின் சாரியையாகுமென்சு.

**எ-டு:**

எழுத்துப் பெறுவன.

1. வேற்றுமை புணர்ச்சி - பண்ணு + பெயர்த்து= பண்ணுப் பெயர்த்து
2. அல்வழிப்புணர்ச்சி -பொருநு+கடிது =பொருநுக்கடிது சாரியைப்

பெறுவன

1. அல்வழிப் புணர்ச்சி - பனை + குறை =பனையின் குறை
2. வேற்றுமைப் புணர்ச்சி - மகவு + கை =மகவின் கை

## வேற்றுமைப் புணர்ச்சி

**ஐ ஒடு கு இன் அது கண் என்னும்**

**அவ்வாறென்ப வேற்றுமை உருபே (11)**

ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று கூறப்படும் அவ்வகை ஆறும் வேற்றுமை செய்யும் உருபுகள் எனக் கூறுவர் ஆசிரியர்

## வல்லுருப் புணர்ச்சி

வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு

ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும். (2)

வல்லெழுத்தை முதலாக உடைய வேற்றுமை உருபுகள் உருபுபுணர்ச்சிக்குப் பொருந்தும் வழி அவ் ஒற்று இடையேமிகும். அவை; நான்கனுருபும் ஏழனுருபுமாம்

**எ-டு :**

மழைக்கு - மதிக்கு - அவர்க்கு எனவும் கடைக்கண் ஊர்க்கண் பேய்க்கண் எனவும் வரும். அரசர்கண் - பார்ப்பார்கண் என சில இடங்களில் மிகாது வரும்.

## ஆறாம் வேற்றுமை உருபு

**ஆறன் உருபின் அகரக்கிளவி**

**ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் (13)**

ஆறாம் வேற்றுமை உருபாகிய அது என்னும் இடைச்சொல்லின்கண் நிற்கும் அகரமாகிய எழுத்து நிறுத்த சொல்லின் ஈறாக வரும் அகரத்தின் முன் குன்றும்.

## வேற்றுமை உருபின் இடம்

**வேற்றுமை வழிய பெயர்ப்புணர் நிலையே (14)**

அதிகாரத்தான் நின்ற ஆறன் உருபு வேற்றுமையாக நிற்பது அதன் வழியாகப் பெயர்ச்சொற்கள் புணரும் நிலைமைக் கண்ணேயாம் என்றது. அது வென்னும் சொல், சாத்தனது கொண்டான் என வினையொடு புணர்ந்து நின்ற வழியும், எமது தமுது எனப்பெயரொடு புணராமல் தனித்து இறுதியாய் நின்ற வழியும் உருபாகாது என்றவாறு என்னை? சாத்தன் அது கொண்டான் என்னுமிடத்து அது என்பது சுட்டுப்பெயராயும் சாத்தனது கொண்டான் என நிற்பின் குறிப்பு வினைப் பெயராயும் எமது, தமது என்னுமிடத்துக் குறிப்புவினை முற்றாயும் நிற்றலின் வேற்றுமை யுருபாகாதென்க.

## உருபுடன் வரும் பெயர்கள்

**உயர்திணைப் பெயரே அஃறிணைப்**

**பெயரென்று ஆயிரண் டென்ப யெர்நிலைச் சுட்டே (15)**

புணர்நிலைக் கருத்தொடு வரும் பெயர்கள் உயர்திணைப் பெயர். அஃறிணைப் பெயர் என அவ்விரண்டு வகையின என்று கூறுவர் ஆசிரியர். இனி இச்சூத்திரத்தை அடுத்து வினையும் குறிப்புமென்று ஆயிருதிணையின் அனை மரபினவே விநிைலைச் சுட்டே' என்றாற் போல்வதொரு நூற்பா அமைந்திருத்தல் வேண்டும். அது காணாமையின் 'தன்னினம் முடித்தல்' என்பதனான், தொழில் சொல்லாகிய

வினைச்சொல்லும் உயர்திணை வினையே அஃறிணை வினையே என்று அங்ஙனம். இருவகைப்படுமென்று கொள்க.

# சாரியைப் புணர்ச்சி

## சாரியைகள்

**அவைதாம்**

**இன்னே வற்றே அத்தே அம்மே**

**ஒன்னே ஆனே அக்கே இக்கே**

**அன்னென் கிளவி உளப்படப் பிறவும்**

**அன்ன என்ப சாரியை மொழியே** **(17)**

மேற்கூறப்பெற்ற சாரியை தாம், இன்னும், வற்றும், அத்தும், அம்மும், ஒன்னும், ஆனும், அக்கும். இக்கும். அன் என்னும் கிளவி உட்பட அவை போல் வன பிறவும் சாரியை மொழிகள் எனக்கூறுவர் நூலோர்.

உளப்பட அன்னபிறவும் எனக்கூட்டு அதனான் இவை சிறப்புடையன என்பதும் பெறப்படும். ஏகாரம் ஈற்றசை அன்ன பிறவாக வருவன. அ உ ஈ எ ஐ தம் நம் நும் கு முதலியவனவாம்.

## இன் சாரியை

**அவற்றுள்**

**இன்னின் இகர மாவி னிறுதி**

**முன்னர்க் கெடுதல் உரித்து மாகும்** **(18)**

மேற்கூறிய சாரியைகளுள் இன் என்னும் சாரியை மொழியில் உள்ள இசுரம் ஆகார ஈற்று சொல்லின் முன் கெடுதற்கும் உரியதாம். உம்மையான்

கெடாதும் நிற்கும் என்றவாறு கெடுதலும் உரித்தாகும் என உம்மையை மாறிக் கூட்டுக.

**எ-டு:**

ஆனை (ஆ + இன் + ஐ)

ஆவினை - னொடு; அவினொடு என வரும்

மானை - மாவினை; ஆனுக்கு - ஆவினுக்கு எனவும் வரும்.

## இன் உருபு முன் இன் சாரியை

**இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு**

**இன்னென் சாரியை இன்மை வேண்டும் (29)**

இன் என்று சொல்லப்பட்டு வரும் ஐந்தாம் வேற்றுமை உருபிற்கு முன்னர், இன் என்னும் சாரியை இல்லையாதல் வேண்டும் என்று கூறுவர் புலவர்.

**எ-டு:**

மலை + இல் + இன் + வீழ் அருவி = மலையினின் வீழ் அருவி என்று வராது.

மலையின் வீழ் அருவி என்றே வரும்.

இன் என்ற வேற்றுமை உருபிற்கு முன் இன் என்ற சாரியைத் தோன்றாது.

## இன் இற் ஆதல்

**அளவாகு மொழி முதல் நிலைஇய உயிர்மிசை**

**னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே (19)**

அளவுப்பெயராய் வரும். குறித்து வருகிளவியின் முதல்நிற்கும் உயிரின் மேலிடத்ததாய் நிலை மொழியொடு நிற்கும் இன்சாரியையினது னகர ஒற்று றகரமாகிய நிலைத்தாகும். இத்திரிபு மயக்க நிலையானன்றி மரபு நிலையான் வருதலின் 'ஆகிய நிலைத்தே' என்றார்.

**எ-டு :**

பத்து + இன் + அகல் பதிற்றகல்

பதிற்றுழக்கு என வரும் இவை பண்புத்தொகை. அளவுப்பெயர் என்னாது அளவாகும் மொழி என்றதனான் எண்ணலளவைக் கண்ணும் இவ்விதி கொள்க.

**எ-டு :**

பதிற்றொன்று - பதிற்றிரண்டு என வரும்

## வற்றுச்சாரியை

**வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்**

**அஃகான் நிற்றல் ஆகிய பண்பே (20)**

வற்று என்னும் சாரியை சுட்டெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுச் கட்டுப்பெயரின் முன்னர் வகர உயிர்மெய்யுள் வகரமெய்கெட அதனை ஊர்ந்துநின்ற அகர உயிர் மட்டும் நிற்றல் அதற்கு உளதாகிய பண்பாம்.

**எ-டு**:

அவை வற்று + ஐ அவையற்றை என வரும். இடை வந்த யகர ஒற்று உடம்படு மெய்யாகும். உருபிற்கென விதந்து கூறாமையான் அவையற்றுக் கோடு. இவையற்றுக் கோடு என வரும்.

## னகர ஈற்றுச் சாரியை

**னஃகான் றஃகான் நான்க னுருபிற்கு** **(21)**

னகர ஈற்றுச் சாரியை நான்கினும் உள்ள னகர ஒற்று. நான்கனுருபுவருமிடத்து றகர ஒற்றாகத் திரியும்.

**எ-டு**:

ஆவிற்கு, விளவிற்கு, கோஒற்கு. ஒரு பாற்கு அதற்கு என வரும்.

**ஆனின் னகரமும் அதனோ ரற்றே**

**நாள்முதல் வரூஉம் வன்முதற் றொழிற்கே** **(22)**

நாள்பெயராக வரும் சொல்லிற்கும் வல்லெழுத்தை முதலாக உடைய தொழிற் சொற்களுக்கும் இடையே வரும் ஆன் சாரியையது னகர ஒற்றும் முற்கூறிய ஆன் சாரியை போல றகரமாகத் திரியும்.

**எ-டு**:

பரணியாற்கொண்டான், ஆதிரையாற் கொண்டான் என வரும்

## அத்துச் சாரியை

**அத்தின் அகரம் அகர முனை இல்லை** **(23)**

அத்துச்சாரியையின்கண் உள்ள அகரம் அகர ஈற்றுச் சொல்லின்முன் குன்றும். ஆண்டு அகரத்தின் இசை புலப்படாமையான் இல்லை என்றார்.

**எ-டு:**

மக + அத்து + கை மகத்துக்கை என வரும்

## இக்குச் சாரியை

இக்கின் இகரமும் இகரமுனை அற்றே (24)

இக்குச்சாரியையின் இகரம் இகர ஈற்றுச்சொல் முன் அத்தின் அகரம் போல இல்லையாகும்.

**எ-டு :**

ஆடி +இக்கு + கொண்டான் ஆடிக்குக் கொண்டான் என வரும் .

ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும் (25)

இக்குச் சாரியையின் இகரம் இகர ஈற்றுச் சொல் முன்னரேயன்றி ஐகார ஈற்றுச்சொல் முன்னரும் அவ்வியல் பெற்று நிற்கும்.

**எ-டு:**

சித்திரை + இக்கு + கொண்டான் சித்திரைக்குக் கொண்டான் என வரும்

## அக்குச் சாரியை

**எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி**
**அக்கின் இறுதிமெய்ம் மிசையொடும் கெடுமே**
**குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது (26)**

எவ்வகையாய பெயர்ச் சொற்களின் முன்னரும் வல்லெழுத்து வருமொழியாக வருமிடத்து அக்குச் சாரியையின் இறுதி நிற்கும் ககர மெய், மேல்நின்ற ஒற்றொடும் கெடும்; இறுதி நின்ற குற்றியலுகரமும் முற்றக்கெடும்.

**எ-டு :**

தாழ் + அக்கு + கோல் தாழக்கோல்

தமிழ் + அக்கு + கூத்து தமிழக் கூத்து எனவும்

ஈமக்குடம், கம்மக்குடம் எனவும், வரும்.

## அம் சாரியை

**அம்மின் இறுதி க ச த க்காலை**

**தன் மெய் திரிந்து ங ஞ ந ஆகும் (27)**

அம்முச்சாரியையது மகர ஒற்று க ச த க்கள் வருமொழி முதலாக வருமிடத்துத் தன்னுருத் திரிந்து முறையே ங ஞ ந என்னும் ஒற்றாகும்.

**எ-டு :**

புளியங்கோடு - புளியஞ்செதிள் புளியந்தோல் என வரும் .

மென்மையும் இடைமையும் வரூஉங் காலை இன்மை வேண்டும் என்மனார் புலவர்

**எ-டு :**

மெல்லெழுத்தும் இடையெழுத்தும் முதலாகி வருமிடத்து மேற்கூறிய அம்முச்சாரியையது மகர ஒற்று இல்லையாதல் வேண்டுமென்பார் புலவர்.

**எ-டு**:

புளியஞெரி - புளிய நுனி, புளிய முரி எனவும் புளிய யாக்கை, புளிய வட்டு எனவும் வரும்.

## புறனடை

**புணர்மொழிச் சாரியை**

**பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப**
**வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்**
**தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்**
**ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்**
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது** **(29)**
**இடைநின் றியலும் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒருவயின் ஒக்கும்** **(30)**

பெயர்ச்சொல்லும் தொழிற்சொல்லும் தம்முள் பெயரும் வினையுமாக வேறுபட்டும். பெயரும் பெயருமாக ஒன்றுபட்டும் புணர்ந்து இசைக்குங்கால் வேற்றுமை உருபுகள் மறையாமல் நிலைபெறுமிடத்தும் அவ்வுருபுகள் தோன்றுதல் வேண்டாமல் அப்பொருள்படத் தொக்குவருமிடத்தும், நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் இயைவதற்கேற்ப நடந்த இருவகை வழக்கொடு பொருந்தி, அப்புணர்மொழிகள் பிரிந்து நிற்குமிடத்துச் சொல்லின் ஈற்றினின்றியலும் சாரியை போல ஒன்றன் வழிவந்து தோன்றாமல் பொருள் நிலைக்குதவுவனவாய் அவற்றினிடையே வந்து அவற்றை இணைப்பதற்கு

இயலும், சாரியை, மொழிகள், ஒரோவிடத்து வருதலுடைமையும், வருதலின்மையும் ஒக்கும் இயற்கைவாகும். இயற்கை - இலக்கணம்.

## அத்து, வற்றுச் சாரியைகள்

**அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்**

**ஒற்றுமெய் கெடுதல் தெற்றென றற்றே**

**அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே (31)**

அத்தும் வற்றுமாகிய இடைநின்றியலும், சாரியைகளின் மேல் நிற்கும் புள்ளியீற்றுச் சொற்களின் இறுதி ஒற்றாகிய மெய் கெடுதல் தெளிவுடையது என்னும் தன்மைத்து அவ் இரு சாரியைகளின் முன்வரும் வல்லெழுத்து மிகும். அற்றே ‘மிகுமே' என்பவற்றின் ஏகாரம் இசை நிறை.

**எ-டு:**

கலம் + அத்து + குறை கலத்துக் குறை

அவ் + வற்று + கோடு அவற்றுக்கோடு

என வரும் அத்தினது அகரம் கெடுதற்கு விதி மேற்கூறப்பட்டது.

## எழுத்துச்சாரியை

**காரமும் கரமும் கானொடு சிவணி**

**நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை (32)**

காரமும், கரமும் கான் என்பதனொடு பொருந்தி அம்மூன்றும் எழுத்தின் சாரியைகளாய் (அவ்வவற்றிற்கு) ஒப்பந்தோன்றி வரும்.

இனி ஆய்தத்தை அஃகு என்னும் ஒலிப்பாக நிறுத்தி ஏனம் என்னும் சொல்லைக் கூட்டி "அஃகேனம்” என வழக்கும் வழக்கு நோக்கி இது

போன்றவை நேரத் தோன்றாதன எனப் புலப்படுத்துவார் தேரத்தோன்றும் என்றார். ஆனம், ஒனம் என்பவை நேரத்தோன்றா எழுத்துசாரியைகள் என்பர் உரையாசிரியர்.

## நெட்டெழுத்துச்சாரியை

**அவற்றுள்**

**கரமும் கானும் நெட்டெழுத் திலவே** **(33)**

மேற்கூறிய மூன்றதனுள் கரம், கான் என்னும் இருசாரியையும் நெட்டெழுத்திற்கு உரியவாதலில்லை. எனவே காரம் நெட்டெழுத்திற்குரியதென்றவாறாம்.

**எ-டு:**

ஆகாரம் ஈகாரம் ஐகாரம் ஔகாரம் என வரும். இவ்வாறு எதிர்மறுத்துக்கூறியதன் பயன், உயிர்மெய் நெட்டெழுத்து, யாதொரு சாரியையும் பெறாதென்பதும் பெறநேரின் ககர ஆகாரம் மகர ஐகாரம் என வேற்றுமை நயம்பட இருசாரியை பெறும் என்பதும் உணர்த்துதலாம்.

## குற்றெழுத்துச்சாரியை

**வரன்முறை மூன்றும் குற்றெழுத் துடைய** **(34)**

வரலாற்று முறைமையான் முற்கூறிய சாரியை மூன்றையும் குற்றெழுத்துக்கள் உடையவனவாகும்.

**எ-டு :**

அகரம், அகாரம், அஃகான் எனவும் ககரம், மகாரம், றஃகான் எனவும் வரும்.

## ஐ ஔ எழுத்துச் சாரியை

**ஐகார ஔகாரம் கானொடுந் தோன்றும் (35)**

நெட்டெழுத்துக்கள் ஐகாரமும் ஔகாரமும் காரச்சாரியையேயன்றி முன்விலக்கப் பெற்ற கான் சாரியையொடும் தோன்றி வரும்.

**எ-டு:**

**ஐகான் ஔகான் என வரும்.**

**புள்ளியீற்றுமுன் உயிர்தனித்தியலாது**
**மெய்யொடு சிவனும் அவ்வியல் கெடுத்தே (36)**

நிறுத்த சொல்லின் இறுதி நிற்கும் புள்ளி எழுத்தின் முன், குறித்து வரு சொல்லின் முதல் வரும் உயிர் தான் தனித்துப் பிளவுபட்டிசைக்காமல் அரை மாத்திரை ஒலிப்புடைத்தாய் நிற்கும் புள்ளி எழுத்தின் மாத்திரை இயல்பினைக் கெடுத்து (ஒலிப்பில்லாத) மெய்வடிவாக்கி அதனொடு பொருந்தியிசைக்கும்.

**எ-டு:**

நூலழகு, பாலாறு, ஆலிலை, அருளீகை, உயிருணர்வு, ஆரூர், பேரெழில், பொருளேற்றம், விரலைந்து - இறைவனொருவன், தேரோட்டம், புகழௌவியம் என வரும்.

**மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும் (37)**

வருமொழி உயிர் சிவனுதற்பொருட்டுப் புள்ளியியல்பு கெட்டு மெய்யாகிநின்ற எழுத்துத் தன்மை ஊர்ந்த பிரிந்த வழி (நிலைமொழிப் பொருள் சிதையாவாறு) தனது முன்னைய நிலையாகிய புள்ளி உருவாகி நிற்கும்.

**எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**
**உடம்பொடு மெய்யென் னுருபு கொளல் வரையார்** **(38)**

உயிரீறாகி நிற்கும் ஓரெழுத்தொரு மொழி முதலாய எல்லா மொழிக்கும், குறித்து வரு கிளவி உயிர் முதலாகி வருமிடத்து இடையே உடம்படுமெய் என்னும் உருபு' கோடலை நீக்கார் ஆசிரியர்.

**எ-டு:**

விளவழகு, சிலவுயிர், நிலாவெழுந்தது, விழியழகிது, தீயெழுந்தது, கடுவோங்கிற்று. பூவழகிது, ஆடூஉவறிசொல், சேவெழுந்தது. மலையதிர்ந்தது. கோவெதிர்ந்தான், வெளவிழிந்தது என வரும். எகர ஒகாரங்கள் எவ்வணி நொவ்வுற்றான் என இரட்டித்து வரும்.

**எழுத்தோ ரன்ன பொருள் தெரி புணர்ச்சி**
**இசையிற் றிரிதல் நிலை இய பண்பே** **(39)**

எழுத்துக்கள் வேறுபடாமல் ஒருங்கொத்து (வேற்றுமை உருபின்றித் தொக்கு) வந்து பொருளைத் தெரிவிக்கும் புணர்மொழிகள் பொருள் கொள்ளும் முறைமையான் வேறுவேறுபடுதல் நிலைபெற்றதொரு இலக்கண மரபாகும். இசை என்றது பொருளை.

**எ-டு :**

யானைக்கோடு கூரிது. என்ற வழிக் கிளத்தினோனது குறிப்பானும் இடமுதலிய சார்பானும் யானைக்கோடு கூரிது, யானையது கோடு கூரிது யானையின்கண் கோடு கூரிது என முறையே கோடற்பொருளும், உடைமைப் பொருளும், இடம் பொருளுமாக வேறுபட விளங்கி நிற்கும். கரும்பு வேலி என்புழிக் கரும்பாலாகிய வேலி, கரும்பிற்கு வேலி,

கரும்பினது வேலி, எனவும் சொற்பொருள் என்புழிச் சொல்லானாகும் பொருள், சொல்லுக்குப் பொருள் சொல்லது பொருள், சொல்லின் கண் பொருள் எனவும் வருவனவெல்லாம் இசையாற்றிரிபுட நிற்பனவாம்.

**மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும் (37)**
**அவைதாம்**
**முன்னப் பொருள, புணர்ச்சி வாயில்**
**இன்னஎன்னும் எழுத்துக் கடனிலவே (40)**

மேலைச் சூத்திரத்து விசையாற்றறியும் எனப்ப;டட புணர் மொழிகள் தாம் இடமுதலிய சார்புபற்றிக் குறிப்பாற் பொருள் உறுதி செய்துணர்த்துவனவாம். அவ்வாறன்றிப் புணர் நிலையிடத்து இஃது இப் பொருளை இதனாற் சுட்டுகின்றது என்பதற்குரிய எழுத்து முறைமையை உடையன இல்லை.

யானைக்குக்கோடு கூரிது என்ற வழி எவ்வெவற்றிற்கு? என்னும் ஆராய்ச்சிக்கண் யானைக்கு என்றும் இவற்றுள் எதனது? என்னும் ஆராய்ச்சிக்கண் யானையது என்றும், யானையிடத்து ஏது கூரிது? என்னும், ஆராய்ச்சிக்கண் யானையின் கண் என்றும், பொருள் முடிந்து வருமாதகலின் அவ் ஆய்வின் நோக்கு முன்னப் பொருளாகுமென அறிக.

இனி எழுத்தாற் பொருள் வேறுபடுதலாவது, அவன் கண்டான் - அவற்கண்டான். அவர்கண்டார் அவர்க்கண்டார் என ஓரெழுத்து வேறுபடுதலான் வினைமுதற் பொருளும் செயப்படுபொருளுமாகத் திரிதலாம். பிறவும் அன்ன.

**புணரியல் முற்றியது**

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. குற்றெழுத்துக்கள் பெறும் சாரியை.

   அ) கரம் காரம் கான் ஆ) கரம் இ) காரம் ஈ) கான்

2. உயிரெழுத்துக்கள் நிலைமொழியாக நின்று வருமொழி நாற்கணத்தோடு புணர்தல்

   அ) உயிர் மயங்கியல் ஆ)புள்ளி மயங்கியல் இ)உருபியல்

   ஈ) குற்றியலுகரப் புணரியல்

3. மொழிக்கு முதலாகும் இடையின எழுத்துக்களின் எண்ணிக்கை

   அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 1

4. உ,ஊ,ஒ,ஓ என்னும் நான்கு உயிரும் எவ்வெழத்தோடு வருவதில்லை

   அ) க ஆ) ப இ) ர ஈ) வ

5. வினா எழுத்துகள் எவை?

   அ) ஆ ஏ ஓ ஆ) ஆ எ ஒ இ) அ எ ஒ (ஈ) ஆ ஏ ஐ

**குறு வினாக்கள்**

1. எழுத்துவகைப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. சொல்வகைப் புணர்ச்சியின் இடம் பெறும் சொற்கள் யாவை?
3. பொருள்வகைப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. வேற்றுமைப்புணர்ச்சி என்றால் என்ன?

5. ஆறாம் வேற்றுமை உருபு அகர ஈற்றுச் சொல்லுடன் புணரும் போது பெறும் மாற்றம் யாது?

**கட்டுரை வினாக்கள்**

6. சாரியைகள் யாவை என்று குறிப்பிட்டு அவற்றை விவரி.
7. புணர்மொழிச் சாரியைகளை விவரித்து எழுதுக.
8. எழுத்துச் சாரியைகளை விவரிக்க.
9. ஆகார ஈற்றச் சொல்லை அடுத்து இன் சாரியை இடம் பெறுவதை கட்டுரை வடிவில் எழுதுக .
10. னகர ஈற்றுச் சாரியையுடன் நான்காம் வேற்றுமை உருபு எவ்வாறு புணரும்? விவரி

# (ஆ)தொகை மரபு

## நோக்கம்

மெல்லினம் தோன்றும் இடம் அறிதல், மெல்லெழுத்துக்களின் உறழ்வினை அறிதல், உயிர் ஈறு, மெய்ஈறுகளின் சிறப்புப் புணர்ச்சி, உயர் பெயர்கள் புணர்தல், விரவுப்பெயர், இரண்டாம், மூன்றாம், உருபுகளின் புணர்ச்சி மாற்றங்களை அறிதல், அளவு, நிறை எண்ணுப்பெயர்களின் புணர்ச்சி விதிகளை அறிந்துகொள்ளுதல் .

## தொகை மரபு

தொகுப்பாகக் கூறும் மரபு என்பது இதன் பொருள். ஈண்டுத் தொகுப்பாகக் கூறப்பெறும் புணர்ச்சி இலக்கணங்களைப் பற்றிய இயலை உணர்த்தி நிற்றலின், அன்மொழித் தொகையாம் தொகுத்துக் கூறப்பெறும் புணர்ச்சி இலக்கணங்களேயன்றி அவற்றிற்குரிய சில கருவிகளும், மரூஉ முடிபுகளும் பிறவும் கூறுதலின் இயல் என்னாது மரபென்றார்.

இதன்பின் உயிர்மயங்கியல் முதலாய மூன்று இயல்களுள்ளும் உயிரீறும் புள்ளியீறும் குற்றியலுகரஈறும் நிற்ப அவற்றொடு நாற்கணங்களும் இருவழியானும் புணருங்கால் எய்தும்விதிகள் கூறப்பெறுகின்றன. ஆண்டு நிறுத்த சொல்லின் உயிரீறும் புள்ளியீறும் ஒருங்கெய்தும் விதிகளைக் கூறற்கு ஏலாவாகலான் அவற்றைப் பற்றியும், இரு வகை ஈறுகளும் புணருங்கால் சில ஒத்த விதிகளைப் பெறுதலின் அவற்றைப் பற்றியும், ஒரு சில ஈறுகளையுடைய சொற்கள் நிறுத்தச் சொல்லாகத் தோன்றாமை பற்றியும் சில ஈறுகள் வேற்றுமைப் புணர்ச்சியுள் மாறுபட்டும் அல்வழிப்புணர்ச்சியுள் ஒன்று பட்டும் பொருட்புணர்ச்சிக்கண் பொதுவிதிக்கு மாறுபட்டு நிகழும் ஒரு சார் வேற்றுமைப்புணர்ச்சி பற்றியும், அளவுப் பெயர்களின் முதல் எழுத்துக்கள் பற்றியும் மரூஉ முடிவு பற்றியும் நிகழும் மரபுகளையெல்லாம் தொகுத்துக் கூறுதலின் இவ்வியல் தொகை மரபு என்னும் பெயருடையதாயிற்று.

## இனமெய் மிகல்

**கசதப முதலிய மொழிமேற் றோன்றும்**

**மெல்லெழுத்தியற்கை சொல்லிய முறையான்**

**ஙஞநம என்னும் ஒற்றா கும்மே**

**அன்ன மரபின் மொழிவயி னான** **(1)**

உயிரீறும் புள்ளியீறும் நிற்பக் குறித்து வரும் கசதபக்களை முதலாக உடைய மொழிகளின் மேல், தோன்றும் எனப் பொதுவாகக் கூறப்பெற்ற மெல்லெழுத்திலக் கணமாவது. அத்தகைய வரன் முறையினை உடைய மொழிகளின் கண்ணே ஈட்டுச் சொல்லிய முறைமையான் நிரலே ஙஞநம என்னும் ஒற்றாகமிகும்.

**எ-டு:**

விளங்கொடு விளச்செதிகள், விளந்தோல், விளம்பூ என வரும்.

## இயல்பு ஆதல்

**ஞநம யவவெனும் முதலாகு மொழியும்**

**உயிர்முத லாகிய மொழியும் உளப்பட**

**அன்றி யனைத்தும் எல்லா வழியும்**

**நின்ற சொல்முன் இயல்பா கும்மே** **(2)**

ஞநம யவ என்னும் எழுத்துக்களை முதலாக உடைய மொழிகளும், உயிரெழுத்துக்களை முதலாகவுடைய மொழிகளும் அடங்க, அவ்வனைத்துச் சொற்களும் நிறுத்த சொல்லாக நிற்கும் இருபத்து நான்கு ஈறுகளின் முன் வேற்றுமையும் அல்வழியுமாகிய இருவழியினும் இயல்பாகப் புணரும்.

**எ-டு :**

விளங்கொடு விளஞ்செதிகள் விளந்தோல் என வரும்

**அவற்றுள்**

**மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்**

**சொல்லிய தொடர்மொழி இறுதி யான (3)**

மேற்கூறிய இயல்புகளையும் மூன்றனுள், மெல்லெழுத்துக்களின் இயல்பு மேற்கூறிய வாறன்றி, மொழிமரபினுட் சொல்லிய மூவகை மொழிகளுள் தொடர் மொழிகளின் இறுதிக்கண் உறழ்ந்துவரினும் நீக்கார் ஆசிரியர்

**எ-டு :**

வெதிர்ஞ்ஞெரி, வெதிர்ந்நுனி, வெதிர்ம் முறி என வரும்.

## ண ன ஈற்றுப் புணர்ச்சிகள்

**ண னவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்**

**வினையோ ரனைய என்மனார் புலவர் (4)**

மேற்கூறியவற்றுள் ணகரமும் னகரமும் ஈறாய் நின்றவழி, யாவென் எழுத்தும், ஞாவென் எழுத்தும், வருமொழி வினைச் சொல்லின் முதலாகவரின் அவை பொருளான் ஒத்த தன்னுடைய என்று கூறுவர் புலவர்.

**எ-டு**:

மண் யாத்தார் - பொன் யாத்தார் என்பவை மண் ஞாத்தார் பொன் ஞாத்தார் எனவும் வரும்.

**மொழி முதலாகும் எல்லா எழுத்தும்**

**வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்**

**வேற்றுமை யல்வழித் திரிபிட னிலவே (5)**

மொழிக்கு முதலாகும் எனப்பட்ட இருபத்திரண்டு எழுத்துக்களும் வருமொழி முதலாக வருமிடத்து, ஈறாக நின்ற ணகர னகர மென்ற அவ்இரண்டு எழுத்துக்களும் வேற்றுமை யல்லாதவழித் திரியும் நிலை இலவாம்.

**எ-டு :**

மண்கடிது பொன்கடிது என வரும்.

## லகர னகர ஈற்றுப்புணர்ச்சி

**லன வென வரூஉம் புள்ளி முன்னர்த்**
**தந எனவரின் றனவா கும்மே (7)**

லகர ஈறு, னகராஈறு என வரும் புள்ளியீறுகளின் முன் தகரமுதல் நகர முதல் என வரும் உயிர்மெய்கள் வரின் அவை முறையே றகர னகர உயிர்மெய்யாகத் திரியும் நிலை மொழித் திரிபு புள்ளிமயங்கியளுள் பெறப்படும்.

**எ-டு:**

க஺ றீது, சொற்றிகழும், சொன்னன்று எனவும் பொன்றீது. பொன்னன்று என புணர்ச்சியில் வரும். இவை அல்வழி கற்றீமை, கன்னன்மை, பொற்றீமை, பொன்னன்மை என இவை வேற்றுமைப் புணர்ச்சியில் வரும்.

**ணளவென் புள்ளிமுன் டண எனத் தோன்றும் (8)**

ணள என்று சொல்லப்பெறும் புள்ளிகளின் முன் தகரமும் நகரமும் என்னும் உயிர்மெய் வரின் அவை திரிந்து முறையே டகரமும் னகரமுமாகத் தோன்றும். தகர நகரம் என்பது அதிகாரத்தான் வந்தது.

**எ-டு:**

மண் + தீது = மண்டீது, மண் + நன்று மண்ணன்று எனவும் முள் + தீது - முஃடீது, புள் + தேம்ப புட்டேம்ப எனவும் வரும்.

முன்னிலை வினைச்சொற் புணர்ச்சி

**உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்**

**புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்**

**இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்று**

**ஆயி ரியல வல்லெழுத்து வரிகளே (9)**

உயிரெழுத்து ஈறாகி நிற்கும் முன்னிலை வினைச்சொற்களும், புள்ளி எழுத்து ஈறாகி நிற்கும் முன்னிலை வினைச் சொற்களும் வல்லெழுத்தை முதலாக உடைய சொற்கள்வரின் இயல்பாக முடிவனவும் உறழ்ந்து முடிவனவும் என இரண்டியல்பினை உடையவாகும்.

**எ-டு:**

நட + கொற்றா என்பது நடகொற்றா என்று இயல்பாகவும், நடக்கொற்றா என்று மிக்கும் வரும். இவ்வாறு வருதல் உறழ்ந்து முடிதலாம்.

**ஔ எனவரூஉம் உயிரிறு சொல்லும்**

**ஞநம வென்னும் புள்ளி யிறுதியும்**

**குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட**

**முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே (10)**

ஞநம என்னும் புள்ளியிறுதியும், என்பது உரையாசிரின்மார் கொண்டுள்ள பாடம். அது பிழையானது என்பது பின்னர்க் கூறப்பெறும்.

வருமொழி முதலாக வல்லெழுத்து வருங்காலை ஔ எனச் சொல்ல வரும் உயிரீற்றுச் சொல்லும், ஞநம என்னும் புள்ளியீற்றுச் சொற்களும் அறுவகைக் குற்றியலுகர ஈற்றுச் சொற்களும்அடங்க, அவையாவும் முன்னிலை வினைச் சொற்களாதற்கண் அவை அவ்வீறுகளான் நிறைவுடையனவாகத் தோன்றா (முற்றுதல் - நிறைதல், நிரம்புதல்)

**எ-டு:**

கௌவு கொற்றா, உரிஞு கொற்றா, வௌவு கொற்றா என வரும்.

## உயர்திணைப் பெயர்களின் புணர்ச்சி

**உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்**

**புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்**

**எல்லா வழியும் இயல்பென மொழிய (11)**

உயிரெழுத்து ஈறாகிய உயர்திணைப் பெயர்களும் புள்ளி எழுத்து ஈறாகிய உயர்திணைப் பெயர்களும் அல்வழி வேற்றுமை என்னும் எல்லா இடத்தும் திரிபின்றிப் புணரும் எனக் கூறுவர் ஆசிரியர்.

**எ-டு :**

நம்பி, நங்கை, பெண்டாட்டி, அவன், அவள், அவர் என நிறுத்தி, குறியன், தீயன், பெரியன், குறியள், சிறியள், தீயன், பெரியன், குறியர்,

சிறியர், தீயர், பெரியர் எனக் கூட்டி அல்வழிக்கண் இயல்பாமாறும். அவற்றொடு கை, செவி, தலை, புறம் எனக் கூட்டி வேற்றுமைக்கண் இயல்பாமாறும் கண்டு கொள்க. இவற்றுள் நகரம் வகர ளகர ஈறுதிரிதல் கருவித் திரிவென அறிக.

**அவற்றுள்**

**இகர ஈற்றுப்பெயர் திரிபு னுடைத்தே (12)**

மேற்கூறிய இருவகை ஈறுகளுள் இகர ஈற்று உயர்திணைப் பெயர் திரிபுமிட முடையதாகும். இடம் என்றது ஈண்டு வேற்றுமை வழியைக் குறிப்பாலுணர்த்தி நின்றது.

**எ-டு:**

நம்பிப்பேறு என வரும்.

## விரவுப் பெயர்களின் புணர்ச்சி

**அஃறினை விரவுப் பெயர் இயல்புமா ருளவே (13)**

அஃறிணைப் பொருள் கருதி வரும் விரவுப்பெயர்கள் இயல்பாதலும் உளவாம். உம்மையான் திரிந்து வருதலும் உளவெனக் கொள்க.

ஒவ்வொரு திணையுள்ளும் பால்பற்றியும் எண்ணுப்பற்றியும் விரவுப் பெயர்கள் உளவாதலின் அஃறிணைப் பொருட்டாய் வரும். விரவுப் பெயர் என்பது விளங்க 'அஃறினை விரவுப் பெயர்" என்றார். இனி சாத்தன், சாத்தி, கோதை, தாய், தந்தை, மகன், மகள் என இயற்பெயர் முதலாக முறைப் பெயரீறாக வரும் விரவுப் பெயர்களுள் அகத்தோத்தினுள் விதந்து கூறப்பெற்றவை ஒழிந்த ஏனையவற்றை ஈண்டு கொள்க.

**எ-டு:**

சாத்தி + கண்டது சாத்திகண்டது - இயல்பு

சாத்தி + புல் - சாத்திப்புல் - மிக்குமுடிந்தது

உயிரீற்று மெய்யீற்று வேற்றுமைப்புணர்ச்சி

## மூன்றாம் வேற்றுமைப்புணர்ச்சி

**புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்**
**வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான்**
**கம்மி னாகியி தொழிற்சொல் முன்வரின்**
**மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்**
**அம்முறை இரண்டும் உரியவை**
**உளவே வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும் (14)**

அகத்தோத்தினுள் புள்ளியீற்றுச் சொல்லும் உயிரீற்றுச் சொல்லும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வல்லெழுத்து மிகுமெனச் சொல்லிய முறைமையானே, மூன்றாம் வேற்றுமைப் பொருள் பற்றி வரும் தம்மின் உளவாகிய வினைச்சொல், குறித்து வருகிளவியாய்வரின், வல்லெழுத்துப் பட்டாங்கு (இயல்பு) ஆதலும் உறழ்ந்து தோன்றலும் ஆகிய அம்முறைமை இரண்டும் உரியவாக உள, ஆதலின் அவ்வேற்றுமையிடத்து அவற்றைப் போற்றிக் கொள்ளல் வேண்டும்.

**எ-டு:**

நாய் - புலி என நிறுத்திக் கோட்பட்டான், சாரப்பட்டான், திண்டப்பட்டான், பாயப்பட்டான் எனக் கூட்டி இயல்பாதலையும் சூர் வளி

என நிறுத்திக் கோட்பட்டான் முதலியவற்றைக் கூட்டி சூர் கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான் என உறழ்வாதலையும் கண்டு கொள்க.

## இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி

**மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்**
**இயற்கை மருங்கினி கற்கை தோன்றலும்**
**உயர்மிக வருவழி உயிர்கெட வருதலும்**
**சாரியை இயற்கை உறழத் தோன்றலும்**
**உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்**
**மெய்பிறி தாகிடத்து இயற்கை யாதலும்**
**அன்ன பிறவும் தன்னியல் மருங்கின்**
**மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்**
**சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்**
**அஃறினை விரவுப்பெயர்க் கவ்வியல் நிலையலும்**
**ஐகார வேற்றமைத் திரிபென மொழிப** **(15)**

1. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும் மெல்லெழுத்து மிக வேண்டுமிடத்து வல்லெழுத்துத் தோன்றிவருதலும்

   **எ-டு:** விளங்கோடு (எழு -218) என வருவது விளக்குறைத்தான் என வருதலும்.

2. வல்லெழுத்துமிகுவழி மெலிப்பொடு தோன்றலும் வல்லெழுத்து மிக வேண்டுமிடத்து மெல்லெழுத்துத் தோன்றி வருதலும்

**எ-டு** : மரக்குறை என வருவது மரங்குறைத்தான் என வருதலும்

3. இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும் திரிபின்றி இயல்பாக வேண்டுமிடத்து மிக்குத் தோன்றி வருதலும்

**எ-டு** : தாய் பகைதான் என வருவது தாய்ப்பகைத்தான் என வருதலும்

4. உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும் உயிரெழுத்து மிக்குவர வேண்டுமிடத்து கெட்டு வருதலும்

**எ-டு**: பலா அக்குறைத்தான் என வருவது பலாக் குறைத்தான் என வருதலும்

5. சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும் சாரியை உளதாதல் வேண்டுமிடத்துச் சாரியை இன்றி வருதலும்

**எ-டு** : வண்டின் கால் என வருவது வண்டு கால் என வரும்.

6. சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும் சாரியை கெடாது நிற்குமிடத்துத் தன் உருபாகிய வடிவு நிலைபெறுதலும்

**எ - டு**: வண்டு + கொணர்ந்தான் வண்டினைக் கொணர்ந்தான்

7. சாரியை இயற்கை உறழத் தோன்றலும் சாரியை பெறும் இயல்புள்ளவை சாரியை பெறாமல் இயல்பாக நிற்குமிடத்து வல்லெழுத்து உறழ்ந்து தோன்றுதலும்

**எ - டு** : புளியங்கோடு என்பது புளிக்கோடு என வருதலும்

8. உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும் உயர் திணைப் பெயரிடத்துத் தன் உருபு (வடிவு) மறையாது வருதலும்

**எ - டு**-நம்பி + கொணர்ந்தான் நம்பியைக் கொணர்ந்தான்

9. அஃறினை விரவுப் பெயர்க் கவ்வியல் நிலையிலும் அஃறிணைப் பொருட்கண் வரும் விரவுப் பெயர்க்குத் தன் உருபு ஒழியாது வருதலும் என்னும் இலக்கணம் நிலைபெறுதலும்

**எ-டு:** கொற்றன் + கொணர்ந்தான் கொற்றனைக் கொணர்ந்தான்

10. மெய்பிறிதாகிடத்து இயற்கையாதலும் மெய்ப்பிறிதாதலாகிய திரிபு பெற்று வரவேண்டுமிடத்துத் திரியாமல் இயல்பாக வருதலும்

**எ-டு:** மட் + கொணர்ந்தான் மண்கொணர்ந்தான்

## இகர ஐகார ஈற்றுப் பெயர்கள்

**வேற்றுமை யல்வழி இ ஐ என்னும்**
**ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைய**
**அவைதாம்,**
**இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்**
**உறழ்பா குநவும் என்மனார் புலவர்** **(16)**

வேற்றுமை வழியல்லாத அல்வழிப்புணர்ச்சிக்கண் இகர ஐகார ஈற்றுப் பெயர்கள், மூவகை முடிபு நிலைமையை உடைய அவையாவன வல்லெழுத்துக்களின் இயல்பாவனவும் மிகுவகை உறழ்வனவும் என்று கூறுவர் புலவர்.

**எ-டு:**

கிளி + குறிது - கிளிகுறிது எனவும் கிளிக் குறிது எனவும் வரும்.

ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் இ. ஐ

**சுட்டு முதலாகிய இகர இறுதியும்**

**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**

**சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்**

**யாவென் வினாவின் ஐயென் இறுதியும்**

**வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்**

**சொல்லிய மருங்கின் உளவென மொழிப** **(17)**

சுட்டெழுத்தினை முதலாகக் கொண்ட இகர ஈற்றுச் சொற்களும், எகரத்தை முதலாகக் கொண்ட இகர ஈற்று வினாச்சொல்லும் சுட்டெழுத்தாகிய உறுப்பு நீண்ட ஐகார ஈற்றுச் சொற்களும், யாவென்னும் வினாவை முதலாக உடைய ஐகார ஈற்றுச் சொல்லும் மேலே இகர ஐகார ஈற்றுக்குச் சொல்லியாங்கு வல்லெழுத்து மிக்கு வருவனவும் உறழ்ந்து வருவனவும் உள என்று கூறுவர் ஆசிரியர்.

**எ-டு :**

1 . சுட்டு முதலாகிய இகர ஈற்று

அதோளி + கொண்டான் அதோளிக்கொண்டான்

இதோளி + கொண்டான் இதோளிக்கொண்டான்

2. எகரத்தை முதலாகக் கொண்ட இகர ஈற்று வினாச் சொல்

எதோளி + கொண்டான் = எதோளிக் கொண்டான்

3. கட்டெழுத்து நீண்ட ஐகார ஈற்றுச் சொல் ஆண்டை + கொண்டான் ஆண்டைக் கொண்டான்

4. யா என்ற வினா முதலழுத்தாகக் கொண்ட ஐகார ஈற்றுச் சொல் யாண்டை + சென்றான் யாண்டைச் சென்றான்

இ, ஐ ஈற்றுச் சுட்டி, வினாப் பெயர்கள் மிக்கும் மிகாமலும் உழற் சியாய் வரும்.

| | | |
|---|---|---|
| அவ்வழி + கொண்டான் | - | அவ்வழி கொண்டான் அவ்வழிக் கொண்டான் |
| எவ்வழி + கொண்டான் | - | எவ்வழி கொண்டான் எவ்வழிக் கொண்டான் |
| ஆங்கவை + கொண்டான் | - | ஆங்கவை கொண்டான் ஆங்கவைக் கொண்டான் |
| யாங்கவை கொண்டான் | - | யாங்கவை கொண்டான் யாங்கவைக் கொண்டான் |

## நெடில் முன்னும் குறில் முன்னும் ஒற்று

**நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்**
**குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்**
**அறியத் தோன்றிய நெறியிய லென்ப (18)**

நெட்டெழுத்துக்கள் முன்னிற்கும் ஒற்றுக் கெடுதலும், குற்றெழுத்தின் முன்னிற்கும் ஒற்றுத் தன் வடிவு இரட்டுதலும் யாவரும் அறியுமாறு வந்த நெறிப்பட்ட இலக்கணம் என்று கூறுவர் நூலோர்.

**எ-டு:**

1. நெடில் முன் ஒற்று கெடுதல்

   கோல் + தீது கோறீது

   கோல் + நன்று -கோனன்று

2. குறில் முன் தன்னொற்று இரட்டல்

மண் + அகல், மண் + ண் + அகல் மண்ணகல்

பொன் + அகல், பொன் + ன் + அகல் பொன்னகல்

## குறில் முன் ஒற்று இரட்டாத இடம்

**ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
**கூறிய குற்றொற் றிரட்ட லில்லை**
**ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்**
**நெடுமுதல் குறுகு மொழி முன் னான** **(19)**

நெட்டெழுத்தாகிய முதல் எழுத்துக்கள் குறுகி வரும் எனப்பட்ட மொழிகளின் முன்னர் வந்த ஆறாவதன் உருபின் கண்ணும் நான்காவதன் உருபின் கண்ணும் மேல் இரட்டுமெனக் கூறிய குற்றொற்று இரட்டுதல் இல்லை, மற்று, அந்நிலைமொழி யீற்றின்கண் நிற்கும் ஒற்று ஓர் அகர எழுத்தைப் பெற்று நிற்கும்.

## எ-டு:

வருமொழியில் ஆறாம் வேற்றுமை உருபு வர நெடில் குறுகுதலும் அகரம் ஏற்றலும்

தாம் + அது, தம் + அது தமது (குறுகல்)

தாம் + கு, தம் + அ + க் + கு - தமக்கு (அகரம் பெறுதல்)

## நும் என்னும் சொல்லிலும் இரட்டாது

**நும்என் இறுதியும் அந்நிலை திரியாது** **(20)**

நும் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயரிறுதியும் மேற்கூறிய இலக்கணத்தின் மாறுபடாது.

**எ-டு:**

நும் + அது - நுமது

நும் + கு, நும் + அ + கு. நும் + அ + க் + கு, நுமக்கு

உகரம் பெறும் மெய்யீற்றுப் புணர்ச்சி

**உகரமொடு புணரும் புள்ளி யிருதி**

**யகரமும் உயிரும் வருவழி இயற்கை (21)**

அகத்தோத்தினுள் உகரம் பெற்று வருமொழியொடு புணரும் எனப் பெற்ற தொழிற்பெயர் அஃறிணைப் பெயர், பெயர்ப் பொருட்டாய் வரும் வகர ஈற்று உரிச்சொல் ஆகியவற்றின் புள்ளியீறுகள் வருமொழி முதலாக யகரமும் உயிரும் வருமிடத்து உகரம் பெறாது இயல்பாகப் புணரும்.

சொல்லின் இறுதியில் வரும் மெய்யெழுத்துக்களில் ஞ், ந் என்னும் எழுத்துக்கள் உகரச் சாரியை பெற்று வரும். இவை நிலைமொழியாக நிற்க வருமொழி முதலில் யகர மெய்யும் உயிரெழுத்தும் வந்தால் இயல்பாகப் புணர்வதுடன் உகரச் சாரியையும் வராது.

**எ-டு:**

உரிஞ் + யானா உரிஞ்யானா

பொருந் + யானா =பொருந்யானா என்பதைப் போல உரிஞ்ஆதா, பொருந் ஆதா என வரும்

அளவு, நிறை, எண்ணுப் பெயர்ப்புணர்ச்சி

**உயிரும் புள்ளியும் இறுதி யாகி**
**அளவும் நிறையும் எண்ணும் சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**
**தத்தங் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வரூஉங் காலந் தோன்றின்**
**ஒத்த தென்ப ஏஎன் சாரியை** **(22)**

உயிரெழுத்தும் புள்ளிஎழுத்தும் இறுதியாகி நிறையினையும் எண்ணினையும் குறித்து வருவனவாக உள எனச் சொல்லப்பட்ட எல்லா அளவைச் சொற்களும் தத்தமக்கு இனமாய்த் தம்மிற் குறைந்தவையாய் அவ்அளவைச் சொற்கள் தம்முன் வரும் காலந்தோன்றின் இடை ஏ என்னும் சாரியை எழுத்தைப் பெற்று வருதல் இலக்கணத்திற்கு ஒத்தது எனக் கூறுவர் புலவர்.

உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் இறுதியில் கொண்ட அளத்தல், நிறுத்தல், எண்ணல் ஆகிய அளவைப் பெயர்கள் தம்சை சுட்டித் தம் அளவின் கீழ் வருவனவற்றைக் குறிப்பவையாக வரும் போது வை ஏகாரச் சாரியை பெற்று வரும்.

**எ-டு:**

ஒன்று + கால் = ஒன்றேகால்

ஒன்று + முக்கால் ஒன்றே முக்கால் என ஏ காரம் பெற்று வரும்.

## அரை வரும் போது ஏகாரம் வராமை

**அரைஎன வரூஉம் பால்வரை கிளவிக்குப்**

**புரைவ தன்றாற் சாரியை இயற்கை** **(23)**

மேற்கூறிய அளவைப் பெயர்களின் முன் அரை என்று சொல்லப்பட்டு வரும். ஒரு பொருளின் செம்பாதியை வரைந்துணர்த்தும் சொல்லிற்கு இடையே, ஏ என்னும் சாரியை பெறும் இலக்கணம் ஒப்பதன்று எனக் கூறுவர் புலவர்.

மேற்கூறிய வரி அளவைப் பெயர்கள் ஏகாரம் பெற்று வரும் எனினும் பாதியைக் குறிக்கும் போது ஏகாரச் சாரியை பெறுவதில்லை.

**எ-டு:**

ஒன்று + அரைப்படி - ஒன்றரைப்படி

இரண்டு + அரைப்படி இரண்டரைப்படி

என ஏகாரச்சாரியை பெறாமல் வரும்.

## குறை எனும் சொல் வரல்

**குறையென் கிளவி முன்வரு காலை**

**நிறையத் தோன்றும் வேற்றுமையியற்கை (24)**

குறை என்னும் அளவுப்பெயர் மேற்கூறிய அளவைப் பெயர்களின் முன் வருமிடத்து வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறிய இலக்கணத்தைப் பெற்றுச் சாரியை இல்லாத குறை தோன்றாமல் நிறைவு பெறத் தோன்றும்.

அளவைப் பெயருடன் குறை என்னும் சொல் வரும் போது வேற்றுமைப் புணர்ச்சியின் தன்மைக்கு ஏற்ப ஒற்று மிகுந்து வரும்.

**எ-டு:**

கலம் + குறை =கலக்குறை

படி + குறை =படிக்குறை

## குற்றியலுகர அளவுப் பெயருடன் குறை

**குற்றியலுகரக் கின்னே சாரியை (25)**

குற்றியலுகர ஈற்று அளவைப் பெயர்களின் முன் குறை என்பது புணருமிடத்து இன் சாரியை பெறும்.

**எ-டு:**

உழக்கு குறை, உழக்கு இன் குறை ஒன்று + குறை, ஒன்று + இன் + குறை உழக்கின்குறை ஒன்றின்குறை என வரும்

## நலம் முன் நிறை

**அத்திடை வரு உம் கலமென் அளவே (26)**

கலமென்னும் அளவுப் பெயர் குறை என்னும் சொல்லோடு புணருங்கால் அத்துச் சாரியை இடையே வரும்.

**எ-டு:**

கலம் + குறை, கலம் + அத்து + குறை =கலத்துக்குறை என வரும்.

## பனை, கா என்னும் அளவைகள் முன் குறை

**பனையென் அளவும் காவென் நிறையும்**

**நினையுங் காலை இன்னொடு சிவனும் (27)**

பனை என்னும் அளவுப் பெயரும் காவென்னும் நிறைப்பெயரும் குறை என்பதனொடு புணருமிடத்து இன்சாரியையொடு பொருந்தி வரும்.

**எ-டு:**

பனை + குறை. பனை + இன் + குறை = பனையின் குறை, கா + குறை. கா + இன் + குறை = காவின் குறை என வரும்

## அளவு நிறைப் பெயர்களின் முதல் எழுத்துக்கள்

**அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி**
**உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே**
**அவைதாம்**
**க ச த ப என்றா நமவ என்றா**
**அகர உகரமொடு அவையென மொழிப (28)**

அளவுப்பெயர்கட்கும் நிறைப் பெயர்கட்கும்மொழி முதலாகி வருவனவாயுள்ளவை எனத் தொல்லாசிரியரான் வரையறுத்துக் கூறப்பெற்றவை ஒன்பது எழுத்துக்களேயாம். அவையாவன, சு ச த ப க்களும் நமவக்களும் அகரமும் உகரமும் ஆகிய அவை என்று சொல்லுவர் புலவர்.

அளவுப்பெயருக்கும் நிறுத்தற் பெயருக்கும் முதல் எழுத்தாக க, ச, த, ப, ந, ம, வு, அ, உ என்னும் ஒன்பது எழுத்துக்கள் வரும்.

### எ-டு:

**அளவுப் பெயர்**

கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு

**நிறுத்தற் பெயர்**

கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை

**ஈறியல் மருங்கின் இவை இவற்றியல்பெனக்**

**கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்**

**மெய்த்தலைப்பட்டவழக்கொடு சிவணி**

**ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே** **(29)**

உயிரும் புள்ளியும் குற்றியலுகரமும் நின்று வருமொழியொடு கூடி நடக்குமிடத்து, இவற்றின் புணர்நிலை இயல்பு இவை, எனக் கூறிய சொற்களின் பலவாறான நெறிகள் எல்லாம். அவற்றின் பொருண்மை சார்ந்த வழக்கொடு பொருந்திப் புணரும் நிலைமைக் கண் பிறவாறு ஒத்தவை எல்லாம் உரியவாம்.

என்றது: கூறப்பெறாது நின்ற இலக்கணத்தான் சான்றோர் வழக்காய்ப் புணர்ந்து நடக்கும் இயல்பெல்லாம் அறிந்து மொழியியலுக்கு மாறுபடாதவற்றை எல்லாம் புணரியில் நெறியாகக் கொள்க.

**பலரறி சொன்முன் யாவர் என்னும்**

**பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை**

**ஒன்றறி சொல்முன்னும் யாது என் வினாவிடை**

**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**

**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே** **(30)**

உயர்திணைப் பல்லோரறியுஞ் சொல்முன் வரும் யாவர் என்னும் வினாப் பெயரின் இடையே உள்ள வகர உயிர்மெய் கெடுதலும், அஃறினை ஒன்றறி சொல்முன் வரும் யாது என்னும் வினாப் பெயரின் இடையே ஒன்றிய வகர

உயிர் மெய் தோன்றி வருதலும் ஆகிய இரண்டும் மரூஉ மொழிகளின் பாங்காகிப் பயின்று திரியும்.

## எ-டு:

அவர் யார், மாந்தர் யார், அந்தணர் யார் எனவும் அது யாவது எனவும் வரும். இவை இரண்டும் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉவாகும்.

## தொகுப்புரை:

உயிர் ஈறு மெய்ஈறுகளின் பொதுப்புணர்ச்சி, விரவுப்பெயரின் இயல்பு, மூன்றாம் வேற்றுமை முடிபு, இரண்டாம் வேற்றுமைத்திரிபு,அளவு நிறை எண்ணுப்பெயர்கள் புணர்வதற்குரிய விதிகள், அளவு, நிறைப்பெயர்களில் மொழிமுதலாகும் எழுத்துக்கள் இலக்கணத்தொடு பொருந்தி வரும்.

### தொகைமரபு முற்றியது

### (அ) தொகை மரபு

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வேற்றுமையில் நிலைமொழி ணகரஈறு வருமொழி வல்லெழுத்துடன் புணரும்போது

அ) வல்லொற்றுமிகும் ஆ) ணகரம் டகரமாகும்

இ) மெல்லொற்றுமிகும் ஈ) ணகரம் தகரமாகும்

2. வடக்கு +கிழக்கு எவ்வாறு புணரும்?;

அ) வடக்குகிழக்கு ஆ) வடகிழக்கு

இ) வடக்கிழக்கு ஈ) வடக்கேகிழக்கு

3. பத்து +ஆயிரம் =

அ) பத்தாயிரம் ஆ) பத்துஆயிரம்

இ) பதினாயிரம் ஈ) பன்னிரண்டுஆயிரம்

4. மூன்று+உழக்கு =

அ) மூன்றுஉழக்கு ஆ) மூவுழக்கு

இ) மூவ்உழக்கு ஈ) மூன்உழக்கு

## குறு வினாக்கள்

1. இனமெய் மிகும் இடத்தை விளக்குக.
2. முன்னிலை வினைச்சொற் புணர்ச்சியை விளக்குக.
3. உயர்திணைப் பெயர்களின் புணர்ச்சியை விளக்குக.
4. விரவுப் பெயர்ப் புணர்ச்சியை விளக்குக.
5. இகர, ஐகார ஈற்றுப் பெயர்ப்புணர்ச்சி விளக்குக.

## கட்டுரை வினாக்கள்

1. அளவைப் பெயர்கள் பெறும் சாரியைகள் யாவை? விளக்குக.
2. மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியை விவரி.
3. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை விவரிக்க.
4. இகார ஐகார ஈற்றுப் பெயர்ப் புணர்ச்சியை விவரிக்க.
5. அளவு, நிறை, எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியை விவரி.

# (இ) உருபியல்

## நோக்கம்

உயிர் ஈறுகள், வினாச்சொல், சுட்டுச்சொல், மரப்பெயர்கள் புணரியல் பெறும் மாற்றங்களை அறிதல், மெய் ஈறுகள், சுட்டுச்சொற்கள், மகர ஈறுகள், தம், நம், நும், யாம், எல்லாம், எல்லாரும், எல்லீரும் எனும் சொற்களின் புணர்ச்சி நிலைப்பாடுகளையும், தான், யான், அழன், புழன், யாது, அஃது என்னும் பெயர்கள் மற்றும் திசைப்பெயர்களின் புணர்ச்சி மாற்றங்களை அறிதல் இவ்அலகினைக் கற்பதன் நோக்கம் ஆகும்.

## உருபியல்

ஐ முதல் கண் ஈற்றாகிய ஆறு உருபுகளும் எல்லா வகையான பெயர்களோடு இணையும் இலக்கண நெறி பற்றி உணர்த்துதலின் இஃது உருபியல் என்னும் பெயர்த்தாயிற்று. அஃதாவது பெயர்களுடன் வேற்றுமை உருபுகள் சேரும் முறையை உணர்த்துவது உருபியலாம். இவ்வாறு பெயர்களுடன் வேற்றுமை, உருபு சேரும் போது சாரியைகள் தோன்றும்.

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும் அக்கூற்று ஆறு ஈறுகளை உடைய சொற்களின் முன் வரும் வேற்றுமை உருபுகட்கு இடையே வருவது இன்சாரியையாம் ஏகாரம் இசை நிறை.

**எ-டு:**

விள + ஐ. விள + இன் + ஐ விளவினை

விள + ஒடு, விள + இன் + ஒடு = விளவினொடு

விள + கு, விள + இன் + கு விளவிற்கு

விள + இன், விள + இன் + இன் விளவின்

விள + அது. விள + இன் + அது விளவினது

விள + கண், விள + இன் + கண் விளவின்கண்

இதைப்போலவே ஆகார ஈற்றுச் சொற்கள் இன் சாரியைப் பெற்று பலாவிளை பலாவினொடு, பலாவிற்கு, பலாவின், பலாவினது, பலாவின்கண் என்று வரும். உகர ஈறு கடுவினை கடுவினொடு, கடுவிற்கு, கடுவின், கடுவினது. கடுவின்கண் என்று வரும். ஊகார ஈறு கழுஉவினை, கழுஉவினொடு, கழுஉவிற்கு, கழுஉவின், கழுஉவினது, கழுஉவின் கண் என வரும் ஏகார ஈறு சேவினை, சேவினொடு, சேவிற்கு, சேவின், சேவினது, சேவின்கண் என வரும் ஔகார ஈறு வெளவினை வெளவினொடு, வெளவிற்கு வெளவின் வெளவினது வெளவின்கண் என வரும்.

**அ ஆ உ ஊ எ ஔ எண்ணும்**

**அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்**

**வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை (1)**

## வற்றுச்சாரியை

பன்மையைச் சுட்டி வரும் அகர ஈற்றுப் பெயர்களின் முன்வரும் உருபு வற்றென்னும் சாரியை பெரும்.

**எ-டு:**

பல்ல + ஐ. பல்ல வற்று + ஐ பல்லவற்றை என்பது போல பல்லவற்றொடு, பல்லவற்றிற்கு பல்லவற்றின், பல்லவற்றது. பல்லவற்றின்கண் என வரும்

**பல்லவை நுதலிய அகர இறுபெயர்**

**வற்றொடு சிவணால் எச்ச மின்றே (2)**

யா என்னும் ஓர் எழுத்து ஒருமொழியாகிய வினாச் சொல்லுடன் உருபு சேரும் போது வற்றுச் சாரியை வரும்.

**எ-டு:**

யா+ ஐ, ஐ+வற்று + ஐ யாவற்றை என்பது போல யாவற்றொடு, யாவற்றிற்கு, யாவற்றின், யாவற்றது. யாவற்றின் கண் என வரும்.

**யாவென் வினாவும் ஆயியல் திரியாது (3)**

சுட்டெழுத்துக்களை முதலாக உடைய உகர ஈற்று சுட்டுப்பெயர்களின் உகரம், உருப வருங்கால் அன்சாரியையோடு பொருந்தித்தான் ஊர்ந்து நின்ற மெய் எழுத்துக் கெடுதலைத் தவிர்த்துத் தான் மட்டும் கெடும்.

**எ-டு:**

அது + ஐ. அது + அன் + ஐ, அத் + அன் + ஐ. அதனை என்பது போல அதனொடு, அதற்கு, அதனின், அதனது, அதன்கண் என வரும். இது - உது என்பவற்றொடும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

**சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி**

**ஒட்டிய மெய்யொழித்து உகரங் கெடுமே (4)**

கட்டெழுத்தினை முதலாக ஐகார ஈற்றுச் சொல்லன் இறுதி, உருபுருவருங்கால்வற்றென்னும் சாரியையொடும் பொருந்தி நிற்றற்கு உரித்தாகும்.

**எ-டு**:

அவையற்றை, இவையற்றை, உவையற்றை என வரும்.

பிற உருபுகளொடும், ஒட்டிக் கொள்க. வற்றினது வகரக்கேடு புணரியில் நூற்பா 122இல் கூறப்பட்டது. வகரமெய் கெட்ட விடத்து யகரம் உடம்படு மெய்யாக வரும். சில இடங்களில் வகரம் ஐயுடன் கெடுதலும் உண்டு.

**எ-டு**:

அவை + ஐ, அவை + வற்று + ஐ, அவை + அற்று + ஐ

அவையற்றை அல்லது அவற்றை என வரும். இதைப் போலவே அவையற்றொடு அவற்றொடு அவையற்றுக்கு அவற்றுக்கு, அவையற்றின் அவற்றின் அவையற்றது அவற்றது அவையற்றின் கண் - அவற்றின் கண் என வரும்.

இவை - உவை என்பவற்றொடும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

**சுட்டு முதலாகிய ஐயென் இறுதி**

**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே (5)**

**யாஎன் வினாவின் ஐயென் இறுதியும்**
**ஆயியல் திரியாது என்மனார் புலவர்**
**ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே (6)**

## நீ என்பது அன்சாரியை பெறும்

நீ என்னும் ஓர் எழுத்துப் பெயருடன் உருபுகள் சேரும் போது நெடில் இறுகுவதுடன் னகர ஒற்றுத் தோன்றும்.

**எ-டு**:

நீ + ஐ, நீ + அன் + ஐ, நி + அன் + ஐ, நி + ன் + ஐ, நி + ன் + ன் + ஐ = நின்னை என்பது போல நின்னொடு, நினக்கு, நின்னின், நினது, நின்கண் என வரும்.

**நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**
**ஆ வயின் னகரம் ஒற்றா கும்மே (7)**

## ஒன் சாரியை

ஒ என்னும் எழுத்தை இறுதியில் கொண்ட சொற்கள் உருபுடன் சேரும் போது 'ஒன்' என்னும் சாரியை பெற்று வரும்.

**எ-டு**:

கோ + ஒன் + னை கோஒனை என்பதைப் போல கோஒனொடு, கோஒற்கு, கோஒனின், கோஒனது, கோஒன்கண் என வரும்.

**ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை (8)**

## அத்துச்சாரியை

அகரம் ஆகாரம் என்னும் எழுத்துக்களை ஈறாக உடைய மரப்பெயர் சொற்களுக்கு முன்வரும் ஏழனுருபு இன் சாரியையேயன்றி அத்துச் சாரியையொடும் பொருந்தி வரும்.

**எ-டு**:

விளம் + கண், விளம் + அத்து + கண் விளவத்துக்கண் பலா + கண், பலா + அத்து + கண் = பலாவத்துக்கண். (வ் - உடன்படுமெய்)

**அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு**
**அத்தொடும் சிவணும் ஏழன் உருபே (9)**

## குற்றியலுகர ஈற்றுப் புணரியலில் சாரியைகள்

குற்றியலுகர இறுதியைப் பெற்ற சொற்கள் உருபுடன் சேரும் போது இன், அன், ஆன் முதலிய சாரியைகள் தோன்றும்.

## இன்-சாரியை

நிலைமொழியின் இறுதியில் குற்றியலுகரத்தைக் கொண்ட சொற்கள் உருபுடன் புணரும் போது இன் சாரியைப் பெற்றுப் புணரும்.

**எ-டு**:

மத்து + ஐ. மத்து + இன் + ஐ, மத்த் + இன் + ஐ மத்தினை என்பதைப் போல மத்தினொடு, மத்திற்கு, மத்தின், மத்தினது, மத்தின் கண் என வரும்,

**குற்றிய லுகரத்து இறுதி முன்னர்**

**முற்றத் தோன்றும் இன்என் சாரியை (23)**

குற்றியலுகர இறுதி முன்னர் இன்சாரியை தோன்றுவது நெட்டெழுத்துத் தொடர்க் குற்றியலுகரத்தின் பின் ஒற்றுமிகும். ஒரு சார் மொழிகள் அல்லாத ஏனைய சொற்களிடத்தேயாம்.

நெடில் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகர ஈறுகள் ஒற்று இரட்டித்து உருபுடன் புணரும். அவ்வாறு புணரும் போது இன் சாரியை பெறும் பிற குற்றியலுகரங்கள் இவ்வாறு இரட்டிப்பதில்லை.

**எ-டு**:

நாடு + ஐ. நா + ட் + உ + ஐ, நா + ட் + ட் + ஐ. நாட் + ட் + இன் + ஐ = நாட்டினை என்பதைப் போல நாட்டினொடு, நாட்டிற்கு, நாட்டின், நாட்டது. நாட்டின் கண் என வரும்.

**நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்**
**அப்பால் மொழிகள் அல்வழி யான** **(24)**

மேலே ஒற்றுமிகத் தோன்றும் அப்பால் மொழிகள் எனப்பட்டவைதாம். இயல்பாகப் புணரும் இலக்கணத்தை உடையன என்று கூறுவர் புலவர்.

இயற்கை - இலக்கணம்;

செயற்கை, செய்கை, செயற்பாடு

இரட்டித்து உருபை ஏற்கும் என்று குறிப்பிடப்பட்ட நெடில் தொடரைத் தொடர்ந்து வரும் குற்றியலுகர ஈறுகள் சாரியை பெறாமலும் வரும்.

**எ-டு**:

ஆடு + ஐ - ஆட் + உ + ஐ ஆட் + ட் + உ + ஐ, ஆட் + ட் + ஐ ஆட்டை என்பதைப் போல ஆட்டின், ஆட்டுக்கு, ஆட்டின், ஆட்டது, ஆட்டுக்கண் என வரும்.

**அவைதாம்**

**இயற்கைய வாகும் செயற்கைய என்ப** **(25)**

## குற்றுகர எண்ணுப் பெயர்க்கு அன் சாரியை

எண்ணுப் பெயராக வரும் குற்றுகர ஈறுகள் உருபொடு புணருங்கால் அன்சாரியையொடு பொருந்தி வரும்.

**எ-டு**:

ஒன்று + ஐ, ஒன்று + அன் + ஐ = ஒன்றனை என்பதைப் போல ஒன்றனொடு, ஒன்றுக்கு. ஒன்றனின், ஒன்றனது, ஒன்றன்கண் என வரும்.

**எண்ணின் இறுதி அன்னொடு சிவனும்** **(26)**

## முற்றுகர எண்ணுப் பெயர்க்கு அன் சாரியை

ஏழ் என்னும் எண்ணுப் பெயரிறுதி முன் உருபு வருங்கால் அன் என்னும் சாரியை தோன்றுதல் இலக்கணமுடையது.

ஏழு என்னும் முற்றுகர எண்ணுப் பெயர் உருபுடன் புணரும் போதும் அன் சாரியை பெற்றுப் புணரும்.

**எ-டு**:

ஏழு + ஐ. ஏழு + அன் + ஐ = ஏழனை என்பதைப் போல ஏழனொடு, ஏழனுக்கு ஏழனின், ஏழனது. ஏழன்கண் என வரும்.

**அன்என் சாரியை ஏழன இறுதி**

**முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப** **(22)**

## ஆன் - சாரியை

ஒன்று முதலாக எட்டீறாக உள்ள எண்ணுப் பெயர்களைப் பத்து என்னும் சொல் தொடர்ந்து பண்புத் தொகையாக நிற்கும் எல்லா எண்ணுப் பெயர்களையும் உருபொடு புணர்த்துக் கூறுமிடத்து ஆன் என்னும் சாரியை இடையே வருதலும் குற்றமின்று அச்சாரியை வருங்கால் பஃது (பத்து) என்னும் சொல்லிடத்துள்ள அஃது என்னும் சொற்பகுதி கெடும், பகர மெய் கெடாது நிற்கும்.

ஒன்று முதல் எட்டு வரையிலான எண்ணுப்பெயர்களுடன் பத்து என்னும் எண்ணுப் பெயர் சேர்ந்து வந்து உருபுடன் புணரும் போது ஆன் என்னும் சாரியை வந்தாலும் தவறில்லை. அவ்வாறு ஆன் சாரியை வரும்போது பஃது என்னும் சொல்லில் உள்ள பகரமெய்யை விட்டு அஃது கெடும்.

**எ-டு**:

ஒன்று + பத்து = ஒருபத்து, ஒருபது. ஒருபஃது இரண்டு + பத்து இருபத்து. இருபது. இருபஃது என்பதைப் போல முப்பஃது நாற்பஃது, ஐம்பஃது. அறுபஃது, எழுபஃது, எண்பஃது எனவும், ஒருபஃது + ஐ - ஒருபானை என்பதைப் போல ஒருபானான், ஒரு பானுக்கு, ஒரு பானின், ஒரு பானது, ஒருபான்கண் எனவும் வரும்.

**ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்**

**எல்லா எண்ணும் சொல்லுங் காலை**

**ஆனிடை வரினும் மான மில்லை**

**ஆஃதென் கிளவி ஆவயின் கெடுமே**

**உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே** **(27)**

## குற்றுகரத் திசைப்பெயர்கள்

திசைப்பெயரின் முன்வரும் ஏழனுருபிற்கு மேற்கூறிய இன்சாரியை வாராமல் இயல்பாயும் புணர்த்தலாகும். அவ்வழித் திசைப் பெயரின் இறுதி நின்ற குற்றியலுகரம் தான் ஊர்ந்து நின்ற மெய்யொடும் கெடும்.

குற்றியலுகர இறுதியைக் கொண்ட திசைப்பெயர்கள் ஏழாம் வேற்றுமை உருபுடன் புணரும் போது சாரியை தோன்றாமல் இயல்பாகவும் புணரும். அவ்வாறு புணரும் போது இறுதியில் இருக்கும் குற்றியலுகரம் மெய்யுடன் கெடும்.

**எ-டு**:

வடக்கு + கண், வடக் + கண் =வடக்கண்,

தெற்கு + கண், தெற் + கண் =தெற்கண்,

கிழக்கு + கண், கிழக் + கண் =கிழக்கண்,

மேற்கு + கண், மேற் + கண் = மேற்கண்

**ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்**

**சாரியைக் கிளவி இயற்கையு மாகும்**

**ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே**

**மெய்யீற்று உருபுப்புணர்ச்சியில் சாரியைகள்** **(29)**

## இன் சாரியை

ஞகா நகரப் புள்ளிகளை ஈறாக உடைய சொற்களின் முன் உருபு வருங்கால் இன்சாரியை பெறும்

**எ-டு**:

உரிஞ் + ஐ, உரிஞ் + இன் + ஐ = உரிஞினை என்பதைப் போல உரிஞினொடு, உரிஞிற்கு, உரிஞின், உரிஞினது, உரிஞின் கண் என வரும். பொருந் ஐ, பொருந் + இன் + ஐ பொருநினை என்பதைப் போல பொருநினொடு, பொருநிற்கு, பொருநின், பொருநினது, பொருதின் கண் என வரும்.

**ஞந வென் புள்ளிக்கு இன்னே சாரியை (10)**

சுட்டெழுத்தினை முதலாக உடைய வகர ஈற்றுச் சொல்முன் உருபுவருங்கால் யாவை என்னும் சொல்லிற்கு ஓதிய இலக்கணத்தின் திரிபின்றி வரும். அஃதாவது வற்றுச் சாரியை பெறும் என்றவாறு யாவை என்னும் சொல்லொடு மாட்டேற்றிக் கூறுதல் விளங்க ஐயும் மெய்யும் கெட்ட இறுதி என்றார்.

**எ-டு**:

அவ் + ஐ. அவ் + அற்று + ஐ - அவற்றை என்பதைப் போல அவற்றொடு, அவற்றிற்கு அவற்றின், அவற்றது. அவற்றுக்கண் என வரும். அவ்வாறே, இவற்றை, இவற்றொடு, இவற்றிற்கு, இவற்றின், இவற்றது. இவற்றுக்கண், உவற்றை, உவற்றொடு, உவற்றிற்கு, உவற்றின், உவற்றது. உவற்றுக்கண்,

யாவற்றை, யாவற்றொடு, யாவற்றிற்கு, யாவற்றின், யாவற்றது, யாவற்றுக்கண் என வரும்.

**சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்**
**கெட்ட இறுதி இயல்திரி பின்றே** **(11)**

## வகரம் இன் சாரியை பெறல்

வகர ஈற்று மொழி நான்கனுள் சுட்டுப் பெயரொழிந்த ஏனைத் தெவ் என்னும் உரிச்சொல்லின் வகரத்தின் முன் உருபுப் புணருங்கால் இன் சாரியையொடு பொருந்தி வரும்.

**எ-டு**:

தெவ் ஐ. தெவ் + இன் + ஐ தெவ்வினை என்பதைப் போல தெவ்வினொடு, தெவ்விற்கு, தெவ்வின், தெவ்வினது. தெவ்வின் கண் என வரும்.

**ஏனை வகரம் இன்னொடு சிவனும்** **(12)**

## மகர மெய்யீறு பெறும் சாரியைகள்

மகர ஒற்றினை ஈறாக உடைய பெயர்கட்கு முன் உருபு வருங்கால் பெறும் சாரியை அத்து என்பதேயாம் ஏகாரம் தேற்றம்.

மகர ஒற்றை இறுதியில் கொண்ட சொற்கள் உருபுடன் புணரும் போது இடையில் அத்துச் சாரியை வரும்.

**எ-டு**:

மரம் + ஐ . மரம் + அத்து + ஐ மரத்தை என்பதைப் போல மரத்தொடு, மரத்திற்கு மரத்தின் மரத்தது, மரத்துக்கண் என வரும்.

**மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை** **(13)**

மேற்கூறிய மகர ஈற்றுச் சொற்களில் சில இன் சாரியை பெற்றும் வரும்.

**எ-டு**:

உரும் + ஐ. உரும் + இன் + ஐ = உருமினை என்பதைப் போல உருமினொடு, உருமிற்கு, உருமின் உருமினது. உருமின்கண் என வரும்.

**இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே** **(14)**

## சாரியை பெறா நும்

நும் என்னும் சொல்லின் இறுதியில் மகர ஈறு உள்ளது என்றாலும் இந்த மகர ஈறு அத்துச் சாரியையும் இன் சாரியையும் பெறாமல் இயல்பாகப் புணரும்.

**எ-டு**:

நும் + ஐ - நும்மை என்பதைப் போல நும்மொடு, நுமக்கு, நும்மின், நுமது, நும்கண் என வரும்.

**நும்என் இறுதி இயற்கை யாகும்** **(15)**

## தாம், நாம், யாம்

தாம், நாம் என்னும் மகர ஈற்றுப் பெயரிறுதியும் யாம் என்னும் பெயரிறுதியும், நும் என்னும் பெயர் போல உருபுவரின் இயற்கையாகப் புணரும். ஆண்டு யாம் என்னும் பெயரின் ஆகாரம் எகரமாகும். அவ்விடத்து யகரமெய்கெடும் ஏனைய தாம் நாம் என்னும் இரண்டு சொற்களின் நெட்டெழுத்துக்கள் குறுகும்.

தாம், நாம் என்னும் மகர இறுதியும் யாம் என்னும் மகர இறுதியும் அத்துச்சாரியையும் இன்சாரியையும் பெறாமல் புணரும், யாம் என்னம் சொல்லில் உள்ள ஆகாரம் எகரமாக மாறும்.

**எ-டு**:

யாம் + ஐ - எம்மை அதைப் போல எம்மை, எம்மொடு, எமக்கு, எம்மின், எமது, எம்கண் என வரும்.

தாம் + ஐ, தம் + ஐ, தம் + தம் ஐ = தம்மை என்பதைப் போல தம்மொடு, தமக்கு, தம்மின், தமது, தம்கண் என வரும்.

**தாம் நாம் என்னும் மகர இறுதியும்**
**யாம்என் இறுதியும் அதனோ ரன்**
**ஆ எவ்வாகும் யாம்என் இறுதி**
**ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்**
**ஏனை இரண்டும் நெடு முதல் குறுகும்** **(16)**

**எல்லாம் என்னும் சொல் வற்றுச்சாரியை**

அஃறினைப் பொருள்பற்றி வரும் எல்லாம் என்னும் பொதுப் பெயர் இறுதி முன்னர், உருபுவருங்கால் வற்று என்னும்சாரியை முழுமையாகத் தோன்றும், இறுதிக்கண் ஓர் உம்மை உருபின்கண் வந்து நிலைபெறும்.

எல்லாம் என்னும் மகர ஈற்றுச் சொல் உருபுகளுடன் புணரும் போது வற்றுச் சாரியை தோன்றுவதுடன் உம் என்னும் சாரியையும் இறுதியில் வரும்.

**எ-டு**:

எல்லாம் + ஐ எல்லாம் + வற்று + ஐ + உம்

எல்லா + வற்ற் + ஐ +உம்

எல்லாவற்றையும் என்பதைப் போல எல்லாவற்றொடும்,

எல்லாவற்றுக்கும்,

எல்லாவற்றதும் எல்லாவற்றுக்கண்ணும் என வரும்.

**எல்லாம் என்னும் இறுதி முன்னர்**

**வற்றென் சாரியை முற்றத் தோன்றும்**

**உம்மை நிலையும் இறுதி யான** **(17)**

எல்லாரும் என்னும் உயர் திணைப்படர்க்கைப் பெயரிறுதியும். எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரிறுதியும் உருபுவருங்கால் ஒற்றும் அதன் மேல் நிற்கும் உகரமும் கெடும். அவ்வாறு கெட்டவிடத்து ரகரம் புள்ளியாக நிற்கும் அவ்வழிப்படர்க்கைச் சொல்லிடத்து தம்முச்சாரியையும் முன்னிலைச் சொல்லிடத்து நும்முச்சாரியையும் இடையே வரும். உருபினது இறுதிக்கண் உம்மை நிலைபெறும்.

எல்லாரும் என்னும் படர்க்கைச் சொல்லுடன் உருபு புணரும் போது மகர இறுதியும் உகரமும் கெடும். தம் என்னும் சாரியை இடையிலும் உம் என்னும் சாரியை இறுதியிலும் வரும்.

**எ-டு**:

எல்லாரும் + ஐ, எல்லார் + தம் + ஐ, உம், எல்லார் + தம் + ம் + ஐ.ய் உம் (ய் -உடன்படு மெய்) எல்லார்தம்மையும் என்பதைப் போல எல்லார்

தம்மொடும் எல்லார் தமக்கும் எல்லார் தம்மினும் எல்லார் தமதும் எல்லார் தம் கண்ணும் வரும்.

எல்லீரும் என்னும் முன்னிலைச் சொல்லுடன் உருபு புணரும் போது மகர இறுதியும் உகரமும் கெடும். நும் என்னும் சாரியை இடையிலும் உம் என்னும் சாரியை இறுதியிலும் வரும்.

**எ-டு**:

எல்லிரும் + ஐ, எல்லீர் + நும் + ம் + ஐ + உம்
எல்லீர் + நும் + ம்+ஐ+ய்+உம்
எல்லீர் நும்மையும்

என்பதைப் போல எல்லீர் நும்மொடும், எல்லீர் நுமக்கும். எல்லீர் நும்மினும், எல்லீர் நுமதும், எல்லீர் நும் கண்ணும் என வரும்.

**எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்**
**எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்**
**ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப**
**நிற்றல் வேண்டும் நகரப் புள்ளி**
**உம்மை நிலையும் இறுதி யான**
**தம்இடை வரூஉம் படர்க்கை மேன**
**நும் இடை வரூஉம் முன்னிலை மொழிக்கே (19)**

## னகர மெய்யீறு பெறும் சாரியைகள்

தான், யான் என்னும் தன்மைப் பெயர்களின் அவ்இரண்டு ஈற்றுச் சொற்களும், மேலே தாம், நாம், யாம் என்னும் பெயர்களுக்குக் கூறிய விதிகளொடும் வேறுபாடிலவாகும்.

**எ-டு**:

தான் + ஐ, தன்+ ன் + ஐ தன்னை என்பதைப் போல தன்னொடு, தனக்கு, தன்னின், தனது, தன் கண் என வரும்.

யான் + ஐ - என் + ஐ, என் + ன் + ஐ என்னை என்பதைப் போல என்னொடு, எனக்கு என்னின், எனது. என்கண் என வரும்.

## அழன், புழன் - அத்து இன் சாரியைகள்

அழன், புழன் என்னும் அவ்இரண்டு மொழிக்கும் உருபுவருங்கால் அத்துச்சாரியையும் இன்சாரியையும் உறழ்ந்து தோன்றுதல் மரபு, அழன், புழன் ஆகிய இரு சொற்களும் உருபுடன் புணரும் போது அத்து என்னும் சாரியை அல்லது இன் என்னும் சாரியை தோன்றும்.

**எ-டு**:

அத்துச்சாரியை

அழன் + ஐ, அழன் + அத்து+ஐ. அழத்தை என்பதைப் போல அழத்தொடு, அழத்திற்கு, அழத்தின், அழத்தது. அழத்தக்கண் என வரும்.

புழன் + ஐ. புழன் + அத்து + ஐ = புழத்தை என்பதைப் போல புழத்தொடு பழத்திற்கு புழத்தின், பழத்தது. புழத்தக்கண் என வரும்.

## இன் சாரியை

**அழனே பழனே ஆயிரு பொழிக்கும்,**
**அத்தும் இன்னும் உறழத் தோன்றல்**
**ஒத்த தென்ப உணரு மோரே** **(21)**

அழன் + ஐ. அழன் + இன் + ஐ அழனினை என்பதைப் போல அழனினொடு அழனிற்கு, அழனின், அழனினது அழனின் கண் என வரும்.

புழன் + ஐ, புழன் + இன் + ஐ புழனினை என்பதைப் போல புழனினொடு, புழனிற்கு, புழனின், பழனினது, புழனின்கண் என வரும்.

**புள்ளியிறுதியும் உயிரிறுகிளவியும்**

**சொல்லிய வல்ல ஏனையவெல்லாம்**

**தேருங் காலை உருபொரு சிவணிச்**

**சாரியை நிலையாயுங் கடப்பாடிலவே (30)**

புள்ளியீற்றுச் சொற்களும், உயிரீற்றுச் சொற்களுமாக மேற்கூறப்பட்டனவும், கூறப்படாதனவுமாகிய எல்லாம் ஆராயுங்காலத்து உருபுகளோடு பொருந்திப் புணரும் வழி இடையே சாரியை நிலைபெறல் வேண்டுமென்னும் கடப்பாடிலவாகும். சாரியை இன்றுயும் புணரும்.

**எ-டு**:

மண்ணினை மண்ணை, வேபினை வேயை, ஊரினை ஊரை, கல்லினை கல்லை, முள்ளினை முள்ளை எனவும், கிளியினை கிளியை எனவும், சாரியை பெற்றும் பெறாதும் வருமாறு கண்டு கொள்க.

## தொகுப்புரை:

உயிர் ஈறுகள் ,வற்றுச்சாரியைகள், மெய் ஈறுகள், தரம், நாம், யாம், எல்லாம் என்னும் மகர ஈறுகள் ,எல்லாரும்,எல்லீரும் என்னும் மகர ஈறுகளின் முடிவு,முற்றுகர, குற்றுகர ஈறுகளின் முடிவு நிலைபெற்றது.ஒன்று முதல் பத்து

எண்ணுப்பெயர்களின் குற்றுகர ஈறுகள் அன் சாரியை பெறுதல் என்னும் பெயர் பெற்றது போன்றவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

## உருபியல் முற்றியது

**அருஞ்சொற்பொருள் விளக்கம்**

குன்றல் - கெடுதல்

புணர்தல் - சேர்தல்

சிவணுதல் - பொருந்துதல்

இல்லம் - மரப்பெயர்

குயின் - மேகம்

எகின் - அன்னப்பறவை

எயினர் - வேட்டுவர்

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அ, ஆ எனும் மரப்பெயர்க் கிளவி பெறும் சாரியை

   அ) இன் ஆ) அத்து இ) நும் ஈ) நம்

2. 'ஏழு' எனும் சொல்லின் இறுதி பெறும் சாரியை

   அ) அன் ஆ) இன் இ) நும் ஈ) அத்து

3. அஃறினைப் பொருள்பற்றி வரும் எல்லாம் என்னும் பொதுப் பெயர் இறுதி முன்னர் பெறும் சாரியை

   அ) அன் ஆ) இன் இ) வற்று ஈ) அத்து

4. குற்றிய லுகரத்து இறுதி முன்னர்

முற்றத் தோன்றும் ---------------- சாரியை பெறும்.

அ) இன் ஆ) அத்து இ) நும் ஈ) நம்

5. முற்றுகர எண்ணுப் பெயர்க்கு ----------- சாரியை

அ) அன் ஆ) இன் இ) நும் ஈ) அத்து

## குறு வினாக்கள்

1. நீ என்னும் முன்னிலைப் பெயருடன் உருபு புணர்வதை விளக்குக.
2. ஒன் என்னும் சாரியை தோன்றும் இடம் எது?
3. குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் உருபுடன் சேரும் போது வரும் சாரியைகள் யாவை?
4. உயிரீறுகள் உருபுடன் புணரும் போது வரும் சாரியைகளை விளக்குக.
5. குற்றியலுகர ஈறுகள் உருபுடன் புணரும் போது வரும் சாரியைகளை விளக்குக.
6. ஞ், ந் என்னும் மெய்யெழுத்துக்களை இறுதியில் கொண்ட சொற்கள் பெறும் சாரியை யாது?
7. சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட வகர ஈற்றுச் சொல் பெறும் சாரியை விளக்குக.

## கட்டுரை வினாக்கள்

1. அத்துச் சாரியை பெறும் சொற்கள் யாவை? விவரிக்க
2. நும் என்னும் சொல் உருபுடன் எவ்வாறு புணரும்? விவரி

3. தாம், நாம் என்னும் சொற்கள் உருபுடன் புணரும் நிலையை கட்டுரை வடிவில் எழுதுக.
4. வகர மெய்யீறு பெறும் சாரியைகளை விவரி.
5. மகர மெய்யீறு பெறும் சாரியைகளை விவரித்து எழுதுக.
6. னகர மெய்யீறு பெறும் சாரியைகளை விவரிக்க.

**பாடநூல்**

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாவலரேறு பாலசுந்தரனார் உரை - பெரியார் பல்கலைக்கழகம் வெளியிடு - சேலம் - 11, 2012

**Web Sources**

1. TamilHeritageFoundationwww.tamilheritage.org<http://www.tamilheritage.org
2. Tamilvirtual Universitylibrary-www.tamilvu.org/libraryhttp://www.virtualvu.org/

# அலகு - 3

# (அ) உயிர்மயங்கியல்

## நோக்கம்

உயிர் ஈறுகளின் புணர்ச்சி இலக்கணத்தை அறிதல், உருபுகளோடு பெயர்கள் புணருமாற்றை உயர்தல், அல்வழியிலும் வேற்றுமையிலும் விகுதிபெறும் உயிர் ஈறுகளை அறிதல்.

## உயிர்மயங்கியல்

"உயிரிறு சொன்முன் உயிர் வருவழியும்" (புணரியல் நூற்பா 5) எனப்புணரியலுள் தோற்றுவாய் செய்த முறைமையான் நிலைமொழி உயிரீறாக நின்று நாற்கணத்தொடும் புணரும் இலக்கணம் உணர்த்தலின் இவ்வோத்து உயிர் மயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று.

உயிரீறும் புள்ளியீறும் நாற்கணங்களொடு புணருங்கால் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்னும் திரிபுகளை ஏற்றுப்பொருள் வேறுபடாமல் இசையும் ஒலியும் வேறுபட்டுக் காந்தமும் எஃகும் இணைந்தாற்போல மயங்கி நிற்றலான் புணரியல் என்னாது மயங்கியல் என்றார். உருபு புணர்நிலை கூறி இதனான் பொருட்புணர்ச்சி கூறலின் இஃது உருபியலொடு இயைபுடைத்தாயிற்று.

வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என்னும் இரண்டனுள் வேற்றுமை உருபு தொக அப்பொருள்படப்புணரும் புணர்ச்சியும், உருபுகள்

பெயரொடு ஒட்டி ஒரு சொல்லாய் நின்று குறித்து வருகிளவியொடு புணரும் புணர்ச்சியும் வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். அல்லாதவை அல்வழிப்புணர்ச்சி எனப்படும்.

அகர ஈற்றுச்சொல் அல்வழியிலும் வேற்றுமையிலும் வல்லொற்று மிகுமாறு புணர்தலும் இயல்பாகப் புணர்தலும் உண்டு.

## அகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி

அகரத்தை இறுதியாகக் கொண்ட பெயர்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழி முதலில் கசதப என்னும் வல்லின எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி வல்லின மெய்க்குப் பொருத்தமான ஒற்று மிகும்.

**எ-டு :**

விள + குறிது விளக்குறிது

விள + சிறிது விளச்சிறிது

விள + தீது = விளத்தீது

விள + பெரிது விளப்பெரிது

வருமொழியில் உள்ள வல்லின மெய்க்குப் பொருத்தமான ஒற்று என்றதனால் வல்லின எழுத்துமட்டுமின்றி மெல்லின எழுத்துக்களும் மிகும்.

**எ-டு :**

தட + செவி = தடஞ்செவி

தட + தோள்= தடந்தோள்

**அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**

**வேற்றுமை அல்வழிக் கசதபத்தோன்றின்**

**தத்தம் ஒத்த ஒற்றிடைமிகுமே** **(1)**

## அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச் சொல்லும்

அகரத்தை இறுதியில் கொண்ட வினையெச்சம், உவம உருபு 'என' என்னும் எச்சச் சொல், கட்டின் இறுதி, ஆங்க என்னும் உரை அசைக்கிளவி ஆகிவற்றை அடுத்து வல்லின ஒற்று மிகும்.

**எ-டு :**

படுக்க + போனான் =படுக்கப்போனான்.

போல + செய்தான் =போலச்செய்தான்

என + தெரிவித்துக்கொள்கிறேன் = எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ + திரை = அத்திரை

ஆங்க+கொண்டான் =ஆங்கக் கொண்டான்.

**வினைஎஞ் கிளவியும் உவமக் கிளவியும்**

**எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்**

**ஆங்க என்னும் உரையசைச் கிளவியும்**

**ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே** **(2)**

## அகரச் சுட்டின்முன் மெல்லினம்

அகரச் சுட்டினை அடுத்து ஞ, ந, ம என்னும் மெல்லின எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் வந்தால் அவற்றிற்குப் பொருந்திய மெல்லின எழுத்துக்கள் மிகும்.

அ + ஞாலம் =அஞ்ஞாலம்

அ + நூல் = அந்நூல்

அ + மடம் = அம்மடம்

**சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்**
**ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்** **(3)**

## அகரச் சுட்டின் முன் இடையினம்

அகரச் சுட்டை அடுத்து ய, வ என்னும் இடையின எழுத்துக்கள் வந்தால் வகர ஒற்றுமிகும்.

**எ-டு:**

அ + யாழ் = அவ்யாழ்

அ + வளை =அவ்வளை

**யவமுன் வரினே வகரம் ஒற்றும்** **(4)**

## அகரச் சுட்டின் முன் உயிரெழுத்து

அகரச் சுட்டின் முன் உயிரெழுத்து வந்தாலும் வகர மெய்யெழுத்து மிகும்.

**எ-டு :**

அ + அணி = அவ்வணி

அ + ஆண்டு =அவ்வாண்டு

அ + இலை = அவ்விலை

அ + ஈட்டி = அவ்வீட்டி

அ + உரல் =அவ்வுரல்

அ + ஊசி = அவ்வூசி

அ + எலும்பு = அவ்வெறும்பு

அ + ஏணி =அவ்வேணி

அ + ஐந்து = அவ்வைந்து

அ + ஒட்டகம்= அவ்வொட்டகம்

அ + ஓடம் =அவ்வோடம்

அ + ஔவை = அவ்வௌவை.

**உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது** **(5)**

## அகரச்சுட்டி நீளுதல்

வருமொழி முதலில் வல்லினம் தவிர்த்த பிற எழுத்துக்கள் வரும்போது அகரச்சுட்டு செய்யுளில் நீண்டு வரும்.

**எ-டு**:

அ + இடை ஆயிடை

**நீட வருதல் செய்யுளுள் உரித்தே** **(6)**

## 'சாவ' என்னும் அகர ஈற்றுச் சொல்

சாவ என்னும் செயவென்னெச்சத்திறுதி நிற்கும் வகர உயிர்மெய் கெடுதலும், எதிர்மறை உம்மையாற் கெடாமல் பொதுவிதி பெறுதலும் உரித்தாகும்.

சாவ + குத்தினான்= சாக்குத்தினான்

சாவ + குத்தினான் =சாவக்குத்தினான்.

**சாவ என்னும் செயவெ னெச்சத்து**

**இறுதி வகரம் கெடுதலும் உரித்தே** **(7)**

## இயல்பாக முடியும் அகர ஈற்றுச் சொற்கள்

அன்ன என்னும் உவம உருபு, அண்மையில் உள்ளவரை அழைக்கும் விளிப்பெயர், செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டுச் சொல், ஏவலை நோக்கமாகக் கொண்ட வியங்கோள் நோக்கமாகக் கொண்ட வியங்கோள் வினைமுற்றுச் சொல், செய்த எனும் வாய்பாட்டுப் பெயரெச்சம், செய்யிய எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம், 'அம்ம' என்னும் இடைச்சொல், பலவற்றை உணர்த்தும் அகர ஈற்றுச் சொற்கள் ஆகியவற்றையும் இவை போன்ற பிறவற்றையும் தொடர்ந்து வல்லினம் வந்தால் ஒற்று மிகாமல் இயல்பாகச் சேரும்.

**எ-டு :**

பொன் + அன்ன + குதிரை = பொன் அன்ன குதிரை

வளவ + செல் = வளவசெல்

செல்க + தகர் = செல்கதகர்

உண்ட + பன்றி = உண்டபன்றி

உண்ணாத + குதிரை = உண்ணாத குதிரை

நல்ல + செந்நாய் = நல்லசெந்நாய்

உண்ணிய + தந்தான் = உண்ணிய தந்தான்

அம்ம + கொற்றா = அம்மகொற்றா

பல + செந்நாய் = பலசெந்நாய்

**அன்ன என்னும் உவமக் கிளவியும்**
**அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்**
**செய்ம்மன் என்னுந் தொழிலிறு சொல்லும்**
**ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்**
**செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்**
**செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அம்ம என்னும் உரைபொருட் கிளவியும்**
**பல வற்றிறுதிப் பெயர்க் கொடை உளப்பட**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிப** **(8)**

## வாழிய யகரம் கெடுதல்

வாழ்க எனப் பொருள்படும் 'வாழிய” என்று கூறப்படும் 'செய்க' என்னும் வாய்ப்பாட்டு வியங்கோட்கிளவியின் இறுதி நிற்கும் யகர உயிர்மெய் கெடுதலும் உரித்தாகும். உம்மையாற் கெடாது நிற்றலும் உரித்தென்க.

**எ-டு:**

வாழிய + கொற்றா = வாழிகொற்றா

**வாழிய என்னும் செய்கென் கிளவி**

**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே (9)**

## அம்ம - இறுதி நீளும்

அம்ம என்னும் சொல் உரையசைக்கிளவி இச்சொல்லின் இறுதியில் உள்ள அகரம், ஆகாரமாக நீளுதலும் உண்டு.

**எ-டு:**

அம்ம + கேளாய் =அம்மா கேளாய்.

**உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார் (10)**

## பல நீளுதல் உண்டு

பல என்னும் சொல்லின் இறுதி, செய்யுளில் வரும்போது ஓசை நிறைத்தற்காக நீண்டு வருவதும் உண்டு.

**எ-டு:**

பல - பலாஅம்

சில - சிலா அம்

**பலவற் றிறுதி நீடுமொழி உளவே**

**செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான (11)**

## பல, சில என்னும் சொற்கள்

தொடர்மொழி அல்லாத ஈரெழுத்து ஒரு மொழியாகிய பல, சில என்னும் அகர ஈற்றுச் சொற்கள் தம் முன்னே தாம்வரின் லகரம், றகர ஒற்றாதலும் உரித்து.

**எ-டு:**

பல + பல = பற்பல

சில + சில = சிற்சில

**தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்**
**லகரம் றகர ஒற்றாதலும் உரித்தே** **(12)**

பல, சில என்னும் சொற்கள் தம்முன் தாம் வரும்போது வல்லினம் மிகுந்தும் இயல்பாகவும் புணர்வதும் உண்டு.

**எ-டு:**

பல + பல = பலப்பல

பல + பல பலபல

சில + சில சிலச்சில

சில + சில = சிலசில

**வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும்** **(13)**

இதே பல என்னும் சொல் வல்லின எழுத்துக்களை முதலில் கொண்ட பிறசொற்களோடு புணரும்போது உருபுப்புணர்ச்சிக்கு ஏற்றாற்போன்று வற்றுச்சாரியை பெறும்.

**எ-டு:**

பல + கோடு, பல + வற்று + கோடு = பலவற்றுக்கோடு

பல + செவி. பல + வற்று + செவி = பலவற்றுச்செவி

பல + தலை, பல + வற்று + தலை = பலவற்றுத்தலை

பல + புறம், பல + வற்று + புறம் = பலவற்றுப்புறம்

**பலவற் றிறுதி உறுபியல் நிலையும் (18)**

## அகரஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

அவ்வழியில் அகர ஈற்றுச் சொற்கள் வல்லினத்தை முதலாகக் கொண்ட சொற்களுடன் புணரும்போது ஒற்றுமிகும். அதைப்போன்றே வேற்றுமையிலும் ஒற்றுமிகும்.

**எ-டு:**

இருவிள + கொற்றன் = இருவிளக்கொற்றன்

இருவிள + சாத்தன் = இருவிளச்சாத்தன்

இருவிள + தேவன் = இருவிளத்தேவன்

இருவிள + பூதன் = இருவிளப்பூதன்

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (14)**

## அகர ஈறு - மரப்பெயர்

அகரத்தை இறுதியில் கொண்ட மரப்பெயர்களை அடுத்து மெல்லினம் மிகும்.

**எ-டு:**

விள + கோடு = விளங்கோடு

விள + செதிள் = விளஞ்செதிள்

விள + தோல் = விளந்தோல்

விள + பூ = விளம்பூ

**மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (15)**

**மகப்பெயர்**

அகரத்தை இறுதியில் கொண்ட 'மக' என்னும் பெயர் வல்லினத்தோடு புணரும்போது 'இன்' சாரியை பெற்றுப்புணரும்.

**எ-டு:**

மக + கை, மக+இன்+கை= மகவின்கை

மக + செவி, மக+இன்+செவி =மகவின்செவி

மக + தலை, மசு+இன்+தலை= மகவின் தலை

மக+ புறம், மக+இன்+புறம் = மகவின்புறம்.

**மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை (16)**

மேற்கூறிய 'மக' என்னும் பெயர் அத்துச் சாரியை பெற்று வருவதும் உண்டு.

**எ-டு:**

மக + கை. மக + அத்து + கை மகத்துக்கை

மக + செவி, மக + அத்து + செவி = மகத்துச்செவி

மக + தலை, மக + அத்து + தலை மகத்துக்தலை

மக + புறம், மக + அத்து + புறம் மகத்துப்புறம்.

**அத்தவண் வரினும் வரைநிலை இன்றே** **(17)**

## ஆகார ஈற்று அல்வழிப் புணர்ச்சி

அகர ஈற்றுப்பெயர்கள் அல்வழியில் வல்லினம் மிகுந்து புணர்வதைப் போல் ஆகார ஈற்றெழுத்துக்களும் அல்வழியில் வல்லினம் மிகுந்து புணரும்.

**எ.டு**:

தாரா +கடிது = தாராக்கடிது

தாரா + சிறிது = தாராச்சிறிது

தாரா + தீது = தாராத்தீது

தாரா + பெரிது = தாராப்பெரிது

**ஆகார இறுதி அகர இயற்றே** **(19)**

## செய்யா என்னும் வினையெச்சம்

செய்யா என்னும் வினையெச்சத்தின் இறுதியில் ஆகார ஈறு உள்ளது. இந்தச் செய்யா என்னும் சொல்லைத் தொடர்ந்து வருமொழி முதலில் வல்லின எழுத்துக் கொண்ட சொல் வந்தால் வல்லினம் மிகும்.

**எ.டு**:

உண்ணா + கொண்டான் = உண்ணாக்கொண்டான்

உண்ணா + சென்றான் = உண்ணாச் சென்றான்

உண்ணா + தந்தான் = உண்ணாத்தந்தான்

உண்ணா + போயினான் = உண்ணாப் போயினான்.

**செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்**

**அவ்வியல் திரியாது என்மனார் புலவர்** **(20)**

## உம்மைத் தொகைப் புணர்ச்சி

ஆகார ஈறு கொண்ட உம்மைத் தொகைப் புணர்ச்சியில் ஓர் அகரம் நிலைமொழியின் ஈற்றில் வரும்.

**எ.டு**:

உவா + பதினான்கு = உவாஅப்பதினான்கு

அரா + பாம்பு = அரா அப் பாம்பு

**உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி**

**மெய்ம்மை யாக அகரம் மிகுமே** **(21)**

## இயல்பாக முடியும் ஆகார ஈற்றுச் சொற்கள்

ஆ. மா என்னும் பெயர்களை அடுத்து வல்லினத்தை முதலாகக் கொண்ட சொற்கள் வந்தால் அவை இயல்பாகப் புணரும்.

விளிப்பெயரின் இறுதியில் ஆகாரம் வந்து வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அவை இயல்பாகப் புணரும்.

யா என்னும் வினாப்பெயரை அடுத்து வல்லினம் வந்தால் இயல்பாகப்புணரும்.

அஃறிணைப் பொருளை உணர்த்தும் வினைச் சொல்லின் இறுதியில் உள்ள ஆகாரத்தை அடுத்து வல்லினம் வந்தால் இயல்பாகப்புணரும்.

ஏவலைக்குறிக்கும் உரையசையாகிய மியா என்னும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால் இயல்பாகப்புணரும்.

தன்தொழில் உரைக்கும் வினாவை அடுத்து வல்லினம் வந்தால் இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

ஆ + குறிது = ஆகுறிது

மா + குறிது = மாகுறிது

ஊரா + கொள் = ஊராகொள்

யா + குறிய = யாகுறிய

உண்ணா + குதிரை = உண்ணாகுதிரை

கேண்மியா + கொற்றா = கேண்மியாகொற்றா

உண்கா + கொற்றா = உண்கா கொற்றா

**ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்**
**யாவென் வினாவும் பலவற் றிறுதியும்**
**ஏவல் குறித்த உரையசை மியாவும்**
**தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிப (22)**

## ஆகார ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி

அல்வழிப்புணர்ச்சியில் மட்டும் அல்லாமல் வேற்றுமைப் புணர்ச்சியிலும் ஆகார ஈற்றுச்சொற்கள் அகர ஈற்றுச் சொற்களைப் போல் வல்லினம் மிகுந்து புணரும்.

**எ.டு:**

தாரா + கால் = தாராக்கால்

தாரா + சிறகு = தாராச்சிறகு

தாரா + தலை = தாராத் தலை

தாரா + புறம் = தாராப் புறம்

**வேற்றுமைக் கண்ணும் அதனோரற்றே (23)**

## ஆகார ஈற்றில் அகரப் பேறு

குறிலெழுத்தை அடுத்து ஆகாரம் வந்து வருமொழியுடன் புணரும் போதும் ஒரெழுத்து ஒரு மொழியில் ஆகாரம் வந்து வருமொழியுடன் புணரும் போதும் அகரம் எழுத்துப் பேறாக வரும்

**எ.டு:**

பலா + கோடு = பலா அக்கோடு

பலா + செதிள் = பலாஅச்செதிள்

பலா + தோல் = பலாஅத்தோல்

பலா + பூ = பலாஅப்பூ

கா + குறை = காஅக்குறை

கா - செய்கை = காஅச்செய்கை

கா + தலை = காஅத் தலை

கா + புறம் = காஅப்புறம்.

**குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்**

**அறியத் தோன்றும் அகரக் கிளவி (24)**

குறிலெழுத்தைத் தொடர்ந்து ஆகாரம் வந்துள்ள 'இரா' என்னும் சொல்லில் அகரப்பேறு இடம் பெறுவதில்லை

**எ.டு:**

இரா + கொண்டான் = இராக்கொண்டான்.

**இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை (25)**

## அத்துச் சாரியை

நிலா என்னும் ஆகார ஈற்றுச் சொல் அத்துச் சாரியை பெற்று வல்லினத்துடன் புணரும்.

**எ-டு:**

நிலா + கொண்டான் = நிலா அத்துக் ரெகண்டான்

நிலா + சென்றான் = நிலா அத்துச் சென்றான்

நிலா + தந்தான் = நிலா அத்துத் தந்தான்

நிலா + போயினான் = நிலா அத்துப் போயினான்.

**நிலா என் கிளவி அத்தொடு சிவணும் (26)**

## மெல்லெழுத்து மிகுதல்

யா என்னும் மரப்பெயர், பிடா என்னும் மரப்பெயர், தளா என்னும்மரப்பெயர் ஆகியவற்றைத் தொடர்ந்து மெல்லெழுத்து மிகும்.

**எ.டு:**

யா + கோடு = யா அங்கோடு

யா + செதிள்= யாஅஞ்செதிள்

யா + பூ = யாஅம்பூ

பிடா + கோடு = பிடாஅங்கோடு

பிடா + செதிள் = பிடாஅஞ்செதிள்

பிடா + பூ = பிடாஅம்பூ

தளா + கோடு = தளாஅங்கோடு

தளா + செதிள் = தளாஅஞ்செதிள்

தளா + தோல் = அளா அந்தோள்

தளா + பூ = தளாஅம்பூ.

**யாமரக்கிளவியும் பிடாவுந் தளாவும்**

**ஆமுப்பெயரும் மெல்லெழுத்து மிகுமே** **(27)**

யா, பிடா, தளா என்னும் மூன்று மரப் பெயர்களைத் தொடர்ந்து வல்லெழுத்து மிகுவதும்

**எ.டு:**

யா + கோடு= யாஅக்கோடு

யா + செதிள் = யாஅச்செதிள்

யா + தோல் = யாஅத்தோல்

யா + பூ = யாஅப்பூ

பிடா + கோடு = பிடா அக்கோடு

பிடா + செதிள் = பிடாஅச்செதிள்

பிடா + பூ = பிடாஅப்பூ

தளா + கோடு = தளாஅக்கோடு

தளா + செதிள் = தளாஅச்செதிள்

தளா + தோல்= தனா அத்தோள்

தளா + பூ = தளாஅப்பூ

**வல்லெழுத்து மிகினும் மான மில்லை (25)**

## மா என்னும் மரப்பெயரும் ஆ, மா என்னும் விலங்கின் பெயர்களும்.

மா என்னும் மரத்தைப் போன்றே 'மா'' என்னும் மரப்பெயரும் முன்பு கூறிய ஒரெழுத்து ஒரு மொழி போல் அகரத்துடன் மெல்லினம் பெற்றுப் புணரும்.

## எ.டு:

மா என்னும் இரு விலங்கின் பெயர்களும் னகர ஒற்றுப் பெற்றுப் புணரும்.

மா + கோடு = மா அங்கோடு

மா + செதிள் = மா அஞ்செதிள்

மா + தோல் = மா அந்தோல்

மா + பூ = மாஅம்பூ

ஆ + கோடு = ஆன்கோடு

ஆ + செவி = ஆன்செவி

ஆ + தோல் = ஆன்தோல்

ஆ + புறம் = ஆன்புறம்

மா + கோடு = மான்கோடு

மா + செவி = மான்செவி

மா + தலை= மான் தலை

மா + புறம் = மான்புறம்

**மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**

**ஆமுப் பெயரும் அவற்றோரன்ன**

**அகரம் வல்லெழுத்து அவை யவண் நிலையா**

**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்** **(29)**

ஆ என்னும் சொல், னகா ஒற்றுடன் ஓர் அகரம் பெற்றுப் புணர்வதும் உண்டு.

**எ.டு:**

ஆ + நெய் = ஆண் + அ + நெய் = ஆனநெய்

"ஆகரமொடு என்ற உம்மையான், அகரமின்றி வருதலே பெரும்பான்மை எனக் கொள்'

**ஆன் ஒற்று அகரமுடன் நிலையிடன் உடைத்தே** **(30)**

ஆன் என்னும் பெயருடன் ஈகாரத்துடன் சேர்ந்து பகரம் (பீ) சேரும் போது ஒற்று மிகுந்து வருவதுடன் னகர ஒற்றுக் கெடும். மேலும் ஈகாரம் என்னும் நெடில் இகரமாகக் குறுகுவதும் உண்டு.

**எ.டு:**

ஆன் + பீ = ஆப்பி

**ஆன்முன் வரூஉம் ஈகாரப் பகரம்**

**தான் மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே** **(31)**

## உகரப்பேறு

முதலெழுத்தை அடுத்து வரும் ஆகார ஈறுகுறுகி, உகரத்தை எழுத்துப் பேறாகப் பெற்றுச் செய்யுளில் வரும்.

**எ.டு**:

இரா -இர -இரவு

இறா - இற-இறவு

**குறியதன் இறுகிச் சினைகெட உகரம்**

**அறிய வருதல் செய்யுளுள் உரித்தே (32)**

## இகர, ஈகார ஈற்றுப்புணர்ச்சி

இகரத்தை இறுதியில் கொண்ட பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லின எழுத்துக்களைக் கொண்டசொற்களுடன் புணரும் போது வல்லினம் மிகும்.

**எ.டு**:

கிளி + கால் = கிளிக்கால்

கிளி + சிறகு = கிளிச்சிறகு

கிளி + தலை = கிளித்தலை.

கிளி + புறம் = கிளிப்புறம்

**இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**

**வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே (33)**

இனி, அணி என்னும் சொற்கள் காலத்தையும் இடத்தையும் உணர்த்தும் இவையும் இகர ஈற்றைக் கொண்டவை. இவை வருமொழி வல்லினத்தோடு புணரும் போது வல்லினம் மிகும்.

**எ.டு:**

இனி + கொண்டான் = இனிக்கொண்டான்

இனி + சென்றான் = இனிச்சென்றான்

இனி + தந்தான் = இனித் தந்தான்

இனி + போயினான் = இனிப் போயினான்

அணி + கொண்டான் = அணிக்கொண்டான்

அணி + சென்றான் = அணிச் சென்றான்

அணி + தந்தான் = அணித்தந்தான்

அணி + போயினான் = அணிப் போயினான்

**இனி, அணி என்னும் காலையும் இடனும்**
**வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன (34)**

## இன்றி எனுஞ் சொல்

இன்றி என்னும் வினையெச்சச் சொல்லின் இறுதியில் உள்ள இகரம் வருமொழியுடன் புணரும் போது உகரமாகப் பழங்காலம் முதல் செய்யுளில் மாறி வருகிறது.

**எ.டு:**

உப்பின்றி = உப்பின்று

நாளன்றி = நாளன்று

**இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி**

**நின்ற இகரம் உகரம் ஆதல்**

**தொன்றியல் மருங்கின் செய்யுளில் உரித்தே (35)**

## இகரச் சுட்டு

அகரச் சுட்டிற்குக் கூறியது இகரச் சுட்டிற்கும் பொருந்தும். இகரச் சுட்டைத் தொடர்ந்து மெல்லின எழுத்து வந்தால் மெல்லினம் மிகும். இடையின எழுத்தும் உயிரெழுத்தும் வந்தால் வகரமெய் தோன்றும் செய்யுளில் சுட்டு நீளுவதுடன் வகரமும் கெடும்.

**எ.டு:**

இ + ஞானம் = இஞ்ஞானம்

இ + நூல் = இந்நூல்

இ + மணி = இம்மணி

இ + யாழ் = இவ்வாழ்

இ + வட்டில் = இவ்வட்டில்

இ + வயின் = ஈ வயின்

**சுட்டின் இயற்கை முற்கிளந்தற்றே (36)**

## தூணி பதக்குடன் புணர்தல்

தூணி என்னும் அளவுப்பெயர், பதக்கு என்னும் அளவுப் பெயருடன் புணரும் போது வல்லினம் மிகும்.

**எ.டு:**

தூணி + பதக்கு = தூணிப்பதக்கு

**பதக்கு முன்வரினே தூணிக் கிளவி**

**முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே** **(37)**

## நாழி, உரியொடு புணர்தல்

நாழி என்னும் அளவுப்பெயருடன் உரி என்னும் பெயர் புணரும் போது நிலை மொழியின் இறுதியில் வரும் இகரம் மெய்யுடன் கெடும். டகரம் ஒற்றாய் வரும்.

### எ.டு:

நாழி + உரி, நா + உரி, நாட் + உரி = நாடுரி

**உரிவரு காலை நாழிக் கிளவி**

**இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே**

**டகாரம் ஒற்றும் ஆவயி னான** **(38)**

## பனி என்னும் காலப் பெயர்

பனி என்னும் காலப்பெயரை அடுத்துக் க ச த ப வந்தால் வேற்றுமையில் அத்து, இன் ஆகியவை சாரியைகளாக வரும்.

### எ.டு:

பனி + கொண்டான். பனி அத்து கொண்டான் பனியத்துக் கொண்டான் என்பதைப் போல பனியத்துச் சென்றான், வளியத்துத் தந்தான், வளியத்துப் போயினான் என வரும்.

வளி + கொண்டான், வளி + இன் + கொண்டான் வளியிற்கொண்டான் என்பதைப் போல வளியிற் சென்றான், வளியிற் தந்தான், வளியிற் போயினான் என வரும்.

**வளி என வரூஉம் பூதக் கிளவியும்**

**அவ்வியல் நிலையல் செவ்விது என்ப (40)**

## உதி என்னும் சொல்

உதி என்னும் மரப் பெயரைத் தொடர்ந்து க ச த ப வந்தால் அவற்றிற்கு இனமான மெல்லெழுத்து மிகும்.

**எ.டு:**

உதி + கோடு = உதிங்கோடு

உதி + செதிள் = உதிஞ் செதிள்

உதி + தோல் = உதிந் தோல்

உதி + பூ = உதிம்பூ

**உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே (41)**

## புளி என்னும் சொல் அம்சாரியை பெறல்

புளி என்னும் மரப்பெயரை அடுத்து வருமொழி முதலில் க ச த ப வந்தால் 'அம்' சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு:**

புளி + கோடு, புளி + அம் + கோடு = புளியங்கோடு

புளி + செதிள் = புளியஞ்செதிள்

புளி + தோல் = புளியந்தோல்

புளி + பூ = புளியம்பூ

**புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை (42)**

## இனமிகல்

புளி என்னும் சொல் மரத்தை உணர்த்தாமல் சுவையை உணர்த்தும் சொல்லாக வந்தால் வல்லெழுத்து மிகுந்து புணரும்.

**எ.டு**:

புளி + கூழ் =புளிங்கூழ்

புளி + செதிள் =புளிஞ் செதிள்

புளி + தயிர் = புளிந்தயிர்

புளி + பாளிதம் = புளிம்பாளிதம்

**ஏனைப் புளிப் பெயர் மெல்லெழுத்து மிகுமே (43)**

## வல்லொற்று மிகல்

புளி என்னும் சுவைப்பெயரை அடுத்து மெல்லெழுத்து மிகாமல் வல்லெழுத்து மிகுந்தாலும் தவறு இல்லை.

**எ.டு**:

புளி + கூழ் = புளிக்கூழ்

புளி + சோறு= புளிச்சோறு

புளி + தயிர் = புளித்தயிர்

புளி + பாளிதம் = புளிப்பாளிதம்

**வல்லெழுத்து மிகினு மானம் இல்லை**

**ஒல்வழி அறிதல் வழக்கத்தான (44)**

## நாள் பெயர் ஆன் சாரியை

நாளைக்குறிக்கும் இகர ஈற்றுச் சொல்லை அடுத்து வினைச் சொல் வந்தால் ஆன்சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு**:

பரணி + கொண்டான், பரணி + ஆன் + கொண்டான் =

பரணியாற்கொண்டான்

பரணி + சென்றான் = பரணியாற்சென்றான்

பரணி + தந்தான் = பரணியாற் தந்தான்

பரணி+போயினான் = பரணியாற் போயினான்

**நாள்முன் வரூஉம் தொழில்நிலைக் கிளவிக்கு**

**ஆன்இடை வருதல் ஐய மின்றே** **(45)**

## திங்கள் பெயர் இக்குச் சாரியை

இகர ஈற்றைக் கொண்ட திங்கள் பெயரை அடுத்து வினைச்சொல் வந்தால் இக்குச் சாரியை பெறும்.

**எ.டு**:

ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான்

ஆடி + இக்கு + கொண்டான் = ஆடிக்குக் கொண்டான்

ஆடி + சென்றான் =ஆடிக்குச் சென்றான்

ஆடி + தந்தான் = ஆடிக்குத் தந்தான்

ஆடி + போயினான் = ஆடிக்குப் போயினான்

**திங்கள் முன்வரின் இக்கே சாரியை** **(46)**

## ஈகார ஈற்று அல்வழிப் புணர்ச்சி

ஆகார ஈறு பெற்ற புணர்ச்சி விதிகளையே ஈகார ஈறும் பெற்றுப் புணரும். ஈகார ஈற்றைக் கொண்ட பெயர்கள் வருமொழியில் உள்ள கசதபக்களுடன் புணரும் போது வல்லினம் மிகும்.

**எ.டு:**

தீ + கடிது = தீக்கடிது

தீ + சிறிது = தீச்சிறிது

தீ + தீது = தீத்தீது

தீ + பெரிது = தீப்பெரிது

**ஈகார இறுதி ஆகார இயற்றே (49)**

## ஈகார ஈற்று இயல்புப் புணர்ச்சி

நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயரும் பகர ஈகாரமாகிய இடக்கர்ப்பெயரும் (பீ) மீ என்று ஓர் இடத்தை உணர்த்தும் மரூஉச் சொல்லும் வருமொழி முதலுடன புணரும் போது வல்லெழுத்து மிகாமல் இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

நீ + குறியை = நீகுறியை

நீ + சிறியை = நீ சிறியை

நீ + தீயை = நீ தீயை

நீ + பெரியை = நீ பெரியை

என்பதைப் போல பீ குறிது, பீ சிறிது, பீத்து, பீபெரிது, மீகன், மீசெவி, மீதலை, மீபுறம் என வரும்.

**நீ என் பெயரும் இடக்கரப் பெயரும்**
**மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்**
**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்** **(48)**

## வல்லாற்று நில்

மீ என்னும் சொல் வருமொழியுடன் புணரும் போது வல்லினம் மிகுந்து புணர்வதுமுண்டு.

**எ.டு**:

மீ + கோள் = மீக்கோள்

மீ + பல் = மீப்பல்

**இடம் வரை கிளவி முன் வல்லெழுத்து மிகூஉம்**
**உடனிலை மொழியும் உளவென மொழிப்** **(49)**

## ஈகார ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில் உருபுடன் புணர்ச்சிக்குக் கூறிய நிலையைப் பெறும் அதாவது நெடுமுதல் குறுகி னகர ஒற்றுப் பெறும்.

**எ.டு**:

நீ + கை = நின்கை, நீ + செவி = நின்செவி

நீ + தலை = நின்தலை, நீ + புறம் = நின்புறம்

**நீ என் ஒரு பெயர் உருபியல் நிலையும்**

**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும் (51)**

## உகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி

அகர ஈற்று அல்வழிப் புணர்ச்சிக்குக் கூறிய கசதபக்கள் வரின் வல்லொற்று மிக்கும் என்னும் விதிப்படி உகர ஈற்றை அடுத்தும் கசதபக்கள் வரின் வல்லொற்று மிகும்.

**எ.டு**:

கடு + குறிது = கடுக்குறிது

கடு + சிறிது = கடுச் சிறிது

கடு + தீது = கடுத்தீது

கடு + பெரிது = கடுப்பெரிது

**உகர இறுதி அகர இயற்றே (52)**

## உகரச்சுட்டு முன் வல்லினம்

உகரச் சுட்டை அடுத்து வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அகர ஈற்று அல்வழிப்புணர்ச்சியைப் போன்றே வல்லொற்று ஆகும்.

**எ.டு**:

உ + கொற்றன் = உக்கொற்றன்.

உ + சாத்தன் = உச்சாத்தன்

உ + தேவன் = உத்தேவன்

உ + பூதன் = உப்பூதன்

**சுட்டின் முன்னரும் அத்தொழிற்றாகும் (53)**

## உகரச் சுட்டின் முன் மெல்லினம் முதலியவை

உகரச் சுட்டின் முன் வல்லினம் அல்லாத மெல்லினம் முதலானவை வந்தால் அகர ஈற்றைப் போல் தன் ஒற்று மிகும்.

**எ.டு:**

உ + ஞான் = உஞ்ஞான்

உ + நூல்= உந்நூல்

உ + மணி = உம்மணி

உ + யாழ் = உவ்யாழ்

உ + வட்டு = உவ்வட்டு

**ஏனவை வரினே மேனிலை இயல்பே (54)**

## உகர ஈற்றுச் சுட்டின் முன் இயல்பு

உகரத்தை இறுதியில் கொண்ட சுட்டின் முன் வல்லொற்று மிகாமல் இயல்பாக வரும்.

**எ.டு:**

அது + குறிது = அது குறிது

இது + குறிது = இது குறிது

உது + குறிது = உது குறிது

அது + சிறிது =அது சிறிது

இது + சிறிது = இதுசிறிது

உது + சிறிது = உது சிறிது

அது + தீது = அது தீது

இது + தீது = இதுதீது

உது + தீது = உததீது

அது + பெரிது =அது பெரிது

இது + பெரிது = இது பெரிது

உது + பெரிது = உது பெரிது

**சுட்டு முதல் இறுதி இயல்பாகும்மே** **(55)**

## 'அன்று'ம் 'ஐ'யும்

உகர ஈற்றை இறுதியில் கொண்ட சுட்டுச் சொல்லை அடுத்து 'அன்று' என்னும் சொல் வரும் போது அன்று' என்னும் சொல்லில் உள்ள அகரம் ஆகாரமாக மாறும் 'ஐ' என்னும் எழுத்து வந்தால் உகரம் கெடும். இவை செய்யுளுக்கு உரியவை ஆகும்.

**எ.டு**:

அது + அன்று = அதான்று

இது + அன்று = இதான்று

உது + அன்று = உதான்று

அது + ஐ = அதை

இது + ஐ = இதை

உது + ஐ = உதை

**அன்று வரு காலை ஆவா குதலும்**

**ஐவரு காலை மெய் வரைந்து கெடுதலும்**

**செய்யுள் மருங்கின் உரித்தென மொழப** **(56)**

## உகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

உகரத்தை இறுதியாகக் கொண்ட பெயர், வேற்றுமைப் புணர்ச்சியிலும் அகர ஒற்றைப் போன்றே ஒற்று மிகும்.

**எ.டு:**

கடு + காய் = கடுக்காய்

கடு + செதிள் = கடுச்செதிள்

கடு + தோல் = கடுத்தோல்

கடு + பூ = கடுப்பூ

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (57)**

## உகர ஈற்று எரு, செரு

எரு. செரு என்னும் சொற்கள் முன் கூறிய வேற்றுமைப் புணர்ச்சியிலிருந்து மாறுபட்டு அம்சாரியைப் பெற்றுப் புணரும். அவ்வாறு புணரும் போது செரு என்னும் சொல்லை அடுத்து வரும் அம்மின் மகர ஒற்றுக் கெடும். அவ்வாறு கெடும் போது வல்லொற்று மிகும்.

**எ.டு:**

எரு + குழி, எரு + அம் + குழி = எருவங்குழி

எரு + சேறு, எரு + அம் + சேறு = எருவஞ்சேறு

எரு + தாது. எரு + அம் + தாது = எருவந்தாது

எரு + பூழி, எரு + அம் + பூழி = எருவம் பூழி

செரு +களம், செரு + அம் + களம் = செருவக்களம்

செரு + சேனை, செரு + அம் + சேனை = செருவச்சேனை

செரு + தானை, செரு + அம் + தானை = செரு வத்தானை

செரு + பறை, செரு + அம் + பறை = செருவப்பாறை

**எருவும் செருவும் அம்மொடு சிவணித்**

**திரிபுடன் உடைய தெரியுங் காலை**

**அம்மின் மகரம் செருவயின் கெடுமே**

**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை** **(58)**

## ழ என்னும் எழுத்தின் உகர ஈறு

ழகர ஒன்றின் மேல் ஏறிய உகரம் இறுதியில் வந்தால் அந்த உகரம் நீண்டு வரும் இது செய்யுளில் மட்டுமே வரும்.

**எ.டு:**

பழு + பல் = பழூ உப்பல்

**ழகர உகரம் நீடிடனு டைந்தே**

**உகரம் வருதல் ஆவிய னான** **(59)**

## ஒடு என்னும் மரப்பெயர்

இகரத்தை இறுதியில் கொண்ட உதி என்னும் மரப்பெயரைப் போல ஓடு என்னும் மரச்சொல்லும் மெல்லெழுத்துப் பெறும்

**எ.டு:**

ஒடு + கோடு = ஒடுங்கோடு

ஒடு செதிள் = ஒடுஞ்செதிள்

ஒடு + தோல் = ஒடுந்தோல்

ஒடு + பூ = ஒடும் பூ

**ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே (60)**

## உகர ஈற்றுச் சுட்டுப்பெயர் சாரியை பெறுதல்

கட்டெழுத்தை முதலாகக் கொண்டு உகரத்தை இறுதியில் கொண்ட சொற்கள் அன் சாரியைப் பெற்று உகரம் கெட்டுப் புணரும்.

அது + கோடு, அது + அன் + கோடு = அதன்கோடு

இது + கோடு = இதன்கோடு

உது + கோடு = உதன் கோடு என்பதைப் போல

அதன் செதிள், இதன் செதிள், உதன் செதிள், அதன் தோல், இதன் தோல், உதன் தோல், அதன் பூ, இதன் பூ, உதன் பூ என வரும்.

**சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்**
**ஒற்றிடை மிகா வல்லெழுத் தியற்கை (61)**

## ஊகார ஈற்று அல்வழிப் புணர்ச்சி

ஆகாரத்தை இறுதியில் கொண்ட சொற்கள் வல்லினம் வந்தால் வல்லெழுத்து மிகுந்து புணர்வதைப் போன்றே ஊகாரத்தை இறுதியில் கொண்ட சொற்களும் அல்வழியில் புணரும்.

கொண்மூ + கடிது = கொண்மூக்கடிது

கொண் மூ + சிறிது = கொண்மூச் சிறிது

கொண்மூ + தீது = கொண்மூத்தீது

கொண்மூ + பெரிது = கொண்மூப் பெரிது

**ஊகார இறுதி ஆகர இயற்றே (62)**

## ஊகார ஈற்று வினைச்சொல்

ஊகாரத்தை இறுதியில் கொண்ட வினையெச்சச் சொல்லையும் முன்னிலை வினைச்சொல்லையும் அடுத்து வல்லொற்று மிகும்.

**எ.டு:**

உண்ணூ + கொண்டான் = உண்ணூக் கொண்டான்

உண்ணூ + சென்றான் = உண்ணூச் சென்றான்

உண்ணூ + தந்தான் = உண்ணூத் தந்தான்

உண்ணூ + போயினான் = உண்ணுப் போயினான்

தூ + கொற்றா = தூக் கொற்றா

தூ + சாத்தா = தூச் சாத்தா

தூ + தேவா = தூத் தேவா

தூ + பூதா = தூப்பூதா

**வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்**

**நினையுங் காலை அவ்வகை வரையார் (63)**

## ஊகார ஈற்று வேற்றமைப் புணர்ச்சி

ஊகாரத்தை இறுதியில் கொண்ட சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியிலும் ஆகார ஈற்றைப் போன்றே ஒற்று மிகுந்து புணரும்.

கொண்மூ + குழாம் = கொண்மூக் குழாம்

கொண்மூ + செலவு = கொண்மூச் செலவு

கொண்மூ + தோற்றம் = கொண்மூத் தோற்றம்

கொண்மூ + பறைவு = கொண்மூப் பறைவு

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (64)**

## குறிலை அடுத்தும் தனித்தும் வரும் ஊகாரம்

குறிலெழுத்தை அடுத்தும் தனித்து ஓரெழுத்து ஒரு மொழியாகவும் வரும் ஊகாரத்தை அடுத்து உகரம் தோன்றும்.

**எ.டு:**

உடு + குறை = உடுஉக்குறை

உடு + செய்கை = உடுஉச் செய்கை

உடு+ தலை = உடுஉத்தலை

உடு +புறம் = உடுஉப்புறம்

தூ + குறை = தூ உக்குறை

தூ + செய்கை = தூ உச்செய்கை

தூ + தலை = தூ உத்தலை

தூ+புறம் = தூ உப்புறம்

**குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்**

**நிற்றல் வேண்டும் உகரக் கிளவி (65)**

## பூ என்னும் சொல்

பூ என்னும் ஓரெழுத்து ஒருமொழியை அடுத்து உகரம் தோன்றாது பூவை அடுத்து மெல்லெழுத்தும் சில இடங்களில் வல்லெழுத்தும் மிகுந்து புணரும்.

**எ.டு:**

பூ + கொடி= பூக்கொடி

பூ + செடி = பூச்செடி

பூ + தார் = பூத்தார்

பூ + பந்து = பூப்பந்து

பூ + கொடி = பூங்கொடி

பூ + செடி = பூஞ்செடி

பு + தார் = பூந்தார்

பூ + பந்து = பூம்பந்து

**பூவென் ஒரு பெயர் ஆயியல் பின்றே**

**ஆ வயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே (66)**

## ஊ எனும் சொல்

ஊ என்னும் சொல் தசையை உணர்த்தும் இது 'ஆ' என்னும் சொல்லை போன்றே னகர ஒற்று மிகுந்து புணரும்.

**எ.டு:**

ஊ + குறை = ஊன்குறை

ஊ + செய்கை = ஊன்செய்கை

ஊ + தலை = ஊன்தலை

ஊ + புறம் = ஊன்புறம்

**ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும் (67)**

ஊ எனும் சொல் னகர ஒற்றுடன் அக்குச் சாரியை பெற்றும் புணர்வது உண்டு.

## ஆடூஉ, மகடூஉ எனும் சொற்கள்

ஆடூஉ, மகடூஉ என்னும் உயர்திணைப் பெயர் இரண்டும் வல்லெழுத்து மிகும் என்ற விதிப்படி மட்டும் அல்லாமல் இன் சாரியை பெற்றும் புணரும்.

**எ.டு:**

ஆடுஉ + கை = ஆடுஉவின்கை

ஆடுஉ + செளி = ஆடுஉவின்செவி

ஆடுஉ +தலை = ஆடுஉவின் தலை

ஆடுஉ +புறம் = ஆடுஉவின் புறம்

மகடூஉ + கை = மகடூஉவின்கை

மகடூஉ + செவி = மகடூஉவின் செவி

மகடூஉ + தலை = மகடு உவின் தலை

மகடுஉ + புறம் = மகடுஉவின் புறம்

**ஆடூஉ மகடூஉ ஆயிறு பெயர்க்கும்**
**இன்னிடை வரினும் மான மில்லை (69)**

### பிற உயிரீற்றுப் புணர்ச்சி

## எகர ஒகர ஈறுகளின் அல்வழிப்புணர்ச்சி

எகர ஒகர உயிரெழுத்துக்கள் பெயர்ச்சொற்கள் இறுதியில் வருவதில்லை. முன்னிலை வினையில் கசதபக்களுடன் புணரும் போது அல்வழியில் ஒற்றுமிகும். தேற்றப் பொருளை உணர்த்தும் இடைச்

சொல்லாய் எகரமும் சிறப்பைக் குறிக்கும் இடைச்சொல்லாய் ஒகரமும் வரும்.

**எ.டு:**

ஏஎ + குமரா = ஏஎக்குமரா

**எகர ஒகரம் பெயர்க்கு ஈறாகா**

**முன்னிலை மொழிய என்மனார் புலவர்**

**தேற்றமும் சிறப்பும் அல்வழி யான** **(70)**

தேற்றப்பொருள் தரும் எகர இடைச்சொல்லும் சிறப்புப் பொருள் தரும் ஒகர இடைச்சொல்லும் வல்லினம் மிகாது இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

ஏஎ + கொண்டான்= ஏஎ கொண்டான்

ஓஒ + கொண்டான் =ஓஒ கொண்டான்

**தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்**

**மேற்கூ றியற்கை வல்லெழுத் துமிகாஅ** **(71)**

## ஏகார ஈற்று அல்வழிப்புணர்ச்சி

ஏகார ஈற்றுச் சொல்லும் ஊகார ஈற்றுச் சொல்லைப் போல் வல்லினம் மிகுந்து புணரும்

**எ.டு:**

சே + கடிது =சேக்கடிது

சே + சிறிது = சேச்சிறிது

சே + தீது = சேத்தீது

சே + பெரிது = சேப்பெரிது

**ஏகார இறுதி ஊகார இயற்றே (72)**

## ஏகார இடைச்சொல்

ஏகார இடைச்சொல் எதிர்மறை எச்சப் பொருளிலும் வினாப் பொருளிலும் வரும் போது எண்ணுப் வல்லெழுத்துப் பெறாமல் இயல்பாய் பொருளிலும் புணரும்.

## எதிர்மறை எச்சப் பொருள்

## எ.டு:

யானே + கொண்டேன் = யானேகொண்டேன்

யானே + சென்றேன் = யானே சென்றேன்

யானே + தந்தேன் = யானே தந்தேன்

யானே + போயினேன் = யானே போயினேன்

## வினாப்பொருள்

நீயே + கொண்டாய் = நீயே கொண்டாய்

நீயே + சென்றாய் = நீயே சென்றாய்

நீயே + தந்தாய் = நீயே தந்தாய்

நீயே + போயினாய் = நீயே போயினாய்

## எண்ணுப்பொருள்

**கொற்றனே, சாத்தனே, தேவனே, பூதேனே**

**மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்**

**கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் (73)**

## ஏகார ஈற்று வேற்றமைப் புணர்ச்சி

ஏகார ஈறு, வேற்றுமைப் புணர்ச்சியிலும் ஊகார ஈற்றைப் போல் வல்லொற்று மிகுந்து புணரும்.

**எ.டு:**

வே + குடம் = வேக்குடம்

வே + சாடி = வேச்சாடி

வே + தூதை = வேத்தூதை

வே + பானை = வேப்பானை

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே** **(74)**

வேற்றுமையில் ஏ என்னும் பெயர் இறுதி எகரம் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

ஏ + கொட்டில் = ஏ எக் கொட்டில்

ஏ + காலை = ஏ எக்காலை

ஏ + துறை = ஏஎத்துறை

ஏ + புழை = ஏஎப்புழை

**ஏ என் இறுதிக்கு எகரம் வருமே** **(75)**

## சே என்னும் மரப்பெயர்

ஒரு எண்ணும் உகர ஈற்று மரப்பெயரைப் போன்றே சே என்னும் ஏகார ஈற்று மரப்பெயரும் மெல்லினம் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

சே + கோடு = சேங்கோடு

சே + செதிள் = சேஞ் செதிள்

சே + தோல் = சேந்தோல்

சே + பூ = சேம்பூ

**சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே (76)**

சே என்னும் சொல் மரத்தைக் குறிக்காமல் பெற்றத்தை (பசுவை) உணர்த்தினால் இன் சாரியை பெறும்.

**எ.டு:**

சே + கோடு = சேவின் கோடு

சே + செவி = சேவின் செவி

சே + தலை = சேவின் தலை

சே + புறம் = சேவின் புறம்

**பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும் (77)**

## ஐகார ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

ஐகாரத்தை இறுதியில் கொண்ட பெயர்ச் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால் வேற்றுமையில் ஒற்று வரும்.

**எ.டு:**

யானை + கோடு = யானைக்கோடு

யானை + செவி = யானைச்செவி

யானை + தோல் = யானைத்தோல்

யானை + புறம் = யானைப்புறம்

**ஐகார இறுதிப் பெயர் நிலை முன்னர்**

**வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே (78)**

## ஐகார ஈற்றுச் சுட்டுப்பெயர்ப் புணர்ச்சி

சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட சொல்லின் இறுதியில் ஐகாரம் வந்தால் ஐகாரம் கெட்டும், கெடாமலும் ஏற்றுச் சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு**:

அவை + கோடு, அவை + அற்று + கோடு = அவையற்றுக்கோடு,

அவை + செவி, அவை + அற்று + செவி = அவையற்றுச்செவி,

அவை + தலை, அவை + அற்று + தலை = அவையற்றுத்தலை.

அவை + புறம், அவை + அற்று + புறம் = அவையற்றுப்புறம்

என்பதைப் போல

இவையற்றுக்கோடு, இவையற்றுச் செவி, இவையற்றுத் தலை, இவையற்றுப் புறம் எனவும் உவையற்றுக்கோடு, உவையற்றுச் செவி, உவையற்றுத் தலை, உவையற்றுப்புறம் எனவும் வரும்.

## ஐகாரம் கெட்டு வரல்

அவை + கோடு = அவற்றுக்கோடு

அவை + செவி = அவற்றுச் செவி,

அவை + தலை = அவற்றுத் தலை.

அவை + புறம் = அவற்றுப்புறம் என்பதைப் போல

இவற்றுக்கோடு, இவற்றுச்செவி, இவற்றுத்தலை, இவற்றுப்புறம் எனவும் உவற்றுக்கோடு, உவற்றுச்செவி, உவற்றுத்தலை, உவற்றுப்புறம் எனவும் வரும்.

**சுட்டு முதலிறுதி உருபியல் நிலையும் (79)**

## ஐகார ஈற்று மரப்பெயர் புணாச்சி

விசை, ஞெமை, நமை, என்னும் ஐகார ஈற்று மரப்பெயர்கள் சே என்னும் மரப்பெயரைப் போன்று மெல்லெழுத்து மிகுந்து புணரும்.

**எ.டு**:

விசை + கோடு = விசைங்கோடு

விசை + செதிள் = விசைஞ் செதிள்

விசை + தோல் = விசைந்தோல்

விசை + பூ = விசைம்பூ

ஞெமை + கோடு = ஞெமைங்கோடு

ஞெமை + செதிள் = ஞெமைஞ் செதிள்

ஞெமை + தோல் = ஞெமைந்தோல்

ஞெமை + பூ = ஞெமைப் பூ

நமை + கோடு = நமைங்கோடு

நமை + செதிள் = நமைஞ்செதிள்

நமை + தோல் = நமைந்தோல்

நமை + பூ = நமைம்பூ

**விசைமரக் கிளவியும் செமையும் நமையும்**

**அமுப் பெயரும் சேமர இயல (80)**

பனை, அரை, ஆவிரை என்னும் ஐகார இறுதி மரப்பெயர்கள் அம்முச்சாரியை பெற்றுப் புணரும். அரை என்னும் மரம் அல்லாத பனை, ஆவிரை என்னும் இருமரப் பெயர்களிலும் ஐகாரம் கெடும்.

**எ.டு**:

பனை + காய் = பனங்காய்

பனை + செதிள் = பனஞ்செதிள்

பனை + தோல்= பனந்தோல்

பனை + பூ = பனம்பூ

அரை + கோடு = அரையங்கோடு

அரை + செதிள் = அரையஞ்செதிள்

அரை + தோல் = அரையந்தோல்

அரை + பூ = அரையம்பூ

ஆவிரை + கோடு = ஆவிரங்கோடு

ஆவிரை + செதிள் = ஆவிரஞ் செதிள்

ஆவிரை + தோல் = ஆவிரந்தோல்

ஆவிரை + பூ = ஆவிரம் பூ

**பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்**

**நினையுங் காலை அம்மொடு சிவணும்**

**ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே**

**மெய்யவண் ஒழிய என்மனார் புலவர் (81)**

## பனை முன் அட்டு

பனை என்னும் சொல்லை அடுத்து அட்டு என்னும் சொல் வந்து புணரும் போது ஐகாரம் கெட்டு ஆகாரம் தோன்றும்.

**எ.டு**:

பனை + அட்டு = பனா அட்டு

**பனையின் முன்னர் அட்டுவரு காலை**
**நிலையின் றாகும் ஐயென் உயிரே**
**ஆகாரம் வருதல் ஆவயி னான (82)**

## பனை முன் கொடி

பனை என்னும் சொல்லை அடுத்துக் கொடி என்னும் சொல் வந்து புணரும் போது ஐகாரம் அப்படியே நிற்க வல்லினம் மிகும்.

**எ.டு**:

பனை + கொடி= பனைக்கொடி

**கொடி முன்வரினே ஐ அவண் நிற்பக்**
**கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி (83)**

## ஐகார ஈற்றுப் பிற சொற்கள்

ஐகாரத்தை இறுதியில் கொண்ட திங்களின் பெயரும் நாளின் பெயரும் இகர ஈற்று விதியைப் பெறும். அதாவது திங்கட்பெயர் இக்குச் சாரியையும், நாட்பெயர் ஆன் சாரியையும் பெறும்,

**எ.டு:**

**இக்குச்சாரியை**

சித்திரை +கொண்டான் = சித்திரைக்குக் கொண்டான்

சித்திரை + சென்றான் = சித்திரைக்குச் சென்றான்

சித்திரை + தந்தான் = சித்திரைக்குத் தந்தான்

சித்திரை + போனான் = சித்திரைக்குப் போயினான்

**ஆன்சாரியை**

கேட்டை + கொண்டான் = கேட்டையாற்கொண்டான்

கேட்டை + சென்றான் = கேட்டையாற் சென்றான்

கேட்டை + தந்தான் = கேட்டையாற் தந்தான்

கேட்டை + போனான் = கேட்டையாற் போனான்

**திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன** **(84)**

## மழை என்னும் சொல்

மழை என்னும் ஐகார ஈற்றுப் பெயர், வளி என்னும் இகர ஈற்றுப் பெயரைப் போன்றே அத்தும் இன்னும் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

மழை + கொண்டான் = மழையத்துக் கொண்டான்

மழை + சென்றான் = மழையத்துச் சென்றான்

மழை + தந்தான் = மழையத்துத் தந்தான்

மழை + போயினான் = மழையத்துப் போயினான்

மழை + கொண்டான் = மழையிற் கொண்டான்

மழை + சென்றான் = மழையிற் சென்றான்

மழை + தந்தான் = மழையிற் தந்தான்

மழை + போயினான் = மழையிற் போயினான்

**மழை என் கிளவி வளிஇயல் நிலையும் (85)**

**வேட்கை என்னும் சொல்**

வேட்கை என்னும் ஐகார ஈற்றுச் சொல்லை அடுத்து அவா என்னும் சொல் வந்தால் ஐகாரம், தான் சேர்ந்த மெய்யுடன் கெடும்; அதன் முன்னுள்ள டகர ஒற்று ணகர ஒற்றாக மாறும் இது செய்யுளில் மட்டுமே வரும்.

**எ.டு:**

வேட்கை + அவா

வேட் + அவா

வேண் + அவா = வேணவா

**செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**

**ஐயென் இறுதி அவாமுன் வரினே**

**மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்**

**டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும் (86)**

## ஓகார ஈற்று அல்வழிப் புணர்ச்சி

ஓகார ஈற்றுப் பெயர்கள் அவ்வழியில் ஏகார ஈற்றுப் பெயர்களைப் போல் ஒற்று மிகுந்து புணரும்.

**எ.டு:**

ஒ +கடிது = ஒக்கடிது

ஒ+சிறிது = ஒச்சிறிது

ஒ + தீது = ஒத்தீது

ஒ + பெரிது = ஒப்பெரிது

**ஓகார இறுதி ஏகார இயற்றே (87)**

## ஓகார இடைச்சொல்

எதிர்மறை எச்சப் பொருளைத் தரும் ஓகாரமும் வினாப் பொருளையும் ஐயப் பொருளையும் தரும் ஓகாரமும் ஆகிய இடைச் சொற்கள் வல்லெழுத்து மிகாமல் இயல்பாகப் புணரும்.

**எதிர்மறை எச்சப் பொருள்**

அவளோ + கொண்டான் = அவனோகொண்டான்

அவனோ + சென்றான் = அவனோ சென்றான்

அவனோ + தந்தான் = அவனோதந்தான்

அவனோ + போயினான் = அவனோபோயினான்

**வினாப்பொருள்**

நீயோ கொண்டாய்

நீயோ சென்றாய்

நீயோ தந்தாய்

நீயோ போனாய்

**ஐயப்பொருள்**

காடோ கடறோ, புற்றோ புதரோ

**மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்**

**கூறிய வல்லெழுத்து இயற்கையாகும்** **(88)**

ஒழியிசை ஓகார இடைச்சொல்லும் மேற்கூறியவை போன்றே இயல்பாக புணரும்

**எ.டு**:

படிக்கவோ + கொண்டான் = படிக்கவோ கொண்டான்

படிக்கவோ + சென்றான் = படிக்கவோ சென்றான்

படிக்கவோ + தந்தான் = படிக்கவோ தந்தான்

படிக்கவோ + போயினான் = படிக்கவோபோயினான்

**ஒழிந்தனன் நிலையும் மொழிந்தவற் றியற்றே** **(89)**

## ஓகார ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி

ஓகார ஈற்றை அடுத்து வல்லினம் வரும் போது அல்வழியைப் போன்றே வேற்றுமையிலும் வல்லொற்று மிகும்; ஒகரம் தோன்றும் .

**எ.டு**:

ஓ+ கடுமை = ஓஒக் கடுமை

ஓ +சிறுமை= ஓஒச் சிறுமை

ஓ + தீமை = ஓஒத் தீமை

ஓ + பெருமை = ஓஒப் பெருமை

**வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே**

**ஒகரம் வருதல் ஆவயி னான** **(90)**

'கோ' என்னும் சொல்லுடன் இல் என்னும் சொல் இயல்பாகப் புணரும், மேற்கூறியது போல் ஏகரம் தோன்றாது.

**எ.டு:**

கோ +இல் கோயில்

**இல்லோடு கிளப்பின் இயற்கையாகும்** **(91)**

## ஒன் சாரியை பெறல்

ஓகார ஈற்றுப் பெயர்கள் உருபுப் புணர்ச்சியில் வல்லினம் மிகாமல் ஒன் சாரியைப் பெற்றும் புணரும்

**எ.டு:**

கோ + கை = கோஒன்கை

கோ + செவி = கோஒன் செவி

கோ + தலை = கோஒன் தலை

கோ + புறம் = கோஒன் புறம்

**உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**

**ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும்** **(92)**

## ஔகார ஈறு

ஔகாரத்தை இறுதியில் கொண்ட தொழிற்பெயர் வல்லின உருமொழியுடன் புணரும் போது வேற்றுமையிலும் அவ்வழியிலும் வல்லினம் மிகுந்து புணரும். அவ்வாறு புணரும் போது உகரம் தோன்றும்.

**எ.டு:**

கௌ + கடிது = கௌவுக் கடிது

கௌ + சிறிது = கௌவுச் சிறிது

கௌ + தீது = கௌவுத் தீது

கௌ + பெரிது = கௌவுப் பெரிது

கௌ + கடிமை = கௌவுக் கடுமை

கௌ + சிறுமை = கௌவுச் சிறுமை

கௌ + தீமை = கௌவுத் தீமை

கௌ + பெருமை = கௌவுப் பெருமை

**ஔகார இறுதிப் பெயர் நிலை முன்னர்**
**அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே**
**அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்**
**செவ்வி தென்ப சிறந்திசி னோரே** **(93)**

புணர்ச்சியின் இலக்கணம், அகர ஈற்றுப் புணர்ச்சி நிலை, இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள், பல, சில என்னும் சொற்கள், ஆகார ஈறு. வேற்றுமையில் ஆகார ஈறு. இகர ஈறுகள், நாழி, தூணி, பனி, புளி, நான், நீங்கட் பெயர்ப்புணர்ச்சி, உகர ஈறுகள் புணர்தல், ஆடுட, மகடூ பெயர்கள் புணர்ச்சி ,ஐகார ஈற்றுப் புணர்ச்சி, விசை, ஞெமை, நமை, பனை, அரை, அவிரை, மழை, வேட்கை புணர்ச்சிகள், ஓகார, ஒனகார ஈற்றுப்புணர்ச்சிகள் மற்றும் எழுத்துக்களின் வரிவடிவம் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

# தொகுப்புரை:

புணர்ச்சியின் இலக்கணம், அகர ஈற்றுப் புணர்ச்சி நிலை, இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள் ,பல, சில என்னும் சொற்கள், ஆகார ஈறு, வேற்றுமையில் ஆகார ஈறு,இகர ஈறுகள், நாழி, தூணி, பனி, புளி, நான், நீங்கட் பெயர்ப்புணர்ச்சி ,உகர ஈறுகள் புணர்தல், ஆடூட, மகடூ பெயர்கள் புணர்ச்சி , ஐகார ஈற்றுப் புணர்ச்சி, விசை, ஞெமை, நமை, பனை, அரை, அவிரை, மழை, வேட்கை புணர்ச்சிகள் ,ஓகார, ஔகார ஈற்றுப்புணர்ச்சிகள் ,எழுத்துக்களின் வரிவடிவம் போன்றவை தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

**உயிர்மயங்கியல் முற்றியது**

**(அ) உயிர் மயங்கியல்**

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நெட்டெழுத்துக்கள் பெறும் எழுத்துச் சாரியை

அ) கரன் ஆ) கான் இ)காரம் ஈ) கரன்,கான்,காரம்

2. அ, ஆ எனும் மரப்பெயர்க் கிளவி பெறும் சாரியை

அ) இன் ஆ) அத்து இ) நும் ஈ) நம்

3. ‘ஏழு’ எனும் சொல்லின் இறுதி பெறும் சாரியை

அ) அன் ஆ) இன் இ) நும் ஈ) அத்து

4. இராவென் கிளவிக்கு அகரம் இல்லை

அ) இராக் கொண்டான் ஆ) இராகொண்டான்

இ) இராஅக்கொண்டான் ஈ) இராஅகொண்டான்

5. ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே

அ) ஒடுங்கோடு ஆ) ஒடுக்கோடு இ) ஒடுகோடு ஈ) ஒடுஉக்கோடு

**குறுவினாக்கள்**

1. அகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.
2 ஆகார ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.
3. அத்துச் சாரியை பெறும் ஆகார ஈற்றுச் சொல் யாது?
4. மெல்லெழுத்து மிகும் மரப்பெயர்கள் யாவை?
5. அகரச் சுட்டு எப்போது நீளும்.
6. சாவ என்னும் சொல்லில் உள்ள வகரம் எப்போது கெடும்?
7. இகரச் சுட்டு எவ்வாறு புணரும்?
8. இன்றி என்னும் சொல் செய்யுளில் எவ்வாறு மாறும்?
9 பனி என்னும் காலப்பெயர்ப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றம் யாது?
10. வளி என்னும் சொல் பெறும் சாரியைகள் யாவை?
11. புளி எனும் சொல் எந்தச் சாரியை பெறும்?
12. இகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

**கட்டுரை வினாக்கள்**

1. ஈகார ஈற்று அல்வழிப் புணர்ச்சியை விவரிக்க.
2. உகர ஈற்று அல்வழிப் புணர்ச்சியை விவரி.
3. உகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.
4. ஊகார ஈற்று அல்வழிப் புணர்ச்சியை விளக்குக.
5. ஊகார ஈற்று வேற்றுமைப் புணர்ச்சியை விவரித்து எழுதுக.

6. எகர ஒகர ஈறுகளின் அல்வழிப் புணர்ச்சியை விளக்குக.

7. ஏகார ஈற்றுப் புணர்ச்சியை விவரி.

8. ஐகார ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.

9. ஓகார ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.

10. ஔகார ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.

# (ஆ) புள்ளி மயங்கியல்

## நோக்கம்

புள்ளி ஈறுகள் வருமொழிகளோடு புணரும் திறத்தினை அறிதல், மொழிக்கு இறுதியில் வரும் பதினோரு ஈறுகளும் வன்கனத்தோடும், மென்கனத்தோடும் புணருமாற்றை அறிதல்.

## புள்ளி மயங்கியல்

புள்ளி எழுத்துக்கள் பெயர் முதலிய நால்வகைச் சொற்களிலும் இறுதியாக நின்று இருவழியும் நாற்கணத்தொடும் புணரும் இயல்புணர்த்தலின் இவ்வோத்து புள்ளிமயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று.

மெய்யே உயிரென் றாயீரியல' எனப்பட்டவற்றுள் மெய்பீறு புணருங்கால் அ∴து ஒலிப்புடையதாகிப் புணரும் என்பதை மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்" என உணர்த்தினமையின், மெய்ம்மயங்கியல் என்னாது புள்ளி மயங்கியல் என்றார்.

உயிரிறு சொல்முன் உயிர் வருவழியும்' (புணரியல் நூற்பா - 5) என்னும் சூத்திரத்துள் நிறுத்த முறையாற் கூறுதலின் இவ்வியல் உயிர்மயங்கியலொடு இயைபுடைத்தாயிற்று.

## ஞகரஈறு

ஞகாரத்தை இறுதியில் கொண்ட சொற்கள் வருமொழியில் உள்ள கசதப என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களுடன் புணரும் போது வேற்றுமையிலும் அல்வழியிலும் வல்லொற்று மிகும். அவ்வாறு புணரும்போது நிலைமொழியின் இறுதியில் உள்ள ஞகார ஒற்றுடன் உகரம் சேர்ந்து வரும்.

**எ.டு**:

உரிஞ் + கடிது = உரி ஞுக்கடிது

உரிஞ் + சிறிது = உரிஞுச் சிறிது

உரிஞ் + தீது = உரிஞுத் தீது

உரிஞ் + பெரிது = உரிஞுப் பெரிது

உரிஞ் + கடுமை = உரிஞுக் கடுமை

உரிஞ் + சிறுமை = உரிஞுச் சிறுமை

உரிஞ் + தீமை = உரிஞுத் தீமை

உரிஞ் + பெருமை = உரிஞுப் பெருமை

**ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்துமிகுமே**
**உகரம் வருதல் ஆவயி னான** **(1)**

மேலே கூறிய ஞகர, ஒற்று ஞ.ந.மவ என்னும் ஒற்றெழுத்துடன் புணரும் போதும் உகர சாரியை பெற்று வரும்.

**எ.டு:**

உரிஞ் + ஞான்றது = உரிஞு ஞான்றது.

உரிஞ் + நீண்டது = உரிஞு நீண்டது.

உரிஞ் + மாண்டது = உரிஞு மாண்டது.

உரிஞ் + வலியது = உரிஞு வலியது.

உரிஞ் + ஞாற்சி = உரிஞு ஞாற்சி

உரிஞ் + நீண்டது = உரிஞு நீட்சி

உரிஞ் + மாட்சி = உரிஞு மாட்சி

உரிஞ் + வலிமை = உரிஞு வலிமை.

**ஞநமவ இயையினும் உகரம் நிலையும் (2)**

## நகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி

நகர ஒற்றை இறுதியில் கொண்ட பெயரை அடுத்து க,ச,த,ப க்கள் வந்தால் அல்வழியில் ஞகர ஈற்றைப் போன்றே உகரத்தொடு வல்வொற்றும் மிகும். ஞ,ந,ம,வக்கள் வந்தால் உகரம் பெற்று இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

பொருந் + கடிது = பொருநுக் கடிது

பொருந் + சிறிது = பொருநுச் சிறிது

பொருந் + தீது = பொருநுத் தீது

பொருந் + பெரிது = பொருநுப் பெரிது.

பொருந் – ஞான்றது = பொருநு ஞான்றது

பொருந் + நீண்டது = பொருநு நீண்டது

பொருந் மாண்டது = பொருநு மாண்டது.

பொருந் + வலியது = பொருநுவலியது.

**நகர இறுதியும் அதனோ ரற்றே** **(3)**

## நகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

நகரத்தை இறுதியில் கொண்ட சொற்கள் க.ச.த, பக்களுடன் புணரும்போது வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லொற்று மிகுந்து உகரம் கெட்டு அகரச் சாரியை பெற்றும் புணரும் ஞ.ந.ம, வக்களுடன் புணரும் போது அகரம் பெறும்.

**எ.டு:**

பொருந் + கடுமை = பொருநக் கடுமை

பொருந் + சிறுமை = பொருநச் சிறுமை

பொருந் + தீமை = பொருந்த் தீமை

பொருந் பெருமை = பொருநப் பெருமை

பொருந் + ஞாற்சி = பொருந ஞாற்சி

பொருந் + நீட்சி = பொருந நீட்சி

பொருந் + மாட்சி = பொருநமாட்சி

பொருந் + வலிமை = பொருந வலிமை

**வேற்றுமை உக்கெட அகர நிலையும்** **(4)**

'வெரிந்" என்னும் சொல் வல்லெழுத்துடன் புணரும்போது நகர ஒற்றுகெட்டு வருமொழிக்கு இனமான மெல்லொற்று மிகும்.

**எ.டு:**

வெரிந் + குறை = வெரிங்குறை

வெரிந் + செய்கை = வெரிஞ் செய்கை

வெரிந் + தலை = வெரிந் தலை

வெரிந் + புறம் = வெரிம் புறம்

**வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி**

**வருமிடன் உடைத்தே மெல்லெழுத்தியற்கை (5)**

அவ்வாறு வெரிந் என்னும் சொல் புணரும் போது மெல்லெழுத்துக்கும் பதிலாக வல்லெழுத்து மிகுவதும் உண்டு.

**எ.டு:**

வெரிந் + குறை = வெரிக் குறை

வெரிந் + செய்கை = வெரிச் செய்கை

வெரிந் + தலை = வெரித்தலை

வெரி + புறம் = வெரிப்புறம்

**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே (6)**

## ணகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

ணகரத்தை இறுதியில் கொண்ட சொல் வல்லெழுத்து வரும் சொல்லுடன் புணரும் போது வேற்றுமையில் ணகர ஒற்று, டகர ஒற்றாக மாறும்.

**எ.டு:**

மண் + குடம் = மட்குடம்

மண் + சாடி = மட்சாடி

மண் + தூதை = மட்தூதை

மண் + யானை = மட்பானை

**ணகார இறுதி வல்லெழுத் தியையின்**

**டகார மாகும் வேற்றுமை பொருட்கே** **(7)**

## ஆண், பெண் என்னும் சொற்கள்

ஆண், பெண் என்னும் சொற்கள் தொகை மரபில் அஃறிணை விரவும் பெயர்க்குக் கூறிய இலக்கணப்படி இயல்பாக புணரும்.

**எ.டு:**

ஆண் + கை = ஆண்கை

ஆண் + செவி =ஆண்செளி

ஆண் + தலை = ஆண்தலை

ஆண் + புறம் = ஆண்புறம்

பெண் + கை = பெண்கை

பெண் + செவி = பெண்செவி

பெண் + தலை = பெண்தலை

பெண் + புறம் = பெண்புறம்

**ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை** **(8)**

ஆண் என்னும் மரப்பெயர் ஐகார ஈற்றில் அரை என்னும் மரப்பெயர்ப் புணர்ச்சிக்கு ஏற்ப 'அம்' சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு:**

ஆண் + கோடு = ஆணங்கோடு

ஆண் + செதிள் = ஆணஞ்செதிள்

ஆண் + தோல் = ஆணந்தோல்

ஆண் + பூ = ஆணம்பூ

**ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே** **(9)**

## விண் என்னும் சொல்

விண் என்னும் சொல்லை அடுத்து செய்யுளில் வினைச் சொல் வரும்போது அத்துச் சாரியை பெற்றும் பெறாமலும் புணரும்.

**எ.டு:**

விண் + கொட்டும் = விண்ணத்துக்கொட்டும்

விண்குத்தும் + நீள்வரை = விண்குத்தும் நீள்வரை

**விண்ணென வரூஉம் காயப் பெயர் வயின்**

**உண்மையும் உரித்தே அத்தென் சாரியை**

**செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை** **(10)**

## ணகரஈற்றுத் தொழிற்பெயர்

ணகரத்தை இறுதியில் கொண்ட தொழிற்பெயர் வல்லினத்துடன் புணரும் போது வேற்றுமையிலும் அல்வழியிலும் வல்லெழுத்து மிகுந்து உகரச் சாரியை பெறும் மெல்லினமும் வகரமும் வரும் போது உகரம் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

மண் + கடிது = மண்ணுக்கடிது

மண் + சிறிது = மண்ணுச்சிறிது

மண் + தீது = மண்ணுத்தீது

மண் + பெரிது = மண்ணுப் பெரிது

மண் + கடுமை = மண்ணுக்கடுமை

மண் + சிறுமை = மண்ணுச் சிறுமை

மண் + தீமை = மண்ணுத்தீமை

மண் + பெருமை = மண்ணுப்பெருமை

மண் + ஞான்றது = மண்ணு ஞான்றது

மண் + நீண்டது = மண்ணு நீண்டது

மண் + மாண்டது= மண்ணு மாண்டது

மண் + ஞாற்சி = மண்ணுஞாற்சி

மண் + நீட்சி = மண்ணு நீட்சி

மண் + மாட்சி = மண்ணு மாட்சி

மண் + வலிது = மண்ணுவலிது

மண் + வலிமை = மண்ணு வலிமை

**தொழிற் பெயரெல்லாம் தொழிற்பெயரியல (11)**

## ணகர ஈற்றுக் கிளைப்பெயர்

ணகர ஈற்றுப் பெயரை அடுத்துக் குடிப் பெயர் வரும் போது, திரிபு எதுவும் இல்லாமல் இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

உமண் + குடி = உமண்குடி

உமண் + சேரி = உமண்சேரி

உமண் + தோட்டம் = உமண்தோட்டம்

உமண் + பாடி = உமண்பாடி

**கிளைப்பெயரெல்லாங் கொளத்திரிலெவே (12)**

## எண் என்னும் உணவுப்பெயர்

எண் என்னும் உணவுப்பெயரை அடுத்து வல்லினம் வந்தால் வேற்றுமை அல்லாத வழி வேற்றுமைப் புணர்ச்சிக்கு ஏற்ப ணகரம், டகரமாகத் திரிந்தும் அல்வழியில் இயல்பாகவும் புணரும்.

**எ.டு:**

எண் + கடிது = எட்கடிது

எண் + சிறிது = எட்சிறிது

எண் + தீது = எட்தீது

எண் + பெரிது = எட்பெரிது

எண் + கடிது = எண்கடிது

எண் + சிறிது = எண்சிறிது

எண் + தீது = எண்தீது

எண் + பெரிது = எண் பெரிது

**வேற்றுமை அல்வழி எண்ணென் உணவுப்பெயர்**

**வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே (13)**

## முரண் என்னும் தொழிற்பெயர்

முரண் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் முன்பு கூறிய இலக்கணப்படி வேற்றுமையில் ணகரம், டகரம் மாறியும் அல்வழியில் இயல்பாகவும் புணரும்.

**எ.டு:**

முரண் + கடுமை = முரட்கடுமை

முரண் + சேனை = முரட்சேனை

முரண் + தானை = முரட்தானை

முரண் + பறை = முரட்பறை

முரண் + கடிது = முரண்கடிது

முரண் + சிறிது = முரண்சிறிது

முரண் + தீது = முரண்தீது

முரண் + பெரிது = முரண்பெரிது

**முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும் (14)**

## மகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

மகர ஒற்றை இறுதியில் கொண்ட பெயர்கள் வல்லெழுத்துடன் புணரும் போது வேற்றுமையில் மகராறு கெட்டு வல்லெழுத்து மிகுந்து புணரும்.

**எ.டு:**

மரம் + கோடு = மரக்கோடு

மரம் + செதிள் = மரச்செதிள்

மரம் + தோல் = மரத்தோல்

மரம் + புறம் = மரப்புறம்

**மகர இறுதி வேற்றுமை யாயின்**

**துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே** **(15)**

மகர ஈற்றுப் பெயரை அடுத்து வருமொழி முதலில் அகரமும் ஆகாரமும் வரும்போது மவ்வீறு கெட்டு அதன் அருகில் உள்ள அகரம் ஆகாரமாக மாறியும் புணரும்.

**எ.டு**:

மரம் + அடி = மராவடி

குளம் + ஆம்பல் = குளவாம்பல்

**அகர ஆகாரம் வரூஉங் காலை**

**ஈற்று மிசை அகரம் நீடலும் உரித்தே** **(16)**

மகர ஒற்றை இறுதியில் கொண்டசொற்கள் வருமொழியில் வல்லெழுத்துடன் புணரும்போது மகர ஈறுகெட்டு இனமெய் மிக்குப் புணர்த்லும் உண்டு.

**எ.டு**:

குளம் + கரை = குளங்கரை

குளம் + சேறு = குளஞ்சேறு

குளம் + தாது = குளந்தாது

குளம் + பூழி = குளம் பூழி

குளம் + கரை = குளக்கரை

குளம் + சேறு = குளச் சேறு

குளம் + தாது = குளத்தாது

குளம் + பூழி = குளம் பூழி

**மெய்யெழுத்து உறழும் மொழியுமா ருளவே**

**ஒல்வழி அறிதல் வழக்கத் தான** **(17)**

## இல்லம் என்னும் மரப்பெயர்

இல்லம் என்னும் மரப்பெயர். விசை என்னும் மரப்பெயரின் இயல்பாய் மெல்லொற்று மிகுந்து புணரும்.

இல்லம் + கோடு = இல்லங்கோடு

இல்லம் + செதிள் = இல்லஞ்செதிள்

இல்லம் + தோல் = இல்லந்தோள்

இல்லம் + பூ = இல்லம்பூ

**இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே** **(18)**

## மகர ஈற்று இல்வழிப் புணர்ச்சி

மகரத்தை இறுதியில் கொண்ட சொற்கள் அல்வழியில் புணரும் போது மகர ஈறு கெட்டு இனமெல்லினம் மிகும்.

**எ.டு**:

மரம் + குறிது = மரங்குறிது

மரம் + சிறிது = மரஞ்சிறிது

மரம் + தீது = மரம்பெரிது

மெல்லினத்துடன் புணரும் போது மவ்வீறு கெட்டு இயல்பாய் புணரும்.

மரம் + ஞான்றது = மரஞான்றது

மரம் + நீண்டது = மரநீண்டது.

மரம் + நீண்டது = மர நீண்டது

மரம் + மாண்டது = மர மாண்டது.

**அல்வழி எல்லாம் பெல்லெழுத் தாகும் (19)**

## 'அகம்' என்னும் சொல்கையுடன் புணர்தல்

அகம் என்னும் மகர ஈற்றுச் சொல் கை எண்னும் சொல்லுடன் புணரும் போது 'அ' என்னும் எழுத்துத் தவிர்த்த சுகரமும் மகரமும் கெடும் சுகரம் கெடாமல் புணரும் வரு மொழிக்கு இன மெல்லினமான ஙகர ஒற்று மிகும்.

## எ.டு:

அகம் + கை = அங்கை

அகம் + கை = அகங்கை

**அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே**

**முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும்**

**வரைநிலை இன்றே ஆசிரி யர்க்க**

**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான (20)**

## இலம் என்னும் சொல் 'பா' வுடன் புணர்தல்

இலம் என்னும் சொல்லை அடுத்துப் படு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் வந்து புணரும் போது மகர ஈறு கெடமலும் வந்து புணரும் மவ்வீடு கெடாமல் புணர்வது செய்யுளில் பட்டுமே வரும்.

**எ.டு:**

இலம் + படு = இலம்படு.

**இலம்என் கிளவிக்குப் படுவரு காலை**

**நிலையலும் உரித்தே செய்யுளான (21)**

## ஆயிரம் என்னும் பெயர்

ஆயிரம் என்னும் பெயரை அடுத்து ஆயிரத்துக்கு உட்பட்ட எண்கள் வந்து புணரும் போது அத்துச் சாரியை தோன்றும்.

ஆயிரம் + ஒன்று = ஆயிரத்தொன்று

ஆயிரம் + நூறு = ஆயிரத்து நூறு

**அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி**

**ஒத்த எண்ணு முன்வரு காலை (22)**

ஆயிரம் என்னும் பெயருக்கு முன்பு அடை வந்தாலும் அத்துச் சாரியை பெற்றே புணரும்.

**எ.டு:**

பதினாயிரம் + ஒன்று = பதினாயிரத் தொன்று

எட்டாயிரம் + நூறு = எட்டாயிரத்து நூறு

**அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே (23)**

ஆயிரம் என்னும் எண்ணும் பெயரை அடுதது முகத்தல், நிறுத்தல் முதலிய அளவைப் பெயர்கள் வந்து புணர்ந்தால் வேற்றுமைப் புணர்ச்சியைப் போல் மகரம் கெட்டு வல்லொற்று மிக்குப் புணரும்.

**எ.டு:**

ஆயிரம் + கலம் = ஆயிரக்கலம்

ஆயிரம் + கழஞ்சு = ஆயிரக்கழஞ்சு

**அளவும் நிறையும் வேற்றுமை இயல (24)**

## மகர ஈற்று உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரும்

எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும் எல்லிரும் என்னும் முன்னிலைப் பெயரும் முதல் குறுகும் (தாம் - தம்) தன்மைப் பெயர்களும் வேற்றுமையில் ஈறுகெடும் இடையிலும் ஈற்றிலும் சாரியை பெறும் நெடில் முதல் குறுகும் பெயர்கள் குறுகும் அவ்வாறு குறுகும் சொற்களில் மெல்லெழுத்து மிகும்.

**எ.டு:**

எல்லார் + கை = எல்லாத் தங்கையும்

எல்லீர் + கை = எல்லீர் நுங்கையும்

எல்லார் + செவி = எல்லார் தஞ்செவியும்

எல்லீர் + செவி = எல்லீர்நுஞ் செவியும்

எல்லார் + தலை = எல்லார்தந் தலையும்

எல்லீர் + தலை = எல்லீர்நுந் தலையும்

எல்லார் + புறம் = எல்லார் தம் புறமும்

எல்லீர் + புறம் = எல்லீர் நும் புறமும்

எல்லார், எல்லீர் என்னும் சொற்கள் அல்வழியில் சாரியைப் பெறாமல் இயல்பாக புணரும் ; மவ்வீறு கெட்டும் புணரும்.

**எ.டு:**

எல்லார் + குறியர் = எல்லாருங் குறியர்

எல்லார் + சிறியர் = எல்லாருஞ் சிறியர்

எல்லார் + தீயர் = எல்லாருந் தீயர்

எல்லார் + பெரியர் = எல்லாரும் பெரியர்

எல்லீர் + குறியீர் = எல்லிருங் குறியீர்

எல்லீர் + சிறியிர் = எல்லீருஞ் சிறியீர்

எல்லீர் + தீயீர் = எல்லீருந் தீயீர்

எல்லீர் + பெரியீர் = எல்லீரும் பெரியீர்

நாம் + குறியம் = நாங்குறியம்

நாம் + சிறியம் = நாஞ்சிறியம்

நாம் + தீயம் = நாந்தீயம்

நாம் + பெரியம் = நாம்பெரியம்

## எல்லாம் என்னும் விரவுப் பெயர்

எல்லாம் என்னும் விரவுப் பெயர் அல்வழியிலும் வேற்றுமையிலும் இடையில் வற்றுச் சாரியையும் இறுதியில் 'உம்' சாரியையும் பெற்றுப் புணரும் அல்வழியில் சாரியை நிலை பெறாது.

**எ.டு:**

எல்லாம் + குறிய = எல்லாக் குறியவும்

எல்லாம் + சிறிய = எல்லாச் சிறியவும்

எல்லாம் + தீய = எல்லாத் தீயவும்

எல்லாம் + பெரிய = எல்லாப் பெரியவும்

எல்லாம் + கோடு = எல்லாக்குறியரும்

எல்லாம் + செவி = எல்லாவற்றுச் செவியும்

எல்லாம் + தலை = எல்லாவற்றுத் தலையும்

எல்லாம் + புறம் = எல்லாவற்றுப் புறமும்

எல்லாம் + குறியர் = எல்லாக் குறியரும்

எல்லாம் + சிறியர் = எல்லாச் சிறியரும்

எல்லாம் + தீயர் = எல்லாத் தீயரும்

எல்லாம் + பெரியர் = எல்லாப் பெரியரும்.

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லாம் என்னும் பெயர் உருவியல் நிலையும் வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது.

**படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்**
**தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்**
**வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான** **(25)**

எல்லாம் என்னும் விரவுப் பெயரை அடுத்து, வல்லினம் மிகாமல் மெல்லினம் மிகுந்தும் புணரும்.

**எ.டு:**

எல்லாம் + குறிய = எல்லாங் குறியவும்

எல்லாம் + சிறிய = எல்லாஞ்சிறியவும்

எல்லாம் + தீய = எல்லாந் தீயவும்

எல்லாம் + பெரிய = எல்லாம் பெரியவும்.

எல்லாம் + குறியர் = எல்லாங்குறியரும்

எல்லாம் + சிறியர் = எல்லாஞ் சிறியரும்

எல்லாம் + தீயர் = எல்லாந் தீயரும்

எல்லாம் + பெரியர் = எல்லாம் பெரியரும்

**மெல்லெழுத்து மிகினும் மான மில்லை (28)**

## உயர்திணை நம் சாரியை

எல்லாம் என்பது அஃறிணைப் பெயராக அல்லாமல் உயர்திணையை உணர்த்தி வந்தால் நம் சாரியை இடையில் வரும்

**எ.டு:**

எல்லாம் + கை, எல்லாம் + நம் + கை + உம்

எல்லா + நம் + கை + உம் = நல்லநங்கையும் என்பதைப்போல

எல்லாம் + செவி = எல்லா நஞ்செவியும்

எல்லாம் + தலை = எல்லாந் தலையும்

எல்லாம் + புறம் = எல்லாநம்புறமும்.

**உயர்திணை யாயின் உருபியல் நிலையும் (29)**

## நும் என்னும் பெயர்

நும் என்னும் பெயரை அடுத்து வல்லெழுத்து வந்தால் வேற்றுமையில் மெல்லினம் மிகும்.

**எ.டு:**

நும் + கை = நுங்கை

நும் + செவி = நுஞ்செவி

நும் + தலை = நுந்தலை

நும் + புறம் = நும்புறம்

**நும் என் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே** **(30)**

நும் என்னும் பெயரை அடுத்து வல்லெழுத்து வந்தால் அல்வழியில் நும் என்னும் சொல்லில் உள்ள உகரம் கெட்டு, நின்ற நகரமெய் மேல் ஈகாரம் வந்து நீ என்றாகும் இடையில் ஓர் இகரம் நிலை பெற்று மகர ஈறுகெட்டு ரகர ஒற்றுத் தோன்றும்.

**எ.டு:**

நும் + குறியீர் = நீயிர்குறியீர்
நும் + குறியீர் = நீயிர் சிறியீர்
நும் + தீயீர் = நீயிர் தீயீர்
நும் + பெரியீர் = நீயிர் பெரியீர்

**அல்லதன் மருங்கில் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வரின் ஈவர**
**இஇடை நிலை ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பான் மொழிவயின் இயற்கை ஆகும்** **(31)**

## மகர ஈற்றுத் தொழிற்பெயர்

மகர ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போல் உகரம் பெற்று, வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து மிகுந்து புணரும்; ஞ. ந. ம. வ வந்தால் இயல்பாய்ப் புணரும்.

**எ.டு:**

செம் + கடுமை = செம்முக்கடுமை

செம் + சிறுமை = செம்முச்சிறுமை

செம் + தீமை = செம்முத்தீமை

செம் + பெருமை = செம்முப்பெருமை

செம் + ஞாற்சி = செம்முஞாற்சி

செம் + நீட்சி = செம்முநீட்சி

செம் + மாட்சி = செம்மு மாட்சி

செம் +வலிமை = செம்முவலிமை

**தொழிற் பெய ரெல்லாம் தொழிற் பெய ரியல (32)**

## ஈம், கம், உரும், செம் எனும் சொற்கள்

ஈம், கம், உரும் என்னும் மூன்று சொல்லும் மகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போன்றே அல்வழியிலும் வேற்றுமையிலும் உகரச் சாரியை பெற்றுப் புணரும்; வருமொழி முதல் வல்லினம் என்றால் வல்லொற்றுப் பெற்று மெல்லினம் என்றால் இயல்பாகவும் புணரும்.

**எ.டு:**

ஈம் + சுடிது = ஈமுக்கடிது

கம் + கடிது = கம்முக்கடிது

உரும் + கடிது = உருமுக் கடிது

ஈம் + சிறிது = ஈமுச்சிறிது

கம் + சிறிது = கம்முச்சிறிது

உரும் + சிறிது = உருமுச்சிறிது

ஈம் + ஞான்றது = ஈமு ஞான்றது

கம் + ஞான்றது = கம்மு ஞான்றது

உரும் + ஞான்றது = உருமு ஞான்றது

**ஈமும் கம்மும் உருமென் கிளவியும்**

**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன** **(33)**

## ஈம், கம் - வேற்றுமைப்புணர்ச்சி

வேற்றுமைப்புணர்ச்சியில் ஈம், கம் என்னும் இரு சொற்களும் அக்குச் சாரியை பெற்றும் புணரும்.

## எ.டு:

ஈம் + குடும் = ஈமக்குடர்

ஈம் + சாடி = ஈமச்சாடி

ஈம் + தூதை = ஈமத்தூதை

ஈம் + பானை = ஈமப்பானை

கம் + குடம் = கம்மக்குடம்

கம் + சாடி = கம்மச்சாடி

கம் + தூதை = சும்மத்தூதை

கம் + பானை = கம்மப் பானை.

**வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும்**

**தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை** **(34)**

## மகரக்குறுக்கம்

மகர ஈற்றை அடுத்து வருமொழி முதலில் வகரம் வந்தால் மகரம் குறுகும்.

**எ.டு:**

நிலம் + வலிது= நிலம் வலிது

**வகார மிசையின் மகாரம் குறுகும்** **(35)**

## மகர ஈற்று நாட் பெயர்

மகர ஈற்று நாட்பெயர் இகர ஈற்று நாட்பெயரைப் போல் ஆன்சாரியை பெற்றுப் புணரும் அத்துச் சாரியையும் ஆன் சாரியையும் சேர்ந்து வந்தும் புணரும் இவ்வாறு சாரியையுடன் புணரும் போது மகர ஈறு கெடும்.

**எ.டு:**

மகம் + கொண்டான்

மகம் + ஆன் + கொண்டான்.

மகம் + அத்து + ஆன் + கொண்டான்,

மக + அத்து + ஆன் + கொண்டான் = மகத்தாற் கொண்டான் என்பதைப் போல

மகம் + சென்றான் = மகத்தாற்சென்றான்

மகம் + தந்தான் = மகத்தாற்தந்தான்

மகம் + போயினான் = மகத்தாற் போயினான்

**நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன**

**அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே**

**ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர் (36)**

## னகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

னகர ஈற்றை அடுத்து வல்லினம் வந்தால் வேற்றுமையில் றகாரமாகத் திரியும்.

**எ.டு:**

பொன் + குடம் = பொற்குடம்

பொன் + சாட = பொற்சாடி

பொன் தூதை = பொற்தூதை

பொன் + பானை = பொற்பானை

**னகார இறுதி வல்லெழுத் தியையின்**

**றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே (37)**

## மன் முதலிய சொற்கள்

மன், சின், ஆன், ஈன், பின், முன் வினையெச்சம் ஆகிய சொற்களின் இறுதியில் உள்ள கைர ஈறு மேற்கூறிய விதிப்படி றகர ஈறாக மாறும்.

**எ.டு:**

அது மன் + கொண்கன் = அதுமற்கொற்கன்

சின்+ கடையும் = சிற்கடையும்

ஆன் + கொண்டான் = ஆற்கொண்டான்

ஈன் + கொண்டான் = ஈற்கொண்டான்

பின் + கொண்டான் = ஈற்கொண்டான்

முன் + கொண்டான் = முற்கொண்டான்

வரின் + கொள்ளும் = வரிற்கொள்ளும்.

**மன்னும் சின்னும் ஆனும் ஈனும்**

**பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்**

**அன்ன இயல என்மனார் புலவர்** **(38)**

அவ்வயின் என்னும் சொல்லின் முதலில் அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களும் 'எ' என்னும் வினா எழுத்தும் வந்தால் முன்பு கூறிய விதிப்படி னகரம் றகாரமாய்த் திரியும்.

**எ.டு**:

அவ்வயின் + கொண்டான் = அவ்வயிற்கொண்டான்

இவ்வயின்+ சென்றான் = இவ்வயிற்சென்றான்

உவ்வயின் + தந்தான் = உவ்வயிற்சென்றான்

எவ்வயின் + போயினான் = எவ்வயிற் போயினான்

**சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்**

**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப** **(39)**

குயின் என்னும் சொல் திரியாமல் இயல்பாகப் புணரும்

**எ.டு**:

குயின் + குழாம் = குயின்குழாம்

குயின் + செலவு = குயின் செலவு

குயின் + தோற்றம் = குயின் தோற்றம்

குயின் + மறைவு = குயின் மறைவு

**குயின்என் கிளவி இயற்கை யாகும்** **(40)**

எகின் என்னும் மரப்பெயர் ஆண்மரத்தின் இயல்பாய் அம்முச் சாரியைப் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

எகின் + கோடு, எகின் + அத்து + கோடு = எகினங்கோடு

எகின் + தோல் = எகினந்தோல்

எகின் + செதிள் = எகினஞ்செதிள்

எகின் + பூ = எகினம்பூ.

**எகின் மரமாயின் ஆண்மர இயற்றே** **(41)**

எகின் என்னும் மாப்பெயர் அல்லாத பிறபெயர்களை அடுத்து வல்லினம் வந்தால் அகாச் சாரியை பெறும் வல்லெழுத்து மிகும்.

**எ.டு:**

எகின் + கால், எகின் + அ + கால் = எகின்க்கால்

எகின் + செவி = எகினஞ்செவி

எகின் + தலை = எகினந்தலை

எகின் + புறம் = எகினம் புறம்

**ஏனை எகினே அகரம் வருமே**

**வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்** (42)

னகரத்தை ஈற்றில் கொண்ட கிளைப்பெயர்கள் ணகார ஈற்றுக் கிளைப் பெயர்களைப் போல் திரியாது இயல்பாய் முடியும்.

**எ.டு:**

எயின் + குடி = எயின்குடி

எயின் + சேரிய = எயின் சேரி

எயின் + தோட்டம் = எயின் தோட்டம்

எயின் + காடி= எயின்பாடி

**கிளைப் பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல (43)**

## மீன் என்னும் சொல்

மீன் என்னும் சொல்லில் உள்ள னகர ஈறு இயல்பாகவும் றகர ஈறாகத் திரிந்தும் புணரும்.

**எ.டு**:

மீன் + கண் = மீன்கண்

மீன் + கண் = மீற்கண்

மீன் + சினை = மீன்சினை

மீன் + சினை = மீற்சினை

மீன் + தலை = மீன்தலை

மீன் + தலை = மீற்தலை

மீன் + புறம் = மீன்புறம்

மீன் + புறம் = மீற்புறம்

**மீன் என் கிளவி வல்லெழுத் துறழ்வே (44)**

## தேன் எனும் சொல்

தேன் என்னும் சொல்லை அடுத்து, வல்லினத்தை முதலாகக் கொண்ட சொல் வந்து புணரும் போது இயல்பாகவும் னகரம் றகாரமாகத்

திரிந்தும் வல்லெழுத்து மிகுந்தும் புணரும் வல்லெழுத்து மிகுந்து புணரும் போது னகரம் கெடும்.

**எ.டு:**

**இயல்பு**

தேன் + குடம் = தேன்குடம்

தேன் + சாடி= தேன்சாடி

தேன் + தூதை = தேன் தூதை

தேன் + பானை = தேன் பானை

**றகரமாக திரிதல்**

தேன் + குடம் = தேற்குடம்

தேன் + சாடி = தேற்சாடி

தேன் + தூதை = தேற்தூதை

தேன் + பானை = தேற்பானை

தேன் + குடம் = தேக்குடம்

தேன் + சாடி= தேச்சாடி

தேன் + தூதை = தேத்தூதை

தேன் + பானை= தேப்பானை

**தேனென் கிளவி வல்லெழுத் தியையின்**
**மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்**
**ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே**
**வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை (45)**

தேன் என்னும் சொல்லை அடுத்து வல்லினம் வரும் போது மெல்லெழுத்து மிகுந்து வந்தாலும் தவறு இல்லை

**எ.டு:**

தேன் + குடம் = தேங்குடம்

தேன் + சாடி = தேஞ்சாடி

தேன் + தூதை = தேந்தூதை

தேன் + பானை = தேம் பானை

**மெல்லெழுத்து மிகினும் மான மில்லை** **(46)**

தேன் என்னும் சொல்லுடன் மெல்லெழுத்து வந்து புணரின் மெல்லெழுத்து மிகுதலோடு மிகாமையுமாக புணரும்.

**எ.டு:**

தேன் + மலர் = தேம்மலர், தேமலர்

**மெல்லெழுத் தியையின் இறுதியோடுறழும்** **(47)**

தேன் என்ற சொல் இறால் என்னும் சொல்லொடு புணரும் போது இயற்கையாகப் புணரும்.

**தேன் + இறால் = தேனிறால்**

**இறாஅல் தோற்றம் இயற்கை யாகும்** **(48)**

தேன் என்னும் சொல் இறாலுடன் புணரும்போது முன்பே மிகுந்த தகர ஒற்றுடன் மீண்டும் ஒரு தகர ஒற்று வந்து புணர்தலும் உண்டு

தேன் + இறால் = தேத்திறால்

தேன் என்னும் சொல்லை அடுத்து மெல்லினத்தை முதலில் கொண்ட சொல் வந்து சேர்ந்தால் னகர ஒற்று கெட்டும் கெடாமல் இயல்பாகவும் புணரும்.

**ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே (49)**

## மின் முதலான சொற்கள்

மின், பின், பன், கன் என்னும் நான்கு சொற்களும் வேற்றுமையிலும் அல்வழியிலும் ஞகர ஈற்றுத் தொழில் பெயர் போல வல்லினம் வரும் போது உகரமும் வல்லினமும் பெற்றுப் புணரும்

மெல்லினமும் இடையினமும் வரும்போது உகரம் பெறும்.

**எ.டு**:

மின் + கடிது = மின்னுக் கடிது

பின் + சிறிது = பின்னுச் சிறிது

மின் + தீது = மின்னுத்தீது

கன் + பெரிது = கன்னுப் பெரிது

மின் + ஞான்றது = மின்னு ஞான்றது

பின் + நீண்டது = பின்னு நீண்டது

பன் + மாண்டது = பன்னு மாண்டது

கன் + வலிது = கன்னு வலிது

கன் + யாத = கன்னுயாது

மின் + கடுமை = மின்னுக்கடுமை

பின் + சிறுமை = பின்னுச் சிறுமை

பன் + தீமை = பன்னுத் தீமை

கன் + பெருமை = கன்னுப் பெருமை

**மின்னும் பின்னும் பன்னும் கன்னும்**

**அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல** **(50)**

## கன் என்னும் சொல்

கன் என்னும் சொல் வேற்றுமையில் மரம் அல்லாத ஏனை எகினைப் போல் அகரம் பெற்று வல்லினம் வந்தால் வல்லெழுத்து மிகுந்தும் பிற எழுத்துக்கள் வந்தால் இயல்பாகவும் புணரும்

**எ.டு:**

கன் + குடம் = கன்னக்குடம்

கன் + சாடி= கன்னச் சாடி

கன் + தூதை = சுன்னத் தூதை

கன் + பானை = கன்னப்பானை

**வேற்றுமை யாயின் ஏனை எகினொடு**

**தோற்ற மொக்குங் கன்னென் கிளவி** **(51)**

## னகர ஈற்று இயற்பெயர்முன் தந்தை

னகர ஈற்று இயற்பெயரை (கொற்றன், சாத்தன்) அடுத்துத்தந்தை என்ற முறைப்பெயர் வந்தால் வருமொழி முதலில் உள்ள மெய்யெழுத்துக்

கெடும்; நிலை மொழியாகிய இயற்பெயரின் இறுதியில் உள்ள மெய்யை விட்டு அன் கெடும்

**எ.டு:**

கொற்றன் + தந்தை = கொற்றந்தை

சாத்தன் + தந்தை = சாத்தந்தை

**இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்**

**முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்**

**மெய்யொழித்து அன்கெடும் அவ்வியற் பெயரே** **(52)**

## ஆதன் பூதன்

ஆதன், பூதன் என்னும் இயற் பெயர்களை அடுத்துத் தந்தை என்ற முறைப்பெயர் வந்தால் முன்பு கூறியவற்றுடன் நிலைமொழி இறுதியில் உள்ள ஒற்றும் வருமொழி முதலில் உள்ள அகரமும் கெடும்

**எ.டு:**

ஆதன் + தன்தை =ஆந்தை

பூதன் +தந்தை = பூந்தை

**ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு**

**பெயரொற்று அகரம் துவரக் கெடுமே** **(53)**

மேற் கூறிய இயற்பெயர்கள் சிறப்பைக் குறிக்கும் அடையுடன் சேர்ந்து வரும்போது இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

பெருஞ்சாத்தன் + தந்தை = பெருஞ்சாத்தன் தந்தை

பெருங்கொற்றன் + தந்தை = பெருங்கொற்றன் தந்தை

**சிறப்பொடு வருவழி இயற்கை யாகும் (54)**

னகராஈற்று இயற்பெயர்கள் முன் மக்கள் முறை தோன்ற நிற்கும் சொற்கள் புணருமிடத்து, அவை மெய்யொழித்து இறுதி கெட்டு நின்ற வழியும் (உம்மையான்) மெய்யோடு இறுதி கெட்டு உரித்தாகும்.

**எ.டு:**

**கொற்றங் கொற்றன், கொற்றங்குடி, சாத்தங்குடி**

**நின்ற வழியும் அம் என்னும் சாரியை பெற்று நிற்றலும்**

**அப்பெயர் மெய்யொழித்து அன்கெடு வழியே**

**நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை**

**மக்கள் முறை தொகூஉம் மருங்கி னான (55)**

## தான், பேன், கோன் என்னும் பெயர்கள்

தான், பேன், கோன் என்னும் முறை இயற்பெயர்கள், தந்தை மக்கள் என்னும் முறைப்பெயர்களுடன் புணரும் போது இயல்பாகப் புணரும்.

**எ.டு:**

தான் + தந்தை = தான் தந்தை

பேன் + தந்தை = பேன் தந்தை

கோன் + தந்தை = கோன் தந்தை

**தானும் பேனும் கோனும் என்னும்**

**ஆமுறை இயற்பெயர் திரிபிட னிலவே (56)**

## தான் யான் என்னும் பெயர்கள்

தான் என்னும் விரவுப் பெயரும் யான் என்னும் உயர்திணைப் பெயரும் உருபுப் புணர்ச்சியில் கூறிய முறைப்படி தான் என்பதன் நெடில் குறுகும் யான் என்பதன் யகரம் கெட்டு ஆகாரம் எகரமாய் மாறும்

**எ.டு**:

தான் +கை = தன்கை

யான் - தலை = என்தலை

தான் + ஞான் = தன் ஞான்

யான் + நூல் = என்னூல்

தான் + வட்டு = தன்வட்டு

யான் + அடை= என்னாடை

**தான், யான் என்னும் பெயர் உருபியல் நிலையும் (57)**

## தான், யான் அல்வழிப் புணர்ச்சி

தான், யான் என்னும் சொற்கள் வேற்றுமை அல்லாத வழிக் குறுகல், திரிதல் தோன்றுதல் எதுவும் இல்லாமல் இயல்பாகப்புணரும்.

**எ.டு**:

தான் + குறியன் = தான்குறியன்

தான் + ஞான்றன் = தான் ஞான்றன்

யான் + குறியேன் = யான் குறியேன்

யான் - ஞான்றேன் = யான் ஞான்றேன்

**வேற்றுமை அல்வழிக் குறுகலும் திரிதலும்**

**தோற்றம் இல்லை என்மனார் புலவர்** **(58)**

## அழன் என்னும் சொல்

அழன் என்னும் சொல்லின் இறுதியில் உள்ள னகரம் கெட்டு வல்லெழுத்து மிகும்.

**எ.டு**:

அழன் + குடம் = அழக்குடம்

அழன் + சாடி = அழச்சாடி

அழன் + தூதை = அழத்தூதை

அழன் + பானை = அழப்பானை

**அழன் என் இறுதி கெட வல்லெழுத்து மிகுமே** **(59)**

## முன் என்னும் சொல்

முன் என்னும் சொல்லை அடுத்து வரும் இல் என்னும் சொல்லின் மேல் றகர ஒற்றுச் சேர்வது பழங்காலந்தொட்டு நிலவி வருவதாகும்.

**எ.டு**:

முன் + இல் = முன்றில்

**முன் என்கிளவி முன்னர்த் தோன்றும்**

**இல் என்கிளவிமிசை றகரம் ஒற்றல்**

**தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே** **(60)**

## பொன் என்னும் சொல்

பொன் எனும் சொல் தொடரியலாய் வரும்போது செய்யுளில் அதன் ஈறுகெடும்; லகரமும் மகர ஒற்றும் தோன்றும்.

**எ.டு:**

பொன் + தொடி= பொலந்தொடி

**பொன்என் கிளவி ஈறுகெட முறையின்**

**முன்னர்த் தோன்றும் லகார மகாரம்**

**செய்யுள் மருங்கின் தொடரிய லான** **(61)**

## இடையொற்று ஈறுகள்

## யகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி

யகரத்தை ஈற்றில் கொண்ட சொல்லை அடுத்து வல்லினத்தை முதலாகக் கொண்ட சொல் வந்து சேர்ந்தால் வேற்றுமையில் வல்லினம் மிகும்.

**எ.டு:**

நாய் + கால் = நாய்க்கால்

நாய் + செவி = நாய்ச்செவி

நாய் + தலை = நாய்த்தலை

நாய் + புறம் = நாய்ப்புறம்

**யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்**

**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே** **(62)**

யகரத்தை இறுதியில் கொண்ட தாய் என்னும் பெயர் வேற்றுமையில் இயல்பாய்ப் புணரும்

**எ.டு:**

தாய் + கை = தாய்கை

தாய் + செவி = தாய்செவி

தாய் + தலை = தாய்தலை

தாய் + புறம் = தாய்புறம்

**தாய் என் கிளவி இயற்கை யாகும் (63)**

தாய் என்னும் சொல் மகனுடனான செயலைச் சொல்லும் போது முன்பு கூறியதன்படி வல்லெழுத்து வந்தால் வல்லினம் மிகும்.

**எ.டு:**

தாய் + காட்சி = தாய்க்காட்சி

தாய் + செரு = தாய்ச்செரு

தாய் + தார் = தாய்த்தார்

தாய் + படை= தாய்ப்படை

**அதன் வினை கிளப்பின் முதனிலையியற்றே (64)**

யகர ஈற்றுச் சொல்லை அடுத்து வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வல்லினமும் மெல்லினமும் மிகும்.

**எ.டு:**

வேய் + குறை = வேய்க்குறை = வேய்ங்குறை

வேய் + சிறை = வேய்ச்சிறை = வேய்ஞ்சிறை

வேய் + புறம் = வேய்த்தலை = வேய்ந்தலை

வேய் + புறம்= வேய்ப்புறம் = வேய்ம்புறம்

**மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே (65)**

## யகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி

யகரத்தை இறுதியில் கொண்ட பெயர்ச் சொற்கள் எல்லாம் அவ்வழியில் இயல்பாகப் புணரும்

**எ.டு**:

நாய் + கடிது = நாய் கடிது

நாய் + சிறிது = நாய் சிறிது

நாய் + தீது = நாய் தீது

நாய் + பெரிது = நாய்பெரிது

**அல்வழியெல்லாம் இயல்பென மொழிப (66)**

## ரகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி

ரகரத்தை இறுதியில் கொண்ட பெயர்கள், யகரத்தை இறுதியில் கொண்ட பெயர்களைப் போல் வல்லினம் வந்து சேர்ந்தால் வல்லொற்று மிகும்.

**எ.டு**:

தேர் + கால் = தேர்க்கால்

தேர் + செய்கை = தேர்ச்செய்கை

தேர் + புறம் = தேர்ப்புறம்

**ரகார இறுதி யகார இயற்றே (67)**

## ஆர் முதலிய சொற்கள்

ஆர், வெதிர், சார், பீர் என்னும் நான்கு சொற்களை அடுத்து வல்லினத்தை முதலாய்க் கொண்ட சொற்கள் வந்தால் மெல்லினம் மிகும்.

**எ.டு:**

ஆர் + கோடு = ஆர்ங்கோடு

ஆர் + செதிள் = ஆர்ஞ்செதிள்

ஆர் + தோல் = ஆர்ந்தோல்

ஆர் + பூ = ஆர்ம்பூ

வெதிர் + செதிள் = வெதிர்ஞ்செதின்

சார் + தோல் = சார்ந்தோல்

பீர் + பூ = பீம்ம்பூ

**ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்**

**மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும் (68)**

## லகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி

லகரத்தை இறுதியில் கொண்ட பெயர்கள் னகர ஈற்றைப் போல் றகரமாய்த் திரிந்து வல்லெழுத்துடன் புணரும்.

**எ.டு:**

கல் + குறை = கற்குறை

கல் + சிறை = கற்சிறை

கல் + தலை = கற்தலை

கல் + புறம் = கற்புறம்

**வகார இறுதி நகார இயற்றே** **(71)**

வகரத்தை இறுதியில் கொண்ட சொற்களை அடுத்து மெல்லினம் வந்தால் லகரம் னகரமாகத் திரியும்

**எ.டு**:

கல் + ஞெரி = கன்ஞெரி

கவ் + நுனி = கன்நுனி

கல் + முறி = கன்முறி

**மெல்லெழுத் திசையின் னகார மாகும்** **(72)**

## லகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி

வகரத்தை இறுதியில் கொண்ட பெயர்கள் அவ்வழியில் வல்லெழுத்துடன் இயல்பாகவும் றகரமாகத் திரிந்தும் புணரும்

**எ.டு**:

கல் + குறிது = கல்குறிது= கற்குறிது

கல் + சிறிது = கல்சிறிது= கற்சிறிது

கல் + தீது = கல் தீது = கற் தீது

கல் + பெரிது = கல்பெரிது = கற்பெரிது

**அல்வழி யெல்லாம் உறழென மொழிய** **(73)**

## லகர ஒற்றை அடுத்து

அல்வழியில் தகரம் வந்தால் றகரமாகத் திரிதலுடன் ஆய்தம் நிலைப் பெற்றும் புணரும்.

**எ.டு:**

கல் + தீது = கஃதீது

கல் + தீது = கற்றீது

**தகரம் வரும் வழி ஆய்தம் நிலையலும்**

**புகர் இன்று என்மனார் புலமை யோரே (74)**

உண்டு. தனி நெடிலை அடுத்து வரும் லகர ஈறு, வல்லினத்துடன் இயல்பாகப் புணர்வதும் .

**எ.டு:**

பால் + கடிது = பால்கடிது

பால் + சிறிது = பால் சிறிது

பால் + தீது = பால்தீது

பால் + பெரிது = பால் பெரிது

**நெடியதன் இறுதி இயல்புமா ருளவே (75)**

## நெல் முதலிய சொற்கள்

நெல், செல், கொல், சொல் ஆகிய நான்கு சொற்களும் வேற்றுமையைப் போன்றே அல்வழியிலும் றகரமாகத் திரிந்து புணரும்.

**எ.டு:**

நெல் + கடிது = நெற்கடிது

செல் + சிறிது = செற்சிறிது

கொல் + தீது = கொற்தீது

சொல் + பெரிது = சொற்பெரிது

**நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்**

**அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல** **(76)**

## இல் என்னும் சொல்

இல் என்னும் சொல் வீட்டைக் குறிக்காமல் இன்மை என்னும் இல்லாமைப் பொருளை உணர்த்தும் போது அல்வழியில் வல்லினம் மிகும்; ஐகாரம் இடையில் வரும்; இயல்பாகும்; ஆகாரம் மிகும். இந்த நான்கும் கொள்ளத்தக்க மரபை அறிந்து வருமிடங்கள் உண்டு

**எ.டு:**

இல் + கல் = இல்லைக்கல்

இல் + கல் = இல்லைகல்

இல் + கல் = இல்கல்

இல் + கல் = இல்லாக்கல்

**இல்லன் கிளவி இன்மை செப்பின்**

**வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும்**

**இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்**

**கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே** **(77)**

## வல் என்னும் சொல்

வல் என்னும் சொல் அல்வழியிலும் வேற்றுமையிலும் தொழில் பெயருக்குக் கூறிய முறைப்படி உகரம் பெற்றும் வல்லெழுத்து வந்தால்

வல்லினம் மிகுந்தும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகவும் புணரும்.

## அல்வழி

வல் + கடிது = வல்லுக்கடிது

வல் + சிறிது = வல்லுச்சிறிது

வல் + தீது = வல்லுத்தீது

வல் + பெரிது = வல்லுப் பெரிது

வல் + ஞான்றது = வல்லு ஞான்றது

வல் + நீண்டது = வல்லு நீண்டது

வல் + மாண்டது = வல்லு மாண்டது

வல் + வலிது = வல்லு வலிது

## வேற்றுமை

வல் + கடுமை = வல்லுக்கடுமை

வல் + சிறுமை = வல்லுச் சிறுமை

வல் + தீமை = வல்லுத் தீமை

வல் - பெருமை = வல்லுப் பெருமை

வல் + ஞாற்சி = வல்லு ஞாற்சி

வல் + நீட்சி = வல்லு நீட்சி

வல் + மாட்சி = வல்லு மாட்சி

வல் - வலிமை = வல்லு வலிமை

**வல்என் கிளவி தொழிற்பெய ரியற்றே** **(78)**

வல்என்னும் சொல்லை அடுத்து நாயும் பலகையும் வருமொழியாய் வரும்போது உகரம் கெட்டுப் புணர்வதும் உண்டு. அவ்வாறு உகரம் கெடும் போது அகரம் நிலைபெறும்

**எ.டு:**

வல் + நாய் = வல்லநாய்

வல் + பலகை = வல்லப்பலகை

**நாயும் பலகையும் வரூஉங் காலை**
**ஆவயின் உகரங் கெடுதலும் உரித்தே**
**உகரங் கெடுவழி அகரம் நிலையும் (79)**

## பூல் முதலிய சொற்கள்

பூல், வேல், ஆல் என்ற பெயர்கள் வருமொழி வல்லினத்துடன் புணரும் போது வேற்றுமையில் அம்முச் சாரியை பெறும்.

**எ.டு:**

பூல் + கோடு = பூலங்கோடு

வேல் + கோடு = வேலங்கோ

ஆல் - கோடு = ஆலங்கோடு

பூல் + செதிள் = பூலஞ்செதிள்

வேல் + செதிள் = வேலஞ் செதிள்

ஆல் + செதிள் = ஆலஞ்செதிள்

பூல் + தோல் = பூலந்தோல்

வேல் + தோல் = வேலந் தோல்

ஆல் + தோல் =ஆலந் தோல்

பூல் + பூ = பூலம் பூ

வேல் + பூ = வேலம் பூ

ஆல் + பூ= ஆலம் பூ

**பூல்வே லென்றே ஆலென் கிளவியோடு**

**ஆமுப் பெயர்க்கும் அம்மிடை வருமே** **(80)**

## லகர ஈற்றுத் தொழிற்பெயர்

லகர ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற் பெயர் இயல்புக்கு ஏற்ப அல்வழியிலும் வேற்றுமையிலும் உகரச் சாரியைப் பெற்று வல்லெழுத்து வந்தால் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகவும் புணரும்

**எ.டு**:

கல் + கடிது = கல்லுக்கடிது

கல் + சிறிது = கல்லுச்சிறிது

கல் + தீது = கல்லுத் தீது

கல் + பெரிது = கல்லுப் பெரிது

கல் + ஞான்றது = கல்லு ஞான்றது

கல் + நீண்டது = கல்லு நீண்டது

கல் + மாட்சி = கல்லு மாட்சி

கல் + வலிமை = கல்லு வலிமை

**தொழிற் பெயரெல்லாம் தொழிற் பெயர் இயல** **(81)**

## வெயில் என்னும் சொல்

வெயில் என்னும் சொல் மழைக்குக் கூறப்பட்ட இயல்புக்கு ஏற்ப அத்துச்சாரியையும் இன் சாரியையும் பெறும்.

**எ.டு:**

வெயில் + கொண்டான் =

வெயிலத்துக் கொண்டான்

வெயில் + சென்றாள் =

வெயிலத்துச் சென்றான்

வெயிலிற் சென்றான்

வெயில் + தந்தான் =

வெயிலத்துச் தந்தான்

வெயிலிற் தந்தான்

வெயில் + போயினான் =

வெயிலத்துப் போயினான்

வெயிலிற் போயினான்

**வெயில் என் கிளவி மழையியல் நிலையும்** **(82)**

## வகர ஈற்று வேற்று மைப்புணர்ச்சி

சுட்டெழுத்தை முதலாகவுடைய வகர ஈற்றுச்சொல் உருபுப்புணர்ச்சிக்கு ஏற்ப வற்றுச் சாரியைப் பெற்றுப் புணரும்

**எ.டு:**

அவ் + கோடு = அவற்றுக்கோடு

இவ் + கோடு = இவற்றுக்கோடு

இவ் + செவி = இவற்றுச் செவி

உவ் + தலை = உவற்றுத் தலை

உவ் + புறம் = உவற்றுப் புறம்

**சுட்டு முதலாகிய வகர இறுதி**

**முற்படக் கிளந்த உருபியல் நிலையும் (83)**

## வகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி

சுட்டெழுத்தை முதலாக உடைய வகர ஈற்றுச் சொல் வல்லினத்துடன் புணரும் போது அல்வழியில் வகரம் திரிந்து ஆய்தம் ஆகும்.

**எ.டு:**

அவ் + கடிய = அஃகடிய

இவ் + சிறிய = இஃசிறிய

உவ் + தீய = உஃதீய

அவ் + பெரிய = அஃபெரிய

**வேற்றுமை அல்வழி ஆய்த மாகும் (84)**

சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட வகரத்தை அடுத்து மெல்லெழுத்து வந்தால் மெல்லெழுத்து மிகும்.

**எ.டு:**

அவ் + ஞாண் = அஞ்ஞாண்

இவ் + நூல் = இந்நூல்

உவ் + மணி = உம்மணி

**மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்** **(85)**

சுட்டெழுத்தை முதலாகக் கொண்ட வகர ஈற்றை அடுத்து இடையின எழுத்தும் உயிரெழுத்தும் புணர்ந்தால் இயல்பாகும்.

**எ.டு**:

அவ் + யாழ் = அவ்யாழ்

இவ் + வட்டு = இவ்வட்டு

உவ் + அடை = உவ்வடை

**ஏனவை புணரின் இயல்பென மொழிப** **(86)**

மேலே கூறப்பட்ட வகர ஈறு தவிர்த்துப் பிற வகர ஈறுகள் ஞகர ஈற்றுத் தொழிற் பெயருக்கு ஏற்ப உகரச் சாரியைப் பெற்று வல்லினம் வந்தால் வல்லினம் மிகுந்தும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகவும் புணரும்.

**எ.டு**:

தெவ் + கடிது = தெவ்வுக்கடிது

தெவ் + சிறிது = தெவ்வுச்சிறிது

தெவ் + தீது = தெவ்வுத்தீது

தெவ் + பெரிது = தெவ்வுப் பெரிது

தெவ் + ஞான்றது = தெவ்வு ஞான்றது

தெவ் + நீண்டது = தெவ்வு நீண்டது

தெவ் + மாண்டது = தெவ்வு மாண்டது

தெவ் + வலிது = தெவ்வு வலிது

**வேற்றுமை**

தெவ் + கடுமை = தெவ்வுக்கடுமை

தெவ் + சிறுமை = தெவ்வுச் சிறுமை

தெவ் + தீமை = தெவ்வுத் தீமை

தெவ் + பெருமை = தெவ்வுப் பெருமை

தெவ் + ஞாற்சி = தெவ்வு ஞாற்சி

தெவ் + நீட்சி = தெவ்வு நீட்சி

தெவ் + மாட்சி = தெவ்வு மாட்சி

தெவ் - வலிமை = தெவ்வு வலிமை

**ஏனை வகரம் தொழிற்பெய ரியற்றே** **(87)**

## ழ கர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

ழகரத்தை இறுதியில் கொண்ட சொல், வல்லினம் வந்தால் வேற்றுமையில் ரகர ஈற்றைப் போல் வல்லினம் மிகுந்து புணரும்.

**எ.டு**:

பூழ் + கால் = பூழ்க்கால்

பூழ் + சிறகு = பூழ்ச் சிறகு

பூழ் + தலை = பூழ்த் தலை

பூழ் + புறம் = பூழ்ப் புறம்

**ழகார இறுதி ரகார இயற்றே** **(88)**

## தாழ் என்னும் சொல்

தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லுடன் புணரும் போது அக்குச் சாரியை பெற்றுப் புணரும்

**எ.டு:**

தாழ் + கோல் = தாழக்கோல்

**தாழென் கிளவி கோலொடு புணரின்**

**அக்குஇடை வருதல் உரித்து மாகும்** **(89)**

தமிழ் எனும் சொல்லும் மேற்கூறிய தாழ் என்னும் சொல்லைப் போல் அக்குச் சாரியை பெற்றுப் புணரும்

**எ.டு:**

தமிழ் + கூத்து = தமிழக் கூத்து

தமிழ் + சேரி = தமிழச் சேரி

தமிழ் + தோட்டம் = தமிழத்தோட்டம்

தமிழ் + பள்ளி = தமிழப்பள்ளி

**தமிழென் கிளவியும் அதனோ ரற்றே** **(90)**

## குமிழ் என்னும் சொல்

குமிழ் என்னும் சொல் மரத்தை உணர்த்தினால் பீர் என்னும் மரப் பெயர்ப்புணர்ச்சிக்கு ஏற்ப மெல்லின எழுத்து மிகுந்து அம்முச் சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு:**

குமிழ் + கோடு = குமிழ்ங் கோடு , குமிழங் கோடு

குமிழ் + செதிள் = குமிழ்ஞ் செதிள், குமிழஞ் செதிள்

குமிழ் + தோல் = குமிழ்ந்தோல், குமிழந்தோல்

குமிழ் + பூ = குமிழ்ப்பூ, குமிழம்பூ

**குமிழ்என் கிளவி மரப்பெய ராயின்**

**பீர்என் கிளவியோ டொரியற் றாகும் (91)**

## பாழ் என்னும் சொல்

பாழ் என்னும் சொல் வல்லெழுத்து அல்லது மெல்லெழுத்து மிகுமாறு புணரும்

**எ.டு:**

பாழ் + கிணறு = பாழ்க்கிணறு

பாழ்ங் கிணறு

பாழ் + சேரி = பாழ்ச்சேரி

பாழ்ஞ்சேரி

பாழ் + தோட்டம் = பாழ்த்தோட்டம்

பாழ்ந்தோட்டம்

பாழ் + பாடி = பாழ்ப்பாடி

பாழ்ம்பாடி

**பாழ்என் கிளவி மெல்லெழுத் துறழ்வே (92)**

## ஏழ் என்னும் சொல்

ஏழ் என்னும் சொல், உருபுப் புணர்ச்சிக்கு ஏற்ப அன்சாரியை பெற்றுப் புணரும்.

### எ.டு:

ஏழ் + காயம் = ஏழன் காயம்

ஏழ் + சுக்கு = ஏழன் சுக்கு

ஏழ் + தோலை = ஏழன் தோரை

ஏழ் + பயறு = ஏழன்பயறு

**ஏழ்என் கிளவி உருபியல் நிலையும் (93)**

ஏழ் என்னும் பெயரை அடுத்து அளவுப்பெயர், நிலைப்பெயர், எண்ணுப்பெயர் ஆகியவை வந்து புணரும்போது நெட்டெழுத்துக் குறுகுவதுடன் ழகரத்தின் மேல் ஓர் உகரம் சேர்ந்து வரும்

அளவுப்பெயர்கள்

### எ.டு:

ஏழ் + கலம் = எழுகலம்

ஏழ் + சாடி = எழு சாடி

ஏழ் + தூதை = எழு தூதை

ஏழ் + பானை = எழு பானை

## நிறைப்பெயர்கள்

ஏழ் + கழஞ்சு = எழு கழஞ்சு

ஏழ் + தொடி = எழு தொடிஞ

ஏழ் + பலம் = எழு பலம்

## எண்ணுப் பெயர்கள்

ஏழ் + மூன்று = எழுமூன்று

ஏழ் + நான்கு = எழு நான்கு

**அளவும் நிறையும் எண்ணும் வருவழி**

**நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்**

**கடிநிலை இன்றே ஆசிரி யர்க்க** **(94)**

ஏழ் என்னும் பெயருடன் பத்து என்னும் எண் வந்து புணரும் போது அப்பத்தின் இடையில் உள்ள ஒற்றுக் கெட்டு ஆய்தப் புள்ளி நிலை பெறும்

**எ.டு**:

ஏழ் + பத்து = எழுபஃது

**பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி**

**நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி** **(95)**

ஏழ் என்னும் சொல்லை அடுத்து ஆயிரம் வந்தால் முன்பு பெற்ற உகரம் கெடும்.

**எ.டு**:

ஏழ் + ஆயிரம் = ஏழாயிரம்

**ஆயிரம் வருவழி உகரம் கெடுமே** **(96)**

ஏழ் என்னும் சொல்லை அடுத்து நூறு ஆயிரம் வந்தால் நெடு முதல் குறுகாமல் ஏழ் என்றே புணரும்

**எ.டு:**

ஏழ் + நூறாயிரம் = ஏழ் நூறாயிரம்

**நூறு ஊர்ந்து வரூஉம்**

**ஆயிரக் கிளவிக்குக் கூறிய**

**நெடுமுதல் குறுக்கம் இன்றே** **(97)**

ஏழ் என்னும் சொல் ஐ. அம், பல் என்னும் இறுதிகளைக் கொண்ட எண்ணுப்பெயர்களுடன் வரும்போது நெடுமுதல் குறுகாமலும் உகரம் பெறாமலும் இயல்பாகப் புணரும்

**எ.டு:**

ஏழ் + தாமரை = ஏழ் தாமரை

ஏழ் + வெள்ளம் = ஏழ் வெள்ளம்

ஏழ் + ஆம்பல் = ஏழ் ஆம்பல்

**ஐ அம் பல் என்வரூஉம் இறுதி**

**அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்** **(98)**

ஏழ் என்னும் பெயரை அடுத்து உயிரெழுத்தை முதலாகக் கொண்ட எண்ணுப்பெயர்கள் வரும்போதும் இயல்பாகப் புணரும்.

ஏழ் + அகல் = ஏழகல்

ஏழ் + உழக்கு = ஏழுழக்கு

ஏழ் + ஒன்று = ஏழொன்று

ஏழ் + இரண்டு = ஏழிரண்டு

**உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது** **(99)**

## கீழ் என்னும் சொல்

கீழ் என்னும் சொல்லை அடுத்து வல்லினம் வரும்போது வேற்றுமையில் வல்லொற்று மிகுந்தும் மிகாமலும் புணரும்.

கீழ் + குளம் = கீழ்குளம், கீழ்க்குளம்

கீழ் + கணக்கு = கீழ் கணக்கு, கீழ்க்கணக்கு

**கீழ்என் கிளவி உறழத் தோன்றும் (100)**

## ளகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி

ளகரத்தை இறுதியில் கொண்ட பெயர்கள் வல்லினத்துடன் புணரும் போது ணகர இறுதியைப் போல் டகரமாகத் திரியும்.

முள் + குறை = முட்குறை

முள் + சிறை = முட்சிறை

முள் + தலை = முட்தலை

முள் + புறம் = முட்புறம்

**ளகார இறுதி ணகார இயற்றே (101)**

ளகரத்தை இறுதியில் கொண்ட சொல்லை அடுத்து மெல்லினம் வந்தால் ளகர ஈறு ணகர ஈறாகத் திரியும்

**எ.டு:**

**வேற்றுமை**

முள் + ஞெரி = முண்ஞெரி

முள் + நுனி = முண்நுனி

முள் + முரி = முண்முரி

**அல்வழி**

முள் + ஞெரிந்தது = முண்ஞெரிந்தது

முள் + நீண்டது = முண்நீண்டது

முள் + மாண்டது = முண் மாண்டது

**மெல்லெழுத் தியையின் ணகார மாகும்** **(102)**

## ளகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி

ளகர ஈற்றை அடுத்து வல்லினம் வந்தால் அல்வழியில் டகரமாகத் திரிந்தும் இயல்பாகவும் புணரும்.

**எ.டு:**

முள் + கடிது = முட்கடிது

முள் + சிறிது = முட்சிறிது

முள் + தீது = முட் தீது

முள் + பெரிது முட் பெரிது

முள் + கடிது = முள்கடிது

முள் + சிறிது = முள் சிறிது

முள் + தீது = முள் தீது

முள் + பெரிது = முள் பெரிது

**அல்வழி எல்லாம் உறழென மொழிப்** **(103)**

ளகரத்தை அடுத்து வருமொழி முதலில் தகரம் வந்தால் ளகர ஈறு ஆய்தமாகத் திரியும்.

முள் + தீது முஃடீது என வரும். உம்மையால் முட்டீது. முட்டீமை எனவும் வரும்.

**ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே**

**தகரம் வரூஉங் காலை யான** **(104)**

தனிநெடிலெழுத்தைத் தொடர்ந்து வரும் ளகர ஈற்றுச் சொற்கள் இயல்பாகவும் வேற்றுமையைப் போல் டகரமாகத் திரிந்தும் புணரும்.

வாள் + கடிது = வாள்கடிது

வாள் + சிறிது= வாள் சிறிது

வாள் + தீது = வாள் தீது

வாள் + பெரிது = வாள்பெரிது

வாள் + கடிது = வாட்கடிது

வாள் + சிறிது = வாட்சிறிது

வாள் + தீது = வாட்டி தீது

வாள் + பெரிது = வாட்பெரிது

**நெடியதன் இறுதி இயல்பா குநவும்**

**வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும்**

**போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே** **(105)**

## ளகர ஈற்றுத் தொழிற் பெயர்

ளகர ஈற்றுத் தொழிற் பெயர்கள் வேற்றுமையிலும் அல்வழியிலும் ஞகர ஈற்றைப் போல் உகரம் பெற்று வல்லினம் வந்தால் வல்லினம் மிகுந்தும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகவும் புணரும்.

**அல்வழி**

துள் + கடிது= துள்ளுக் கடிது

துள் + சிறிது = துள்ளுச் சிறிது

துள் + தீது = துள்ளுத் தீது

துள் + பெரிது = துள்ளுப் பெரிது

துள் + ஞான்றது = துள்ளுஞான்றது

துள் + நீண்டது = துள்ளு நீண்டது

துள் + மாண்டது = துள்ளு மாண்டது.

துள் + வலிது = துள்ளு வலிது

**வேற்றுமை**

துள் + கடுமை = துள்ளுக் கடுமை

துள் + சிறுமை= துள்ளுச் சிறுமை

துள் + தீமை = துள்ளுத்தீமை

துள் + பெருமை = துள்ளுப்பெருமை

துள் + ஞாற்சி = துள்ளுஞாற்சி

துள் + நீட்சி = துள்ளு நீட்சி

துள் + மாட்சி = துள்ளு மாட்சி

துள் + வலிமை = துள்ளு வலிமை

**தொழிற்பெய ரெல்லாந் தொழிற் பெயரியல** **(106)**

## இருள் என்னும் சொல்

இருள் என்னும் சொல் வெயில் என்னும் சொல்லைப் போல்அத்தும் இன்னும் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

இருள் +கொண்டான் = இருளத்துக் கொண்டான்

இருளிற்கொண்டான்

இருள் + சென்றான் = இருளத்துச் சென்றான்

இருளிற் சென்றான்

இருள் + தந்தான் = இருளத்துத் தந்தான்

இருளிற் தந்தான்

இருள் + போயினான் = இருளத்துப் போயினான்

இருளிற் போயினான்

**இருள்என் கிளவி வெயிலியல் நிலையும் (107)**

## புள், வள் என்னும் சொற்கள்

புள், வள் என்னும் சொற்கள் தொழிற்பெயர்ப் புணர்ச்சிக்கு ஏற்ப உகரச் சாரியை பெற்று வல்லெழுத்து வந்தால் வல்லினம் மிகுந்தும் மெல்லினமும், இடையினமும் வந்தால் இயல்பாகவும் புணரும்.

புள் + கடிது = புள்ளுக் கடிது

புள் + சிறிது = புள்ளுச் சிறது

வள் + பெரிது = வள்ளுப் பெரிது

வள் + தீது = வள்ளுத் தீது

புள் + ஞான்றது = புள்ளு ஞான்றது

வள் + மாண்டது = வள்ளுமாண்டது

**வேற்றுமை**

புள் + கடுமை = புள்ளுக்கடுமை

புள் + சிறுமை = புள்ளுச் சிறுமை

வள் + தீமை = வள்ளுத் தீமை

வள் + பெருமை = வள்ளுப் பெருமை

புள் + ஞாற்சி = புள்ளு ஞாற்சி

புள் + நீட்சி = புள்ளு நீட்சி

வள் + மாட்சி = வள்ளு மாட்சி

**புள்ளும் வள்ளும் தொழிற் பெயரியல் (108)**

## மக்கள் என்னும் சொல்

**மக்கள் என்னும் பெயர்நிலைக் கிளவி**

**தக்கவழி யறிந்து வலித்தலும் உரித்தே (109)**

மக்கள் என்னும் சொல்லில் உள்ள ளகரம் தக்க இடங்களில் டகரமாகத் திரிவதும் உண்டு.

**எ.டு:**

மக்கள் + கை = மக்கட்கை

மக்கள் + செவி = மக்கட்செவி

மக்கள் + தலை = மக்கட் தலை

மக்கள் + புறம் = மக்கட்புறம்

**உணரக்கூறிய புணரியல் மருங்கின்**

**கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே (110)**

புள்ளியீறுகள் நின்று நாற்கணத்தொடும் மயங்கிப் புணரும் முறைமை பற்றித் தெளிவாகக் கூறிய புணர்ச்சி விதிகளின் பக்கத்திதானே, கூறாதனவற்றிற்குச் செய்கையறிந்து புணர்த்தற்குரியவற்றை ஆராய்ந்து செய்யுளினையும் நோக்கிக்கருதி அவற்றை விதியாகக் கொள்க.

## தொகுப்புரை:

மெல்லொற்று ஈறுகள், அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகள், ஆண், பெண், விண், எண் என்னும் ணகர ஈற்றுச்சொற்கள் புணர்ச்சி, மகர ஈற்றுச்சொற்கள் புணர்ச்சி, ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி,எல்லாம் என்னும் விரவுப்பெயர்ப் புணர்ச்சி, மகரம் குறுகும் இடங்கள், னகர ஈற்றுப் பெயர்கள் புணர்தல், இடையொற்று ஈறுகள், ழகர ஈற்றுச்சொற்கள் புணர்தல், பேரெண்கள் புணர்தல் போன்றவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

### புள்ளிமயங்கியல் முற்றியது

**அருஞ்சொற்பொருள் விளக்கம்:**

1. கண் - இடம்
2. கிளவி - சொல்
3. வளி - காற்று
4. திங்கள் - மாதம்
5. தூ – வலிமை

6. ஏ – அம்பு
7. பெற்றம் - பசு
8. மகம் - நாள்

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வேற்றுமையில் நிலைமொழி ணகரஈறு வருமொழி வல்லெழுத்துடன் புணரும்போது

அ) வல்லொற்றுமிகும் ஆ) ணகரம் டகரமாகும்

இ) மெல்லொற்றுமிகும் ஈ) ணகரம் தகரமாகும்

2. வடக்கு +கிழக்கு எவ்வாறு புணரும்?;

அ) வடக்குகிழக்கு ஆ) வடகிழக்கு

இ) வடக்கிழக்கு ஈ) வடக்கேகிழக்கு

3. பத்து +ஆயிரம் ஸ்ரீ

அ) பத்தாயிரம் ஆ) பத்துஆயிரம்

இ) பதினாயிரம் ஈ) பன்னிரண்டுஆயிரம்

4. மூன்று+உழக்கு=

அ) மூன்றுஉழக்கு ஆ) மூவுழக்கு

இ) மூவ்ழக்கு ஈ)மூன்உழக்கு

## குறு வினாக்கள்

1 ஞகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.

2. நகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக

3. மகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சியை விளக்குக.

4. மகர ஈற்று அல்வழிப்புணர்ச்சியை விளக்குக.

5. னகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

6. ணகர ஈற்று கிளைப்பெயர் எவ்வாறு புணரும்?

## கட்டுரை வினாக்கள்

1. ணகர ஈற்று உணவுப் பெயர் எவ்வாறு திரியும்? விவரி

2. யகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

3. லகர ஒற்று வல்லினம் வந்தால் வேற்றுமையில் எவ்வாறு திரியும்?

4. ரகர ஈற்றுப் புணர்ச்சியை விவரிக்க.

5. வகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.

6. ழகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியை கட்டுரை எழுதுக.

## பாடநூல்

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாவலரேறு பாலசுந்தரனார் உரை - பெரியார் பல்கலைக்கழகம் வெளியிடு - சேலம் - 11, 2012

## Web Sources

1. TamilHeritageFoundationwww.tamilheritage.org<http://www.tamilheritage.org

2. Tamilvirtual Universitylibrary-www.tamilvu.org/libraryhttp://www.virtualvu.org/

# அலகு - 4

## குற்றியலுகரப் புணரியல்

## நோக்கம்

தனித்து வரல் மரபினையுடைய உயிரீறு புள்ளியீறுகளின் புணர்ச்சி விதிகளைக் கூறிச் சார்ந்துவரல் மரபின எனப்பட்டவற்றுள் மொழிக்கு ஈறாக நிற்பதற்குரியது குற்றியலுகரம் மட்டுமே யாதலின், அஃது ஈறாக நின்று நாற்குணங்களொடும் புணருமாறு கூறுதலின் இவ்வியல் குற்றியலுகரப் புணரியல் என்னும் பெயர்த்தாயிற்று.

## குற்றியலுகரம்

உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறுகி ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும். இந்தக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

அவை

1. நெடில் தொடர்க்குற்றியலுகரம்
2. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
3. இடைத் தொடர்க் குற்றியலுகரம்
4. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
5. வன்தொடர்க் குற்றியலுகரம்
6. மென் தொடர்க் குற்றியலுகரம்

என்பவை ஆகும். இவற்றில் நெடில் தொடர் எனக் குறிப்பிடப்படும் குற்றியலுகரம் முதலில் நெடில் எழுத்தைக் கொண்ட ஈரெழுத்துச் சொல்லாக வரும். இதை

**ஈரெழுத்தொருமொழி, உயிர்த்தொடர், இடைத்தொடர்**

**ஆய்தத் தொடர்மொழி, வன்றொடர் மென்தொடர்**

**ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்** **(1)**

மேலே குறிப்பிடப்பட்ட அறுவகை குற்றியலுகரங்களில் வன்தொடர்க் குற்றியலுகரமும் மென் தொடர்க் குற்றியலுகரமும் இரு தனி மெய்யெழுத்துக் களை அருகருகே கொண்டு வரும். இடைத் தொடரில் இரு தனி மெய்கள் சேர்ந்து வருவதில்லை.

ஈர்க்கு - வன்தொடர்க் குற்றியலுகரம்

மொய்ம்பு - மென்தொடர்க் குற்றியலுகரம்

மார்பு - இடைத்தொடர்க் குற்றியலுகரம்

**அவற்றுள்**

**ஈரொற்றுத் தொடர் மொழி இடைத் தொடராகா** **(2)**

அவ்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஆறுவகையிலும் உகரம் குறுகி நிற்கும்.

**அல்வழி**

நாகு +கடிது = நாகுகடிது

**வேற்றுமை**

நாகு + கடுமை = நாகு கடுமை

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**

**எல்லா இறுதியும் உகரம் நிலையும்** **(3)**

## குற்றியலுகரப் பொதுப்புணர்ச்சி

வன்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து வல்லினம் வரும் போது குற்றியலுகர அரை மாத்திரையில் நிற்றல் உண்டு; அதை விடக் குறுகிக் கால்மாத்திரை பெறுவதும் உண்டு.

கொக்கு + கடிது = கொக்குக் கடிது

கொக்கு + கடுமை = கொக்குக் கடுமை

**வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்**
**தொல்லை இயற்கை நிலையிலும் உரித்தே** **(4)**

குற்றியலுகரத்தை அடுத்து யகரம் வருமொழி முதலில் வரும் போது உகரம் மறைந்து இகரம், குற்றியலுகரமாய்த் தோன்றும்.

**எ.டு:**

நாகு + யாது = நாகியாது

வரகு + யாது = வரகியாது

தெள்கு + யாது = தெள்கியாது

எஃகு + யாது = எஃகியாது

கொக்கு + யாது = கொக்கியாது

குரங்கு + யாது = குரங்கியாது

**யகரம் வருவழி இகரம் குறுகும்**
**உகரக் கிளவி துவரத் தோன்றாது** **(5)**

## குற்றியலுகர ஈற்று வேற்றுமைப்புணர்ச்சி

வேற்றுமைப் புணர்ச்சியில் ஈரெழுத்து நெடில் தொடர்க் குற்றியலுகரம். உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றைத் தொடர்ந்து வல்லின எழுத்து வந்தால் குற்றியலுகரத்தின் இடையே இன ஒற்றுமிகும்; வருமொழிக்கு ஏற்ப வல்லினம் மிகும். வல்லினம் அல்லாமல் வேறு எழுத்து வந்தால் இயல்பாகப் புணரும்.

**எ.டு**:

யாடு + கால் = யாட்டுக்கால்

யாடு + செவி = யாட்டுச்செவி

யாடு + தலை = யாட்டுத்தலை

யாடு + புறம் = யாட்டுப்புறம்

முயிறு + கால் = முயிற்றுக்கால்

முயிறு + சினை = முயிற்றுச் சினை

முயிறு + தலை = முயிற்றுத் தலை

முயிறு + புறம் = முயிற்றுப் புறம்

யாடு + ஞாற்சி = யாட்டு ஞாற்சி

யாடு + நீட்சி = யாட்டு நீட்டு

யாடு+ மாட்சி = யாட்டு மாட்சி

யாடு + யாப்பு = யாட்டு யாப்பு

யாடு + வலிமை = யாப்பு வலிமை

யாடு + அடைவு = யாப்பு அடைவு

முயிறு + ஞாற்சி = முயிற்று ஞாற்சி

முயிறு + நீட்சி = முயிற்று நீட்சி

முயிறு + மாட்சி = முயிற்று மாட்சி

முயிறு + யாப்பு = முயிற்று யாப்பு

முயிறு + வலிமை = முயிற்று வலிமை

முயிறு + அடைவு = முயிற்று அடைவு

**ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்**

**வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்**

**தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி (6)**

ஈரெழுத்து வரும் நெடில் தொடர்க் குற்றியலுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் இடையில் ஒற்று மிகாமல் வல்லின முதலுடன் புணர்வதும் உண்டு, அவ்வாறு புணரும் போது வல்லினமும் மிகாது.

நாகு + கால் = நாகு கால்

நாகு + சினை = நாகு சினை

வரகு - தலை = வரகு தலை

வரகு + புறம் = வரகு புறம்

**ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே**

**அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே (7)**

இடைத்தொடர்க் குற்றியலுகரமும் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரமும் வேற்றுமையில் வல்லினம் வரும் போது இயல்பாகப் புணரும்.

தெள்கு + கால் = தெள்குகால்

தெள்கு + சினை = தெள்கு சினை

எஃகு + தலை = எஃகு தலை

எஃகு + புறம் = எஃகு புறம்

**இடை ஒற்றுத் தொடரும் ஆய்த் தொடரும்**

**நடைஆ இயல என்மனார் புலவர்** **(8)**

## வன்தொடர், மென்தொடர்ப் புணர்ச்சி

வன்தொடர்க் குற்றியலுகரமும் மென் தொடர்க் குற்றியலுகரமும் வருமொழியாய் வரும் வல்லினத்தோடு ஏற்ப ஒற்றுமிக்குப் புணரும். மென்தொடர்க் குற்றியலுகரத்தில் உள்ள மெல்லொற்றானது வல்லொற்றாய்த் திரியும் அல்லது அதன் கிளை ஒற்றாக மாறும்.

**எ.டு**:

கொக்கு + கால் = கொக்குக்கால்

கொக்கு + சிறகு = கொக்குச்சிறகு

கொக்கு + தலை = கொக்குத் தலை

கொக்கு + புறம் = கொக்குப் புறம்

குரங்கு + கால் = குரங்குக்கால்

குரங்கு + செவி = குரங்குச் செவி

குரங்கு + தலை = குரங்குத் தலை

குரங்கு + புறம் = குரங்குப் புறம்

எண்கு + குட்டி = எண்குக் குட்டி

எண்கு + செவி = எண்குச் செவி

எண்கு + தலை = எண்குத் தலை

எண்கு + புறம் = எண்குப் புறம்

குரங்கு + கால் = குரக்குக்கால்

குரங்கு + செவி = குரக்குச் செவி

குரங்கு + தலை = குரக்குத் தலை

குரங்கு + புறம் = குரக்குப் புறம்

**வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்**

**வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே**

**மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்**

**வல்லொற் றிறுதி கிளை யொற்றாகும் (9)**

வன்தொடர் மென்தொடர் குற்றியலுரமாய் வரும் மரப்பெயர்கள் முன்பு கூறிய விதியுடன் அம்முச்சாரியையும் பெற்றுப் புணரும்.

தேக்கு + கோடு = தேக்கங்கோடு

தேக்கு + செதிள் = தேக்கஞ்செதிள்

தேக்கு + தோல் = தேக்கந்தோல்

தேக்கு + பூ = தேக்கம் பூ

வேம்பு + கோடு = வேம்பங்கோடு

வேம்பு + செதிள் = வேப்பஞ்செதிள்

வேம்பு + தோல் = வேப்பந்தோல்

வேம்பு + பூ = வேப்பம் பூ

**மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை (10)**

மென்றொடர்க் குற்றியலுகர மரப்பெயர்களில் வலித்தல் விகாரம் பெறாமல் வரும் பெயர்களும் உண்டு.

**எ.டு**:

குருந்து + கோடு = குருந்தங்கோடு

குருந்து + செதிள் = குருந்தஞ் செதிள்

குருந்து + தோல் = குருந்தந்தோல்

குருந்து + பூ = குருந்தம்பூ

புன்கு + கோடு = புன்கங்கோடு

புன்கு + செதிள் = புன்கஞ்செதிள்

புன்கு + தோல் = புன்கந்தோல்

புன்கு + பூ = புன்கம்பூ

**மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே (11)**

## ஈரெழுத்து நெடில் தொடரும் வன்தொடரும்

நெடில் எழுத்தை முதலாகக் கொண்ட ஈரெழுத்தைக் குற்றியலுகரமும் வன்தொடர்க் குற்றியலுரமும் அம்சாரியை பெறுவதற்கும் உரியவை ஆகும். இது மரபாக வரும் சொற்களில் மட்டுமே இடம் பெறும்.

**எ.டு:**

ஏறு + கோள் = ஏறங்கோள்

வட்டு + போர் = வட்டம் போர்

**ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்**

**அம்மிடை வரற்கும் உரியவை உளவே**

**அம்மர பொழுகும் மொழி வயி னான** **(12)**

## அக்குச் சாரியை பெறும் மென் தொடர்

மென்தொடர்க் குற்றியலுகரம் வலித்தல் விகாரம் பெறாது அக்குச் சாரியை பெற்றும் வரும்; பிற சாரியைப் பெற்றும் வரும்

**எ.டு:**

குன்று + கூகை = குன்றக்கூகை

மன்று + பெண்ணை = மன்றப் பெண்ணை

**ஒற்று நிலை திரியாது அக்கொடு வரூஉம்**

**அக்கிளை மொழியும் உளஎன மொழிப** **(13)**

## வண்டும் பெண்டும்

வண்டு, பெண்டு என்னும் மென்தொடர்க் குற்றியலுலூகச் சொற்கள் இன் சாரியை பெற்றும் புணரும்.

**எ.டு:**

வண்டு + கால்= வண்டின்கால்

பெண்டு + கால்= பெண்டின் கால்

வண்டும் பெண்டும் இன்னொடு சிவனும் (15)

மேற்கூறியவற்றில் பெண்டு என்னும் சொல் இன் சாரியை பெறாமல் அன் சாரியை பெற்றும் புணரும்.

**எ-டு**

பெண்டு + கை, பெண்டு + அன் + கை = பெண்டன்கை

**பெண்டசன் கிளவிக்கு அன்னும் வரையார் (16)**

## யாது, அஃது முதலிய சுட்டுப் பெயர்கள்

யாது என்னும் வினாவும் கட்டை முதலாகக் கொண்ட ஆய்தத் தொடர்க் குற்றியலுரமும் உருபுப் புணர்ச்சிக்கு ஏற்ப அன்சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு:**

யாது + கோடு = யாதன்கோடு

அஃது + கோடு = அதன் கோடு

இஃது + கோடு = இதன் கோடு

உஃது + கோடு = உதன் கோடு

**யாதென் இறுதியுஞ் சுட்டு முதலாகிய**
**ஆய்த இறுதியும் உருபியல் நிலையும் (17)**

சுட்டெழுத்தை முதலில் கொண்ட ஆய்தத் தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துப் பிற எழுத்துக்கள் வந்தால் அல்வழியில் ஆய்தம் நிலை பெற்றுப் புணரும்

**எ.டு:**

அஃது + அடை= அஃதடை

இஃது + அடை = இஃதடை

உஃது + அடை = உஃதடை

**முன்னுயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி**

**மன்னல் வேண்டும் அல்வழி யான (18)**

சுட்டெழுத்தை முதலில் கொண்ட ஆய்தத் தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துப் பிற எழுத்துக்கள் வந்தால் ஆய்தம் கெடும்.

அஃது+ கடிது =அதுகடிது

அஃது + சிறிது =அதுசிறிது

இஃது + தீது = இதுத்து

உஃது + பெரிது = உதுபெரிது

**அஃது - ஞான்றது அது ஞான்றது.**

இஃது + நீண்டது = இது நீண்டது

இஃது + மாண்டது = இது மாண்டது

உஃது + யாது = உதுயாது

உஃது + வலிது = உது வலிது

**ஏனைமுன் வரினே தானிலை யின்றே (19)**

## குற்றியலுக ஈற்று அல்வழிப் புணர்ச்சி

நெடில் தொடர், உயிர்த்தொடர். இடைத்தொடர், ஆய்தத் தொடர் ஆகிய குற்றியலுகரங்கள் அல்வழியில் இயல்பாய்ப் புணரும்.

**எ.டு**:

நாகு + கடிது = நாகு கடிது

வரகு + சிறிது = வரகு சிறிது

தெள்கு + தீது = தெள்குதீது

எஃகு + பெரிது = எஃகு பெரிது

குரங்கு+ சிறிது= குரங்கு சிறிது

**அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**

**சொல்லிய பண்பின் இயற்கை யாகும் (20)**

மேற்கூறிய ஆறு குற்றியலுகரங்களுள் வன்தொடர்க் குற்றியலுகரம் மட்டும் அவ்வழியில் வல்லினம் வந்தால் வல்லொற்று மிக்குப் புணரும்.

**எ.டு**:

கொக்கு + கடிது = கொக்குக் கடிது

கொக்கு + சிறிது = கொக்குச் சிறிது

கொக்கு + தீது = கொக்குத் தீது

கொக்கு + பெரிது = கொக்குப் பெரிது

**வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே (21)**

## ஆங்கு முதலிய சொற்கள்

சுட்டு நீண்ட மென்தொடர்க் குற்றியலுகரம் யா எனும் வினாவை முதலில் கொண்ட மென்தொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றைத் தொடர்ந்து வல்லினம் வந்தால் வல்லெழுத்து மிக்குப் புணரும்.

**எ.டு**:

ஆங்கு + கொண்டான் = ஆங்குக் கொண்டான்

ஈங்கு + சென்றான்= ஈங்குச் சென்றான்

ஊங்கு + தந்தான் = ஊங்குத் தந்தான்

யாங்கு + போயினான் = யாங்குப் போயினான்

**சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்**

**யாவினா முதலிய மென்றொடர் மொழியும்**

**ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை** **(22)**

யா என்னும் வினாச் சொல்லை முதலில் கொண்ட மென்தொடர்க் குற்றியலுகரம் இயல்பாகவும் புணரும்.

யாங்கு + கொண்டான் = யாங்கு கொண்டான்

**யாவினா மொழியே இயல்பு மாகும்** **(23)**

முன்பு கூறிய நான்கு சொற்களும் தந்நிலை திரியாமல் அங்கு, இங்கு, உங்கு, யாங்கு என்று வரும் போதும் வல்லாற்று மிக்குப் புணரும்.

**எ.டு:**

அங்கு + கொண்டான் = அங்குக் கொண்டான்

இங்கு + சென்றான் = இங்குச் சென்றான்

உங்கு + தந்தான் = உங்குத் தந்தான்

யாங்கு + போனான் = யாங்குப் போனான்

**அந்நான் மொழியும் தந்நிலை திரியா** **(24)**

## உண்டு என்னும் சொல்

உண்டு என்னும் சொல்லை அடுத்து வல்லினம் வரும் போது குற்றியலுகரம் மெய்யொடு கெடும்: ணகர ஒற்று ளகர ஒற்றாகத் திரியும். இவ்வாறு கெட்டும் திரிந்தும் புணராமல் இயல்பாகவும் புணரும்.

**எ.டு:**

உண்டு + பொருள் = உள்பொருள்

உண்டுஎன் கிளவி உண்மை செப்பின்

**முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்**

**மேனிலை ஒற்றே ளகார மாதலும்**

**ஆமுறை இரண்டும் உரிமையையும் உடைத்தே**

**வல்லெழுத்து வரூஉங் காலையான (25)**

## திசைப் புணர்ச்சி

இரு திசைப் பெயர்கள் புணரும் போது இடையில் ஏகாரம் வரும்.

வடக்கு + தெற்கு = வடக்கே தெற்கு

கிழக்கு + மேற்கு = கிழக்கே மேற்கு

**இருதிசை புணரின் ஏயிடை வருமே (26)**

இருபெருந்திசைகளுடன் கோணத்திசை புணரும் போது இடையில் நின்ற ஒற்றும் இறுதிக் குற்றியலுகரமும் கெடும். தெற்கோடு புணரும் போது றகர ஒற்றுத் திரிந்து னகரமாகும்.

**எ.டு:**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

வடக்கு + மேற்கு = வடமேற்கு

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு

தெற்கு + மேற்கு = தென்மேற்கு

**திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்**

**கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்**

**ஒற்று மெய்திரிந்து னகார மாகும்**

**தெற்கோடு புணருங் காலை யான** **(27)**

## பத்தின் முன் எண்ணுப் பெயர்கள்

பத்து என்னும் சொல்லை அடுத்து ஒன்று முதல் எட்டு ஈறாக உள்ள எண்கள் வந்தால் பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் குற்றியலுகரம் மெய்யோடு கெடும் இன் என்னும் சாரியை வரும். இரண்டு என்னும் எண் இவ்வகையாகப் புணராது.

**எ.டு:**

பத்து + ஒன்று = பதினொன்று

பத்து + மூன்று = பதின்மூன்று

பத்து + நான்கு = பதிநான்கு

பத்து + ஐந்து = பதினைந்து

பத்து + ஆறு = பதினாறு

பத்து + ஏழு = பதினேழு

பத்து + எட்டு= எதினெட்டு

**ஒன்று முதலாக எட்டன் இறுதி**

**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**

**குற்றியலுகரம் மெய்யொடும் கெடுமே**

**முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே** **(28)**

பத்து என்ற சொல்லை அடுத்து இரண்டு வந்து புணரும் போது குற்றியலுகரமும் அது ஏறி நின்ற மெய்யும் அருகில் நின்ற தகர மெய்யும் கெடும், னகர ஒற்றுத் தோன்றி இரட்டித்து நிற்கும்.

**எ.டு:**

பத்து + இரண்டு, பத் + இரண்டு, ப + ன் + இரண்டு,

ப + ன் + ன் + இரண்டு = பன்னிரண்டு

**பத்தன் ஒற்றுக்கெட னகரம் இரட்டல்**

**ஒத்த தென்ப இரண்டு வருகாலை (29)**

## பத்தின் முன் ஆயிரம்

பத்து என்னும் சொல்லை அடுத்து ஆயிரம் வரும் போதும் ஒன்று முதல் எட்டு வரை உள்ள எண்களுக்குக் கூறியது போன்றே குற்றியலுகரம் மெய்யொடு கெட்டு இன்சாரியை பெறும்.

**எ.டு:**

பத்து + ஆயிரம், பத் + ஆயிரம், பத் + இன் + ஆயிரம் = பதினாயிரம்

பத்து + ஒன்று + ஆயிரம் = பதினோராயிரம்

பத்து + இரண்டு + ஆயிரம் = பன்னிரண்டாயிரம்

**ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது (30)**

## பத்தின் முன் நிறை அளவுப்பெயர்கள்

பத்து என்னும் சொல்லை அடுத்து நிறுத்தல் பெயரும் அளவுப் பெயரும் புணரும் போதும் முன்பு கூறிய விதிப்படியே உகரம் ஒற்றுடன் கெட்டு இன் சாரியை பெறும்.

**எ.டு:**

பத்து + இன் + கழஞ்சு= பதின்கழஞ்சு

பத்து + இன் + தொடி = பதின்தொடி

பத்து + இன் + கலம் =பதின்கலம்

பத்து + இன் + சாடி= பதின்சாடி

பத்து + இன் + நாழி = பதின்நாழி

பத்து + இன் + உழக்கு =பதின்உழக்கு

**நிறையும் அளவும் வரூஉங் காலையும்**

**குறையா தாகும் இன்னென் சாரியை** **(31)**

## எண்ணுப்பெயர் முன் பத்து

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்களை அடுத்துப் பத்து என்னும் எண்ணுப் பெயர் வரும் போது பத்தின் இடையில் நின்ற தகரம் கெட்டு ஆய்தம் வரும். ஆறு என்னும் சொல் தவிர பிற சொற்களின் இறுதியில் நிற்கும் குற்றியலுகரம் மெய்யொடும் கெடும்.

**எ.டு:**

ஒன்று + பத்து = ஒருபஃது, இரண்டு + பத்து =இருபஃது

**ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர்**

**நின்ற பக்தன் ஒற்றுக்கெட ஆய்தம்**

**வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப**

**கூறிய இயற்கை குற்றிய லுகரம்**

**ஆறன் இறுதி அல்வழி யான** **(32)**

மேற்கூறிய ஒன்பது எண்களில் முதல் இரு எண்களின் இடைநின்ற ஒற்று ரகர ஒற்று ஆகும். உகரம் வரும்.

**எ.டு:**

ஒன்று + பத்து = ஒரு பஃது

**முதலீ ரெண்ணின் ஒற்று ரகர மாகும்**

**உகரம் வருதல் ஆவயி னான** (33)

மேற்கூறிய விதியின் தொடர்ச்சியாக இரண்டு என்னும் சொல்லின் இடையில் நின்ற ரகரம் கெடும்.

**எ.டு:**

இரண்டு + பத்து =இருபஃது

**இடைநிலை ரகரம் இரண்டுஎன் எண்ணிற்கு**

**நடைமருங் கின்றே பொருள்வயி னான** (34)

மூன்று, ஆறு என்னும் சொற்களின் முதலில் உள்ள நெடில் குறில் ஆகக் குறுகும். மூன்று என்னும் சொல்லின் இடையில் நின்ற ஒற்று பகரம் ஆகும்.

**எ.டு:**

மூன்று + பத்து =முப்பஃது

ஆறு + பத்து =அறுபஃது

**மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்** (35)

**மூன்றன் ஒற்றே பகார மாகும்** (36)

நான்கு என்னும் எண்ணின் இடையில் நின்ற னகர ஒற்று, றகர ஒற்றாகத் திரியும்,

**எ.டு:**

நான்கு + பத்து = நாற்பஃது

**நான்கன் ஒற்றே றகர மாகும்** **(37)**

ஐந்து என்னும் எண்ணின் இடையில் நின்ற நகர ஒற்று மகரம் ஆகும்.

**எ.டு:**

ஐந்து + பத்து - ஐம்பஃது

**ஐந்தன் ஒற்றே மகாரமாகும்** **(38)**

எட்டு என்னும் எண்ணின் இடையில் நின்ற டகர ஒற்று, ணகர ஒற்றாய் மாறும்.

**எ-டு**

எட்டு + பத்து =எண்பஃது

**எட்டன் ஒற்றே ணகார மாகும்** **(39)**

ஒன்பது என்னும் நிலை மொழியின் ஒகரத்துடன் தகர ஒற்றுச் சேரும் இடையில் நின்ற னகர ஒற்று ணகர ஒற்றாக மாறி இரட்டும். வருமொழி முதலின் பகரமும் ஆய்தமும் கெட்டு 'ஊ ‘வந்து சேரும். இறுதியில் உள்ள 'து' என்னும் எழுத்தில் உள்ள 'தகர' ஒற்று 'றகர' ஒற்றாக மாறும்.

**எ.டு:**

ஒன்பது + பஃது, தொன்பது +பஃது, தொண்பது + பஃது, தொண்ணூது = தொண்ணூறு

**ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**

**முந்தை ஒற்றே னகாரம் இரட்டும்**

**பஃதென் கிளவி, ஆய்த பகரங்கெட்**

**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**

**ஒற்றிய தகரம் றகர மாகும் (40)**

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்களைத் தொடர்ந்து அளவுப் பெயரும் நிறுத்தற் பெயரும் வரும் போது முன்பு மேற்கூறிய எண்ணுப் பெயர்களுக்குக் கூறிய விதிகள் பொருந்தும். ஆறு என்னும் எண் அல்லாத பிற எண்களின் குற்றியலுகர ஈறுமெய்யோடு கெடும். முதல் இரண்டு எண்களின் ஒற்று ரகரமாகத் திரியும். இரண்டு எனும் எண்ணின் ரகர உயர்மெய் கெடும். மூன்றும் ஆறும் முதல் குறுகும் மூன்றன் ஒற்றுப் பகாரமாகும்.

நான்கன் ஒற்று றகரமாகும். ஐந்தன் ஒற்று மகரமாகும். எட்டன் ஒற்று ணகரமாகும்.

**எ.டு**:

ஒன்று + கலம் = ஒரு கலம்

இரண்டு + கலம்= இருகலம்

ஒன்று + சாடி =ஒரு சாடி

இரண்டு + தூதை= இருதூதை

ஒன்று + நாழி =ஒரு நாழி

ஒன்று + மண்டை= ஒரு மண்டை

ஒன்று + தொடி =ஒரு தொடி

இரண்டு + பலம் = இருபலம்

**அளந்தறி கிளவியும் நிறைஎன் கிளவியும்**

**கிளந்த இயல தோன்றும் காலை** **(41)**

மூன்று எண்ணும் எண்ணின் னகர ஒற்று வருமொழி முதலுக்கு ஏற்பத் திரியும்.

**எ-டு**

மூன்று + கலம்= முக்கலம்

மூன்று + சாடி =முச்சாடி

மூன்று + தொடி =முத்தொடி

மூன்று + பலம் = முப்பலம்

**மூன்றன் ஒற்றே வந்த தொக்கும்** **(42)**

ஐந்து என்னும் எண்ணின் நகர ஒன்று வருமொழி முதலுக்கு இனமான மெல்லினம் ஆகும்.

**எ-டு**

ஐந்து + கலம் =ஐங்கலம்

ஐந்து + சாடி = ஐஞ்சாடி

ஐந்து + கழஞ்சு =ஐங்கழஞ்சு

ஐந்து + பலம் =ஐம்பலம்

**ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும்** **(43)**

முன்பு கூறப்பட்ட மூன்று ஐந்து ஆகியவற்றின் முடிவுகள் வருமொழி முதலில் வல்லினம் வரும் போது பொருந்தும் முடிவுகள் ஆகும்.

**க, ச, த, ப முதன்மொழி வரூஉங்காலை (44)**

எட்டு என்னும் சொல்லை அடுத்து மெல்லினம் இடையினம் உயிர் ஆகியவற்றை முதலாகக் கொண்ட சொற்கள் வரும் போது இயல்பாகப் புணரும்.

எட்டு + கலம் = எண்கலம்

எட்டு + நாழி = எண்நாழி

எட்டு + அகல்= எண்ணகல்

**நமவ என்னும் மூன்றொடு சிவணி**

**அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே (45)**

ஐந்து, மூன்று என்னும் சொற்களை அடுத்து நகரத்தையும் மகரத்தையும் முதலாகக் கொண்ட சொற்கள் வரும் போது அவற்றின் மெய்கள் வரும்.

மூன்று + நாழி =முந்நாழி

ஐந்து + நாழி =ஐந்நாழி

ஐந்து + மண்டை= ஐம்மண்டை

**ஐந்தும் மூன்றும் ந, ம வருங்காலை**

**வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே (46)**

மூன்று என்னும் எண்ணுப் பெயரை அடுத்து வகரம் வந்தால் அதன் மெய்யே வரும்.

**எ.டு:**

மூன்று + வட்டி =முவ்வட்டி

**மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்**

**தோன்றிய வகரத்து உருவாகும்மே** **(47)**

நான்கு என்னும் சொல்லினை அடுத்து வகரம் வந்தால் அதன் இடை நின்ற னகர ஒற்று லகர ஒற்றாக மாறும்.

**எ.டு:**

நான்கு + வட்டி நால்வட்டி

**நான்கன் ஒற்றே லகார மாகும்** **(48)**

ஐந்து என்னும் சொல்லை அடுத்து வகரம் வந்தால் இடையில் நின்ற ஒற்றுக் கெடும்.

**எ.டு:**

ஐந்து + வட்டி ஐவட்டி

ஐவட்டி என வரும். முந்தையதாய்க் கெடுமென்றதனான் சிறுபான்மை கெடாது ஐவ்வட்டி என வருதலுமாம்.

**ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே** **(49)**

ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப் பெயர்களை அடுத்து உயிரெழுத்து வந்தால் நிலைமொழியின் உகரம் கெடும். அவ்வெண்களின் முதல் நீளும் முன்பே குறிப்பிட்டது போல இடைநின்ற மெய்கள் ரகரமாகும். இரண்டு என்னும் சொல்லின் ரகரம் கெடும்.

**எ.டு**:

ஒன்று + அகல்= ஓரகல்

ஒன்று + உழக்கு =ஒருழக்கு

இரண்டு + அகல்= ஈரகல்

இரண்டு + உழக்கு= ஈருழக்கு

**முதலீ ரெண்ணின்முன் உயிர்வரு காலைத்**

**தவலென மொழிப உகரக் கிளவி**

**முதனிலை நீடல் ஆவயி னான** **(50)**

மூன்று, நான்கு, ஐந்து என்னும் சொற்களை அடுத்து உயிரெழுத்தைக் கொண்ட அளவைப் பெயர் வரும் போது வகரம் வந்ததைப் போல் மூன்றன் மெய் வகரமாகவும் நான்கன் மெய் லகரமாகவும் ஐந்தன் ஒற்றுக்கெட்டும் புணரும்.

**எ.டு**:

மூன்று + அகல்= முவ்வகல்

மூன்று + உழக்க =முவ்வழக்கு

நான்கு + அகல்= நாலகள்

ன்கு + உழக்கு= நாலுழக்கு

ஐந்து + அகல்=ஐயகல்

ஐந்து + உழக்கு= ஐயுழக்கு

**மூன்றும் நான்கும் ஐந்துஎன் கிளவியும்**

**தோன்றிய வகரத் தியற்கை யாகும்** **(51)**

மூன்று எண்ணும் சொல்லை அடுத்து உழக்கு வரும் போது மூன்றன் முதல் குறுகாது நீண்டு வருதலும் உண்டு.

**எ.டு:**

மூன்று + உழக்கு = மூவழக்கு

**மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே**

**உழக்குஎன் கிளவி வழக்கத் தான** **(52)**

ஆறு என்னும் சொல்லை அடுத்து உழக்கு என்னும் சொல் வந்தாலும் ஆறன் முதல் குறுகாமலும் நீளும்.

**எ-டு**

ஆறு + உழக்கு =ஆறுழக்கு

ஆறு +அகல்= ஆறகல்

**ஆறெண் கிளவி முதல்நீ டும்மே** **(53)**

ஒன்பது என்னும் சொல்லை அடுத்து வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர் ஆகிய எழுத்துக்கள் வரும் போது இன்சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு:**

ஒன்பது + கலம் =ஒன்பதின் கலம்

ஒன்பது + நாழி = ஒன்பதின் நாழி

ஒன்பது + அகல் = ஒன்பதினகல்

ஒன்பது + உழக்கு = ஒன்பதினுழக்கு

**ஒன்பான் இறுதி உருவுநிலை திரியாது**

**இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே (54)**

## நூறு என்னும் சொல் புணர்தல்

ஒன்று முதல் ஒன்பது ஈறாக உள்ள எண்ணுப் பெயர்களுடன் நூறு என்ற சொல் வரும்போதும் முந்தைய பத்துக்கும் கூறிய விதிப்படி புணரும்.

**எ.டு**:

ஒன்று + நூறு = ஒரு நூறு

இரண்டு + நூறு=இரு நூறு

ஆறு + நூறு =அறு நூறு

எட்டு + நூறு =எண்ணூறு

**நூறு முன்வரினும் கூறிய இயல்பே (55)**

மூன்று என்னும் சொல்லை அடுத்து நூறு வரும் போது னகர ஒற்று, நகர ஒற்றாக மாறும்.

**எ.டு**:

மூன்று + நூறு = முந்நூறு

**மூன்றன் ஒற்றே நகார மாகும் (56)**

நான்கு ஐந்து ஆகிய சொற்களை அடுத்து நூறு வரும் போது அவற்றின் ஒற்று மாறாமல் வரும்.

**எ.டு**:

நான்கு + நூறு = நானூறு

ஐந்து + நூறு = ஐந்நூறு

**நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா (57)**

ஒன்பது என்னும் சொல்லை அடுத்து நூறு வரும் போது ஒகரத்துடன் தகர ஒற்று சேரும். னகர ஒற்று, ளகர ஒற்றாய் இரட்டும். நூறு என்னும் சொல்லின் நகரமெய் கெட்டு அதன் ஊகாரம் ஆகாரமாய் மாறும். அதனை அடுத்து இகாமும் ரகாமும் வரும். ஈறாக நின்ற குற்றியலுகரம் மெய்யுடன் கெட்டு மகர ஈறு தோன்றும்.

**எ.டு**:

ஒன்பது + நூறு, தொன்பது + நூறு, தொன்பது நூறு,

தொள்ளாயிர = தொள்ளாயிரம்

**ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே**
**முந்தை ஒற்றே ளகார மிரட்டும்**
**நூறென் கிளவி நகார மெய் கெட**
**ஊ ஆவாகும் இயற்கைத் தென்ப**
**ஆயிடை வருதல் இகர ரகரம்**
**ஈறுமெய் கெடுத்து மகார மாகும் (58)**

## ஆயிரம் எண்ணும் சொல் புணர்தல்

ஒன்று, இரண்டு என்னும் சொற்களை அடுத்து ஆயிரம் என்னும் சொல் வரும் போது இறுதி உகரம் கெடும்.

**எ.டு**:

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்

இரண்டு + ஆயிரம் = இராயிரம்

இவற்றில் முந்தைய விதிப்படி இடைநின்ற மெய்கள் ரகரம் ஆகின.

**ஆயிரக் கிளவி வரூஉங் காலை**

**முதல் ரெண்ணின் உகரம் கெடுமே (59)**

மேற்கூறிய இரு எண்களின் முதல் எழுத்து நீண்டு வந்தாலும் தவறில்லை.

**எ.டு:**

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்

இரண்டு + ஆயிரம் =ஈராயிரம்

**முதனிலை நீடினும் மான மில்லை (60)**

மூன்று என்னும் என்னை அடுத்து ஆயிரம் வந்தால் னகர ஒற்று வகர ஒற்றாக மாறும்.

**எ.டு:**

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்

**மூன்றன் ஒற்றே வகார மாகும் (61)**

நான்கு என்னும் எண்ணை அடுத்து ஆயிரம் வந்தால் னகர ஒற்று லகர ஒற்றாக மாறும்.

**எ.டு:**

நான்கு + ஆயிரம் = நாலாயிரம்

**நான்கன் ஒற்றே லகாரமாகும் (62)**

ஐந்து என்னும் எண்ணை அடுத்து ஆயிரம் வந்தால் நகர ஒற்று யகர ஒற்றாக மாறும்.

**எ.டு:**

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்

**ஐந்தன் ஒற்றே யகார மாகும் (63)**

ஆறு என்னும் எண்ணை அடுத்து ஆயிரம் வந்தால் ஆறன் ஈற்றில் உள்ள உகரம் மெய் ஒழியக் கெடும்.

**எ.டு:**

ஆறு + ஆயிரம் -ஆறாயிரம்

**ஆறன் மருங்கில் குற்றியலுகரம்**

**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும் (64)**

ஒன்பது என்னும் எண்ணை அடுத்து ஆயிரம் வந்தால் இன்சாரியை பெற்றுப் புணரும்.

**எ.டு:**

ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்

**ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**

**இன்பெறல் வேண்டும் சாரியை மரபே (65)**

## நூறாயிரம் என்னும் சொல் புணர்தல்

நூறாயிரம் என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள சொற்களையடுத்துப் புணரும் போது ஒன்று எண்ணும் எண், நூறு எனும் எண்ணுடன் புணர்ந்த விதிப்படி ஈறுகெட்டு னகரம் ரகரமாய் மாறி உகரம் பெற்றுப் புணரும்.

**எ.டு**:

ஒன்று + நூறாயிரம் =ஒரு நூறாயிரம்

இரண்டு + நூறாயிரம் =இரு நூறாயிரம்

மூன்று + நூறாயிரம் =முந்நூறாயிரம்

நான்கு + நூறாயிரம்= நானூறாயிரம்

ஐந்து + நூறாயிரம் = ஐந்நூறாயிரம்

ஆறு + நூறாயிரம் = அறு நூறாயிரம்

ஏழு + நூறாயிரம் = எழு நூறாயிரம்

எட்டு + நூறாயிரம் = எண்ணூறாயிரம்

ஒன்பது + நூறாயிரம் = தொண்ணூறாயிரம்

**நூறா யிரமுன் வரூஉங் காலை**

**நூறுஎன் இயற்கை முதனிலைக் கிளவி** **(66)**

**நூறுடன் ஒன்று முதல் ஒன்பது**

ஆறு என்னும் எண்ணுப் பெயரை அடுத்து ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்கள் புணரும் போது குற்றியலுகரமும் றகர மெய்யும் நீங்காது றகர ஒற்று மிகும்.

**எ.டு**:

நூறு + ஒன்று = நூற்றொன்று

நூறு + இரண்டு= நூற்றிரண்டு

நூறு + மூன்று = நூற்று மூன்று

நூறு + நான்கு = நூற்றுநான்கு

நூறு + ஐந்து = நூற்றைந்து

நூறு+ஆறு = நூற்றாறு

நூறு + ஏழு = நூற்றேழு

நூறு + எட்டு = நூற்றெட்டு

நூறு + ஒன்பது = நூற்றொன்பது

**நூறுஎன் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு**

**ஈறுசினை ஒழிய இனஒற்று மிகுமே (67)**

நூறு என்னும் சொல்லுடன் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்கள் பத்துடன் சேர்ந்து வரும் போதும் மேற்கூறிய வகையிலேயே புணரும்.

**எ.டு:**

நூறு + ஒருபஃது =நூற்றொருபஃது

நூறு + இருபஃது =நூற்றிருபஃது

நூறு - முப்ஃது =நூற்றுமுப்பஃது

நூறு + நாற்பஃது =நூற்று நாற்பஃது

நூறு + ஐம்பஃது =நூற்றைம்பஃது

நூறு + அறுபஃது =நூற்றறுபஃது

நூறு+எழுபஃது =நூற்றெழுபஃது

நூறு + எண்பஃது =நூற்றெண்பஃது

நூறு + தொண்ணூறு =நூற்றுத்தொண்ணூறு

**அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும் (68)**

## நூறுடன் அளவு, நிறைப்பெயர்கள்

நூறு என்னும் சொல்லை அடுத்து அளவுப்பெயரும் நிறுத்தற்பெயரும் வரும் போது முன்பு கூறியது போன்றே குற்றியலுகரம் கெடாது றகரம் கெடாது; இன ஒற்று மிகும். வல்லினம் வந்தால் வல்லெழுத்து மிகும்.

**எ.டு**:

நூறு + கலம்= நூற்றுக்கலம்

நூறு நாழி =நூற்று நாழி

நூறு + உழக்கு =நூற்று உழக்கு

நூறு + பலம் = நூற்றுப்பலம்

அளவும் நிறையும் ஆயியல் திரியா குற்றியலுகரமும் வல்லெழுத் தியற்கையும் முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

**அடை அடுத்த பத்துடன் ஒன்று** **(69)**

ஒன்று முதல் எட்டு ஈறாக அடையடுத்த பத்துடன் வருமொழியில் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்கள் வந்து புணரும் போது பத்தின் இடையில் நிற்கும் ஆய்தம் கெடும். இன ஒற்றாகத் தகர ஒற்று மிகும்.

**எ.டு**:

ஒருபஃது + ஒன்று =ஒருபத்தொன்று

இருபஃது + இரண்டு= இருபத்திரண்டு

முப்பஃது + மூன்று= முப்பத்து மூன்று

நாற்பஃது + நான்கு =நாற்பத்து நான்கு

ஐம்பஃது + ஐந்து =ஐம்பத்து ஐந்து

அறுபஃது ஆறு =அறுபத்து ஆறு

எழுபஃது + ஏழு =எழுபத்து ஏழு

எண்பஃது + எட்டு =எண்பத்து எட்டு

எண்பஃது + ஒன்பது =எண்பத்து ஒன்பது

**ஒன்று முதலாகிய பத்தூர் கிளவி**

**ஒன்று முதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே**

**நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் (70)**

மேற்கூறிய ஒன்று முதல் எட்டு வரை அடை அடுத்த பத்து என்னும் சொல்லை அடுத்து ஆயிரம் வந்தால் இன்சாரியை வரும். முன்பு கூறியது போல் ஒற்று மிகாது.

**எ-டு**

ஒருபஃது + ஆயிரம் =ஒரு பதினாயிரம்

இருபஃது + ஆயிரம்= இருபதினாயிரம்

என்பதைப் போல முப்பதினாயிரம், நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம், அறுபதினாயிரம், எழுபதினாயிரம். எண்பதினாயிரம் என வரும்.

**ஆயிரம் வரினே இன்அம் சாரியை**

**ஆவயின் ஒற்று இடைமிகுதல் இல்லை (71)**

ஒன்று முதல் எட்டு வரை அடையடுத்த பத்து என்னும் சொல்லை அடுத்து அளவுப் பெயரும் நிறைப்பெயரும் வரும் போது இன்சாரியைப் பெற்றுப் புணரும்.

**எ.டு:**

ஒருப∴து + காலம்= ஒருபதின்கலம்

இருப∴து + சாடி= இருபதின்சாடி

முப்ப∴து + தூதை =முப்பதின் தூதை

நாற்ப∴து + பானை = நாற்பதின் பானை

ஐம்ப∴து + நாழி = ஐம்பதின் நாழி

அறுப∴து + மண்டை =அறுபதின் மண்டை

எழுப∴து + வட்டி =எழுபதின் வடி

எண்ப∴து + அகல் =எண்பதின் அகல்

ஒருப∴து + உழக்கு =ஒருபதின் உழக்கு

ஒருப∴து + கழஞ்சு =ஒருபதின் கழஞ்சு

ஒருப∴து + தொடி =ஒருபதின் தொடி

இருப∴து + பலம்= இருபதின் பலம்

**அளவும் நிறையும் ஆயியல் திரியா (72)**

ஒன்று என்னும் எண்ணை அடுத்த வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றை முதலில் கொண்ட சொற்கள் வந்தால் முன்பு கூறியது போல் ஒரு என்று வரும்.

**எ.டு:**

ஒன்று + கல்= ஒருகல்

ஒன்று + ஞான்= ஒரு ஞான்

ஒன்று + யாழ் =ஒரு யாழ்

**முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**

**ஞநமத் தோன்றினும் யவ வந்தியையினும்**

**முதனிலை இயற்கை என்மனார் புலவர் (73)**

## ஒரு ஓர் ஆதல்

ஒன்று என்னும் சொல்லை அடுத்து உயிரெழுத்தும் 'யா' என்னும் எழுத்தும் வந்தால் முதலில் உள்ள ஒகரம். ஓவாகும். ரகத்தின் மேல் ஏறிய உகரம் கெட்டு ஓர் என்றுஆகும்.

**எ.டு**:

ஒன்று + அடை -ஒரு +அடை= ஓரடை

ஒன்று + அடை - ஒரு ஆடை= ஓராடை

ஒன்று + இலை - ஒரு + இலை= ஒரிலை

ஒன்று + ஈட்டி -ஒரு + ஈட்டி = ஓரீட்டி

ஒன்று + உரல் - ஒரு + உரல் =ஓருரல்

ஒன்று + ஊசி - ஒரு + ஊசி =ஓரூசி

ஒன்று + எலி - ஒரு + எலி= ஓரெலி

ஒன்று + ஏணி - ஒரு + ஏணி =ஓரேணி

ஒன்று + ஐந்து - ஒரு + ஐந்து = ஓரைந்து

ஒன்று + ஒட்டகம் ஒரு + ஒட்டகம்= ஓரொட்டகம்

ஒன்று + ஓடு - ஒரு + ஓடு =ஓரோடு

ஒன்று + ஔவை - ஒரு + ஔவை = ஓரௌவை

ஒன்று + யாழ் - ஒரு + யாழ் =ஓர்யாழ்

**அதனிலை உயிர்க்கும் யாவரு காலையும்**

**முதனிலை ஒகரம் ஒவா கும்மே**

**ரகரத் துகரம் துவரக் கெடுமே** **(74)**

## மா என்னும் நீட்டலளவைப் பெயர்

**இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்**

**வழங்கியதல் மாஎன் கிளவி தோன்றின்**

**மகர அளவொடு, நிகரலும் உரித்தே** **(75)**

இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எண்களை அடுத்து மா என்னும் நீட்டலளவைப் பெயர் வந்தால் மண்டை என்னும் அளவுப் பெயர் போலப் புணரும்.

### எ.டு:

இரண்டு + மா =இருமா, இரண்டு மா

மூன்று + மா = மும்மா, மூன்றுமா

நான்கு + மா=நான்மா, நான்குமா

ஐந்து + மா =ஐம்மா, ஐந்துமா

ஆறு + மா =ஆறுமா, ஆறுமா

ஏழு + மா =ஏழு மா, ஏழுமா

எட்டு + மா = எண்மா, எட்டுமா

ஒன்பது + மா = ஒண்பது மா

**லனஎன வரூஉம் புள்ளி இறுதிமுன்**

**உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்**

**அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்**

**செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்**

**வேற்றுமை குறித்த பொருள் வயினான** **(76)**

லகரமும் னகரமும் என்னும் புள்ளி யீற்றுப் பெயர்களின் முன், உம் என்னும் இடைச் சொல்லும், கெழு என்னும் உரிசொல்லும் உப்பட அவைபோல்வன பிறவும், செய்யுளாகிய தொடரின்கண் அவை வருதற்கொத்த மரபினையுடைய புணர்மொழிகளின் இடையே தோன்றி, வேற்றுமை குறித்த பொருட்புணர்ச்சியினிடத்து அப்பொருண்மை பெறுமாறு நிலைபெறும்.

**எ.டு:**

"வானவரிவில்லும், திங்களும் போலும்" எனவும் “கல்கெழு கானவர் நல்குறு மகளே” (குறுந் -71) எனவும “பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே" (பொருள் 5) எனவும் "மாநிதிக் கிழவனும போன்ம்" (அகம் -66) எனவும் "கான்கெழு நாடன்" எனவும் வரும்.

**உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்**

**குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி**

**நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்**

**உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்**

**ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்**

**செய்யும் செய்த என்னும் கிளவியின்**

**மெய்ஒருங் கியலும் தொழில்தொகு மொழியும்**

**தம்மியல் கிளப்பின் தம்முன் தாம் வரூஉம்**

**எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்**

**அன்னவை எல்லாம் மருவின் பாத்திய**

**புணரியல் நிலையிடை உணரத் தோன்றா (77)**

சொல்லுங்காலை, உயிர் எழுத்து இறுதியாயும் புள்ளி எழுத்து இறுதியாயும் குறிப்பின்கண்ணும் பண்பின் கண்ணும் இசையின் கண்ணும் தோன்றிப் பெயரினும வினையினும் நிலைதடுமாறியும், ஒருசொல் பலபொருட்கும் பலசொல் ஒரு பொருட்கும் உரிமை தோன்றியும் இங்ஙனம் ஒரு நெறிப்படவாராத நிரம்பாஉரிச் சொல்லாகிய குறைச்சொற்களும், உயர் திணை, அஃறிணை, ஆகிய அவ்விரண்டன் மருங்காகி ஐம்பா லினையும் அறியவரும்பண்புத்தொகைக் சொற்களும், செய்யும் செய்த என உம்மீறும் அகரஈறுமாய் முறையே நிகழ்வும் எதிர்வும் இறப்புமாகிய காலப்பொருளைத்தரும் இறுதிகள் ஒருங்கேதொக்கு வரும் வினைத்தொகைச் சொற்களும், தமக்குமுன் தாமே வந்து பொருள் வேறுபட ஒன்றி நிற்கும் எண்ணும் பெயர் தொக்க தொகைச் சொற்களும், ஆகிய இவற்றின் இயல்புகளை விளக்கப்புகின் அவையெல்லாம் புணரியல் நிலைமைக்கண் நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியமாக முழுமை பெற்று விளங்கத்தோன்றாமையான் அவையெல்லாம் ஒருசொல் நீர்மையுடையனவாக மருவிவந்து வழக்கினையுடைய பகுதியின வாகும்.

கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்

வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்

விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர் (78)

இவ்வதிகாரத்துக் கிளந்து ஒத்தப்பட்டவையல்லாதனவாய்ச் செய்யுளின்கண் திரிந்து முடிவனவும், இருவகை வழக்கின் கண்ணும் வழங்குமிடத்தான் மருவித்திரிவனவும், இவ்வதிகாரத்துக் கூறிய இலக்கண மரபினின்று வேறுபடக்காணின் அவற்றை நல்லளவையாகிய ஆராய்ச்சியான் வழக்கு நடக்குமிடத்தை உணர்ந்து, கூறப்பெற்ற இலக்கண நெறியொடு பொருந்த நடத்துக என்று கூறுவர் புலவர். மதி அளவு, ஒழுக்கல் என்றது கற்பிக்கும் ஆசிரியரை நோக்கிக் கூறியதாம்.

## தொகுப்புரை:

குற்றியலுகரப் பொதுப்புணர்ச்சி, இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்தொடர், மென்தொடர், நெடில்தொடர் புணர்ச்சிநிலை, மரப்பெயர் புணர்ச்சி எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி, குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி, வினாப்பெயரும் சுட்டுப்பெயரும் புணர்தல், திசைப்பெயர் புணர்ச்சி குற்றுகர எண்ணுப்புணர்ச்சி நிலை, பந்தின் முன் இரண்டும், ஆயிரமும், எண்ணுப்பெயரோடு பத்து இடம்பெறும் நிலை, ஒன்பது தொண்ணூறு ஆதல், எண்ணுப்பெயர்கள் முன்னர் அளவு, நிறைப்பெயர்கள், ஒன்பது முன் நூறு தொள்ளாயிரமாதல், எழுத்ததிகாரத்தில் புணர்க்கப்படாத சொற்கள் போன்றவை விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

**குற்றியலுகரப் புணர்ச்சி முற்றியது**

## அருஞ்சொற்பொருள் விளக்கம்

1. நாழி – அளவைப் பெயர்
2. ஒழிய – தவிர
3. சினை - எழுத்து
4. மா – நீட்டல் அளவைப் பெயர்
5. நிகர் - ஒத்தது
6. திரியா – மாறாது

## பயிற்சி வினாக்கள்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஈர்க்கு, பீர்க்கு என்பன எவ்வகை குற்றியலுகரம்?

அ) வன்தொடர் ஆ) மென்தொடர்

இ)இடைத்தொடர் ஈ) ஆய்தத்தொடர்

2. ல,ன புள்ளிமுன்னர்த் த,ந வரின் திரிவது

அ) ப,ம ஆ) ற,ன இ) ர,ன ஈ) ம,ப

3. அ + யாழ்

அ) அவ்யாழ் ஆ) அயாழ் இ) அவ்வியாழ் ஈ) அய்யாழ்

4. வண்டு பெண்டு என்பன பெறும் சாரியை

அ) அக்கு ஆ) அம் இ) இன் ஈ) அத்து

5. ‘கசதப’ மொழிமேல் தோன்றும் மெல்லின ஒற்றுகள்

அ) ஙஞநம ஆ) ஙஞணம இ) நமணன ஈ) ஙமணன

6. வயிறு +பசி எவ்வாறு புணரும்?

அ) வயிற்றுப்பசி ஆ) வயிறுபசி இ) வயற்றுபசி ஈ) வயற்பசி

## குறு வினாக்கள்

1. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
2. ஈரொற்று வரும் குற்றியலுகரங்கள் யாவை?
3. குற்றியலுகரத்தை விளக்குக.
4. மரப்பெயர்க் குற்றியலுகரங்கள் எவ்வாறு புணரும்?
5. அக்குச் சாரியை பெறும் மென்தொடர் குற்றியலுகரத்திற்கு எடு தருக.
6. குற்றியலுகரப் பொதுப் புணர்ச்சியை விளக்குக.
7. குற்றியலுகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சியை விளக்குக.

## கட்டுரை வினாக்கள்

8. குற்றியலுகர ஈற்று அல்வழிப் புணர்ச்சியை விளக்குக.
9. திசைப் பெயர்ப் புணர்ச்சியை விவரிக்க.
10. பத்துடன் எட்டு வரை உள்ள எண்கள் எவ்வாறு புணரும்?
11. ஒன்று என்னும் பெயருடன் ஆயிரம் எவ்வாறு புணரும்.
12. பத்தின் முன் எண்ணுப் பெயர்களும் எண்ணுப்பெயர்களும் முன் பத்தும் எவ்வாறு புணரும்? விவரி.

13. நூறு, ஆயிரம். நூறாயிரம் என்னும் எண்ணுப் பெயர்கள் எவ்வாறு புணரும்? கட்டுரைக்க.

14. எண்ணுப் பெயர்களுடன் அளவைப் பெயர்கள் எவ்வாறு புணரும்? கட்டுரை எழுதுக.

**பாடநூல்**

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாவலரேறு பாலசுந்தரனார் உரை - பெரியார் பல்கலைக்கழகம் வெளியிடு - சேலம் - 11, 2012

**Web Sources**

1. TamilHeritageFoundationwww.tamilheritage.org<http://www.tamilheritage.org

2. Tamilvirtual Universitylibrary-www.tamilvu.org/libraryhttp://www.virtualvu.org/

# அலகு - 5

## தொல்காப்பிய - நன்னூல் ஒப்பியல்

### (தொல்-தொல்காப்பியம், தொல்காப்பியர்

### நன் -நன்னூல், நன்னூலார்.)

### எழுத்ததிகாரம்

## நோக்கம்

- நன்னூலோடு தொல்காப்பியத்தை ஒப்பீட்டு மொழி வளர்ச்சிப் போக்குகளையும் இலக்கண வேறுபாட்டு நிலைகளையும் விளக்குதல்.

1. **இயல்கள் :** தொல். நூல் மரபு (35), மொழி மரபு (49), பிறப்பியல் (21), புணரியல் (40), தொகை மரபு (30), உருபியல் (30), உயர்மயங்கியல் (93) புள்ளி மயங்கியல் (110), குற்றியலுகரப் புணரியல் (77) என இயல்களையும் 483 நூற்பாக்களையும் எழுத்திகாரத்தில் உடையது. நன்னூல். எழுத்தியல் (72), பதவியல் (23). உயிரிற்றுப் புணரியல் (53), மெய்யீற்றுப் புணரியல் (36), உருபு புணரியல் (16) என 5 இயல்களில் 203 நூற்பாக்களில், தொல்காப்பியம் 483 நூற்பாக்களில் கூறிய செய்திகளை அடக்கி விடுகிறது. நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல் செய்திகளை எழுத்தியலிலும்,புணரியல், தொகை மரபு, உயிர் மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் செய்திகளை உயிரிற்றுப் புணரியலும், புள்ளி மயங்கியல் செய்திகளை மெய்யீற்றுப் புணரியலிலும், உருபியல் செய்திகளை, உருபு புணரியலிலும் அடக்கி விடுகிறது.

2. **பாகுபாடு :** எண், பெயர். முறை,பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், இடை நிலை,ஈற்று நிலை பதம், புணர்வு, போலி எனப் பன்னிரு பிரிவுகளாக நன் எழுத்தைப் பிரித்திருக்கிறது) இந்தகு பிரிவு தொல் மூலத்தில் இல்லை.

3. **முதல் எழுத்து** : உயிர் 12, மெய் 18 இவை முதல் எழுத்து என்பது நன்னூல், இவற்றைப் பேசினும் இவை முதல் எழுத்து என்ற குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை.

4. **சார்பெழுத்து:** குற்றியலிகரம், குற்றியலுகரம்,ஆய்தம் என்பன 'சார்ந்து வரல் மரபின் மூன்று" என்பர் தொல்.இவற்றைச் சார்பெழுத்து என்ற குறியீட்டால் குறிப்பிடார். நன் உயிர் மெய், ஆய்தம், உயிரளபு. ஒற்றளபு, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்ற பத்தையும், சார்பெழுத்து என்பர். அவற்றை விரித்து சார்பெழுத்துகள் 369 என்பர். இச் செய்தியும் தொல். இல் இல்லை.

5. **ஆய்தம்:** மெய்யெழுத்து என்பர.; மெய்களை வல்லெழுத்து,மெல்லெழுத்து, இடையெழுத்து என்பர் தொல். நன்னூல் வல்லினம், மெல்லினம், இடையினம் என்பர். பின்னது வட எழுத்தைத் தழுவிய விளக்கம்.

6. **உயிர்மெய்:** (18×12)=216 என்பர் நன் இக்கணக்கு தொல்காப்பியத்தில் இல்லை.

7. **ஆய்தம்:** இருவரும் சார்ந்துவரும். ஆய்த இயல்பினைக் குறிப்பர். நன் ஆய்தக் குறுக்கத்தை வெளிப்படையாகக் குறிப்பர். தொல் 'ஆய்தம் அஃகாக் காலை யான' என்பதன் மூலம் குறிப்பர். தொல் பிறப்பிடம் கூறும். நன் 'ஆய்தக் கிடம் தலை' என்பர். ஆய்தத்தை விரித்து 8 என்பர் நன்.

8. **உயிரளபெடை:** மொழி முதல், இடை, கடையில் அளபெடுக்கும் என்ற குறிப்பு தொல். இல் இல்லை. நன் இல் உண்டு. நன் இல் உள்ள உயிரளபு 21 என்ற விரி, தொல் இல் இல்லை.

9. **ஒற்றளபெடை:** எந்த எந்த ஒற்றுகள் எங்கெங்கே அளபெடுக்கும்: அவ்வாறு அளபெடுப்பவை 42 என்பன நன் செய்திகள், இவ் விரிவு தொல்.இல் இல்லை. தொல். செய்யுளியலில் தான் (17) 'ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப' என்பர்.

10 . **குற்றியலிகரம்:** குற்றிய இகரம் தோன்றும் என்பர.; தொல் குற்றியலுகரம் திரிந்து இகரம் ஆகும் என்பர.; நன்னூலில் குற்றிய இகரம் 37 என்பர்.

11. **குற்றியலுகரம்:** குற்றிய உகரம் ஆறு தொடர் என்பர் இருவரும்.நன்னூல் மட்டும் 36 என்று கணக்கிடுவர். தொல் தனியியலிலே அமையும். நன்னூல் உயிரீற்றுப் புணரியலில் அடக்குவர்.

12 **ஐகாரக் குறுக்கம்:** மொழி மூவிடத்திலும் ஐ குறுகும் என்ற சிறப்புக்குறிப்பு நன்இல் மட்டுமே உண்டு. ஐ, கு ஒரு மாத்திரை அளவினது என்பர்.

13 **ஔகாரக் குறுக்கம்:** தொல் இல் வெளிப்படையான குறிப்பில்லை. நன் இல் மட்டும் உண்டு.

15. **சுட்டெழுத்து:** 'தனி வரின் சுட்டே” என்று விரித்து கூறியது நன்னூல்.

16. **வினா எழுத்து:** அ, இ, உ மூன்றும் வினா என்றார் தொல்காப்பியர்.

**குறிப்பு முகம்:** க, ஓ, யா என்பவற்றையும் வினா எழுத்தாகத் கொண்டார் தொல், ஐந்தையும் சேர்த்து உரைப்பதுடன் எ,யா முதல் ஆ,ஓ-ஈறு: ஏ-இருவழி என்பர் நன்னூல்.

17. **முறை:** நன்னூலில் மட்டுமே இவ் விரிவுகள் உள்ளன.

18. **பிறப்பு:** மூல ஒலி அணுத்திரள் என்ற குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. தலை, மிடறு, நெஞ்சு என்ற இடத்தையும், பல், இதழ் நா, மூக்கு, அண்ணம் என்ற முயற்சி உறுப்புகளையும் தொல்காப்பியம் குறிக்கும். உரம், கண்டம், உச்சி என்ற இடங்களையும், மூக்கு, இதழ், பல், அண்ணம் என்ற உறுப்புகளையும் நன்னூல் குறிக்கும். நன்னூலில் சமஸ்கிருதப் பெயர்களைக் காண்க.

வல்லினம் உகரம் பெறல், ஆய்தத்திற்கு இடம் தலை. மேலிதழில் கீழ் இதழ் பொருந்தப் ப,ம பிறத்தல், மேற் பல் கீழ் இதழ் பிறத்தல், எடுத்தல்,படுத்தல், நலிதல் என்பன தொல்காப்பியம் கூறுபவை.நன்னூல் கூறுபவை.

19 **வடிவு:** எ, ஒ மெய் என்பன புள்ளி பெறும் என்பது மெய், மகரக்குறுக்கம், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், உயிர் மெய் ஆகியவற்றிற்கு வடிவை ஓரளவு உணர்த்துவது தொல்காப்பியம்.

20. **மாத்திரை:** (இமைத்தலையும், நொடித்தலையும் இயல்பெழு மாந்தர்க்கு உரிமையாக்கும் நன்னூல். ஏழு நூற்பாக்களில் தொல்காப்பியம் விரிப்பனவற்றை நன்னூல் ஒரே நூற்பாவில் சுருங்கக்கூறும். ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை, ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கம் அகியவற்றிற்குத் தொல்காப்பியம் மாத்திரை கூறவில்லை.நன்னூல் கூறும். இதை விளி பண்டமாற்றில் மாத்திரை அளவு விஞ்சுவதை நன்னூல் மட்டும் காட்டும்.

21. **மொழி முதல் எழுத்துக்கள்** : 'ஙி' கரத்தை மொழி முதல் கூறும் நன்னூல். யா என்றஒன்றை மட்டும் தொல் கூற. ய, யு, யூ, யோ, யௌ என்பவற்றையும்,ஞ ஞா,ஞெ என்ற ஒன்றை மட்டும் தொல்காப்பியம் கூற, நன்னூல்,'ஞ' வையும் சேர்க்கும. நுந்தை என்பதை மொழி முதற் குற்றகரம் என்று தொல்காப்பியம் மற்றும் நன்னூல் கூறுகிறது.

22. **மொழிஈற்று எழுத்துக்கள்:** உசு, முசு, தபு, பொருந், வெரிந், அவ், இவ், உவ், தெவ் என்பனவற்றைத் தொல்காப்பியம் கூறும். நன்னூல் கூறவில்லை.

23. **மொழி இடை நிலை எழுத்துகள்:** வேற்றுநிலை உடனிலை என நன்னூல் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும.; தொல்காப்பியம் பல

நூற்பாக்களில் விரிக்கும். க ச த ப நீங்க எஞ்சிய 14 வேற்றுநிலை மெய்மயக்கம், ர ழ நீங்க எஞ்சிய 16 உடனிலை மெய்ம்மயக்கம் எனவாகும்.

24. **போலி:** சஞய மெய்களின் முன் வரும் அ ஐ முதலிலும், இடையிலும் போலியாக வரும். ஐகாரத்தின் பின் வரும் ய வ என்ற மெய்கள் ஞகரத்துடன் உரழும், இவை நன்னூல் இல் மட்டுமே உள்ளன, நாய் என்ற மொழியீற்றுப் போலிதொல்காப்பியத்தில் மட்டுமே உண்டு.

25. **எழுத்துச் சாரியைகள்:** தொல்காப்பியம்ஐந்து நூற்பாக்களில் இடம்பெறும் கரம், காரம், கான், அ என்பவற்றை நன்னூல் ஒரே நூற்பாவில் கூறும்.

**பதச் சாரியைகள்:** சொற்கள் புணருமிடத்து வருவதைத்தொல்காப்பியம் இங், வற்று, அத்து, அம், என்,ஆன், அக்கு, இக்கு,அன் எனக் கூறும், நன்னூல் அன்,ஆன், இன், அல,; அற்று, இற்று, அத்து, தம், நம,; நும், ஏ, அ, உ, ஐ, கு, ன என்பவற்றைத் கூறும். தொல்காப்பியம் கூறிய வற்று, அற்று, அக்கு, அ, இங்கு, கு, என்று நன்னூலில் ஆகிவிட்டன.

26. **புணரியல் கலைச் சொற்கள்:** புணர்ச்சியால் நேரும் விகாரங்களை மெய் பிறிதாதல், மிகுதல்,ஒன்றல் என்கிறதுதொல்காப்பியம்.திரிதல், தோன்றல். கெடுதல் என்று கூறுகிறது.தொல்காப்பியம் நிறுத்தச்சொல் குறித்துவரும் கிளவி என்று குறிப்படுகிறது. அதனையே நன்னூல் நிலைமொழி, வருமொழி எனக் குறிபிடும்.

27. **உடம்படு மெய்:** நிலைமொழி ஈற்றுயிரும், வருமொழி முதல் உயிரும் புணரு மிடத்து, அவற்றை உடம்படுத்த யகர வகர மெய் தோன்றும் என்பர் தொல்காப்பியர். நன்னூலோ இஈஐ என்பன நிலை மொழி உயிராக இசந்து,வருமொழி உயிருடன் புணரும்போது றகரம் தோன்றும்; பிற அ முதலான ஒன்பது மெய்கள் நிற்பின் வகர உடம் படு மெய் தோன்றும். ஏ நிலைமொழி ஈருயின் ய, வ இரண்டும் தோன்றும் என்று விரிப்பார் நன்னூலார்.

28. **அகரஈறு :** வருமொழி முதல் அகரமாக இருக்குமானால் நிலைமொழி 'அ' கரங்கெடும். அவ்+இடைஸ்ரீஆயிடை, அம்ம, அம்மா, மா,மாவின், அகர ஈற்று மொழிமுன் அத்துச் சாரியையில் உள்ள அகரங் கெடும். இவை தொல்காப்பியம் கூறுவன. எஞ்சியவை இருவர்க்கும் பொது.

29. **ஆகார ஈறு:** ஆ முன் வரும் இன் சாரியையின் னகர ஒற்றும் கெடுதல், வா என்ற நிறைப் பெயர் புணர்தல், உவா அப்பதினான்கு, இரு ,இரவு ஆதல், ஆ என்பது ஆன. ஆன் என்றாதல்,மா, (மரம்) ஆ என்பனவும், யா, பிடா, தனா என்ற மரப் பெயர்களும் மெல்லொற்றும் வல்லொற்றும் மிக்கு முடிதல். இவை தொல்காப்பியத்தில் விதந்து கூறுவன. நன்னூல் விதந்து கூறாதன. எஞ்சிய பொது.

30. **இகர ஈறு:** ஆடி+இக்கு என்பதில் வருமொழி இகரக்தோடு, எட்டி, ஆடி, பரணி, வளி, பனி, தூணி, இனி,அணி என்ற இகர ஈற்றுச் சொற்கள் விதந்து சொல்லப்பட்டுப் புணர்ச்சி உணர்தல்,இ,ஈவயினான என்றாதல் இவை தொல்காப்பியம் மட்டுமே கூறுகின்றன. நன்னூல் கூறாதன. எஞ்சியவை பொது.

31. **ஈகார ஈறு:** நீ என்பது நின் ஆதல் தவிர எஞ்சிய எல்லாம் பொது.

32. **முற்றுகர ஈறு:** அது, அதை என்றாதல், எரு, செரு என்பன அம்முச் சாரியை பெறல், பழு என்பது பழூஉ என்றாதல் ஒடு என்ற மரப் பெயர் மெல்லொற்றுப் பெறல் என்பன தொல்காப்பியத்தில் மட்டுமே உள்ளவை. எஞ்சிய பொது.

33. **குற்றுகர ஈறு:** குற்றியலுகரப் புணரியல் எனத் தனியியல் படைத்தல்தொல்காப்பிய முன்ற, உயிரீற்றுப் புணரியலிலேயே முற்றுகரத்தை அடுத்து உணர்த்தல் நன்னூல் முறை. தொல்காப்பியம் 77 நூற்பாக்களில் கூறியவற்றை,நன்னூல்18 நூற்பாக்களில் அடக்கும். குற்றியலுகரம் நிற்க, உயிர் புணரும் என்பது தொல்காப்பியக் கருத்து, உயிரிவரின் குற்றியலுகரம் கெடும் என்பதுநன்னூல் கருத்து.

நெடிற்றொடர்க் குற்றுகரம் அம் சாரியை பெறல், உயிர் முதல் மொழி அல்லாதன வருமிடத்து அஃது அது என்றாதல், வண்டு, பெண்டு என்பன இன் சாரியை பெறல். ஆங்கு, யாங்கு என்பன வல்லொற்றுப் பெறல், உண்டு என்பது உள் பொருள் என்றாதல், குன்று என்பது அக்குச் சாரியை பெறல், தேக்கு என்பது அம்முச் சாரியை பெறல், குற்றியலுகர ஈற்று அளவுப் பெயர்களும், நிரைப் பெயர்களும் புணரும் முறை, தொண்ணூறு, தொள்ளாயிரம் இவை தொல்காப்பியத்தில் உள்ளன. நன்னூல் தொல்காப்பிய முறையான தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றிக்கு விதி கூறவில்லை. (பண்டு) பண்டைக்காலம், (தெங்கு) தேங்காய் என்பனவற்றிற்கு நன்னூல் புதிதாக விதி அமைக்கும்.

34. **ஊகார ஈறு:** உடு, ஊடுஉ, தூ , தூஉ, ஊ , ஊண் , ஊனக(கு). ஆடுக, மகடூஉ என்பன தொல்காப்பியம் மட்டும் கூறுவன. எஞ்சிய பொது.

35. **ளகரஈறு:** பெயர்க்கீறாகாது. முன்னிலை மொழியில் வரும். தேற்ற எகரத்தின் பின் வல்லெழுத்து மிகாது.இவை தொல்காப்பியம் மட்டும் கூறுபவை.

36. **ஏகார ஈறு:** வல்லொற்றுப் பெறல். ஏகர ஈறாதல் சே மரமாயின மெல்லொற்றும் பசுவாயின் இன் சாரியையும் பெறல் தொல்காப்பியத்தில் மட்டும் காணப்படுவன .

37. **ஐகார ஈறு:** எவாஈற்றுச் சுட்டுமொழியும் வினாமொழியும் (அவை, யாவை புணருமுறை, விசை, ஞெமை, நமை, பனை, அரை, ஆவிரை என்ற மரப் பெயர்கள் புணரும் முறை, சித்திரை, கேட்டை, மழை, வேட்கை, ஆண்டை என்பன புணரும் முறை ஆகியவ தொல்காப்பியத்தில் விதிக்கப்படுவன. நன்னூல் விதிக்காதவை.எஞ்சிய பொது

38. **ஒகர ஈறு:** ஒகரம் பெயர்க்கு ஈறாகாது; முன்னிலை மொழியாய் வரும்.

சிறப்பு ஒகரத்தின் பின் வல்லெழுத்து மிகாது.இவை தொல்காப்பியத்தில் மட்டுமே கூறுவன.

39. **ஓகர ஈறு:** ஓகார ஈற்றுச் சொல். 'ஒன்' சாரியை பெறல்,‘ஓகாரம்’ பெறல்;, கோ என்பது இல் முன் புணர்தல், ஆகியன தொல்காப்பியம் கூறுவன, நன்னூல் கூறாதன.

40. **ஔகார ஈறு:** ஔகார ஈறு வேற்றுமையிலும், அல் வழியிலும் புணரும். புணரும் போது வல்லெழுத்து மிகும். அவ்விடை உகரம் வரும். இவை தொல்காப்பியத்தில் கூறுவன. நன்னூலில் கூறாதன.

41. **ஞகர ஈறு:** உரிஞ் என்பது உரி என்றாகும். இது இருவர்க்கும் பொது இன் சாரியை பெறும் என்பர் தொல்காப்பியர்.

42. **ணகர ஈறு:** ஆண், பெண் என்ற பால் பெயர்கள்கள் ஆண் என்ற மரப் பெயர், நீராட்டுதல் என்ற பொருளுடை என்ற மண் சொல், முரண் என்ற சொல் தொல்காப்பியத்தில் விதிக்கப்பட்டவை. நன்னூலில் விதக்கப்படாதவை. எஞ்சிய பொது.

43. **நகராஈறு:** வெரிந் என்பது வெரிக்குறை என்றும்,வெரிந் குறை என்றும் புணரும், தொலகாப்பியத்தில்; கூறியது. இது இன் சாரியை பெறும் என்பர் தொல்காப்பியர்.நன்னூல் கூறாதது.

44. **மகர ஈறு** : தொல்காப்பியத்தில் 21 நூற்பாக்களில் கூறுபவற்றை நன்னூல் ஐந்தே நூற்பாக்களில் கூறும். கலம், காம், நாம், யாம்,எல்லாம், மரம். மராஅடி, இல்லம் என்ற மாப்பெயர். இலம் முன் படு ஆயின. நும் , நீயிர் மகம் என்ற சொற்கள் தொல்காப்பியத்தில் விதந்து கூறப்பட்டன. நன்னூலில் கூறப்படவில்லை. எஞ்சிய பொது.

45. **யகராஈறு:** தாய் என்பது இயல்பாகப் புணரும் தாயுடன் சண்டை இட்ட செயல் குறித்துத் தாய் என்பது வருமானால் 'மான் தாய்க் கலகம்' என

வல்லாற்றுப் பெறும், இவை தொல்காப்பியத்தில் விதந்து கூறியவை. எஞ்சிய பொது.

46. **ரகர மெய்யீறு:** ஆர், வெதிர், சார், பீச் என்ற மரப்பெயர்கள் மெல்லெழுத்துப் பெரும். சார்+காழ் எனப் புணரும் போது வல்லெழுத்து மிகும். பீர் என்ற கொடிப் பெயர.; அம்முச் சாரியைப் பெறும். இவை தொல்காப்பியத்தில் விதந்து மட்டும் கூறுபவை.

47. **லகர ஈறு:** வல் (சூதாடு காய்) என்பது உகரச் சாரியை பெறும், வல் முன் நாய், பலகை என்பன் வரும்போது உகரச் சாரியை கெட்டு, அகரம் பெறும். பூல், வேல், ஆல் என்ற மரப்பெயர்கள் அம்முச் சாரியை பெறும். வெயில் என்பது அத்து, இன் என்ற சாரியைகளைப் பெறும். இவை தொல்காப்பியத்தில் மட்டுமே இடம் பெற்றவை.

48. **வகர ஈறு :** இருவர் கூறியளவும் பொது.

49 **ழகர ஈறு:** குமிழ், பாழ், ஏழ்என்பனவற்றின் புணர்தல் தொல்காப்பியத்தில் விதந்து கூறப்பட்டன. நன்னூலில் இது கூறப்படவில்லை.ழகரம் என்பதைத் தொல்காப்பியம் ழகர மெய்யீராகக் கொள்ள, நன்னூல் முற்றாக ஈறாகக் கொண்டது (ஏழு). எஞ்சியது பொது.

50. **ளகர ஈறு:** இருள் என்ற சொல் இன், அத்துச் சாரியை பெறும். புள், வள் என்பன உகரச் சாரியை பெறும். மக்கள் என்பதன் ஈற்றிலுள்ள ளகரம், டகரம் ஆகும். இவற்றைத் தொல்காப்பியம் மட்டுமே விதந்து கூறியுள்ளது. நன்னூல் கூறவில்லை. எஞ்சிய பொது.

51. **னகர ஈறு:** தான், யான், அழன்,புழன், மன், சின்,ஆன்;,ஈன்,முன், வயின்,குயின், சாத்தன் + தந்தை, ஆதன், பூதல் + தந்தை, தான்,பேன்,கோன்;, பொன் என்பன தொல் விதப்பவை. இவற்றை நன்னூல் விதந்து கூறவில்லை. எஞ்சிய பொது.

## தொகுப்புரை:

நன்னூல் 203 நூற்பாக்களில், தொல்காப்பியம் 483 நூற்பாக்களில் கூறிய செய்திகளை அடக்கி விடுகிறது. உசு, முசு, தபு, பொருந், வெரிந், அவ், இவ், உவ், தெவ் என்பனவற்றைத் தொல்காப்பியம் கூறும். நன்னூல் கூறவில்லை. மகர ஈறு, யகரஈறு, ரகர மெய்யீறு, னகர ஈறு, ளகர ஈறு இவை தொல்காப்பியத்தில் விதந்து கூறியவை. நன்னூல் கூறவில்லை போன்றவையை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**தொல்காப்பிய - நன்னூல் ஒப்பியல் முற்றியது**

**அருஞ்சொற்பொருள் விளக்கம்:**

1. வழூ - குற்றம்
2. வல் - சூதாடு காய்
3. மகடூஉ – பெண்
4. விரைவு – மிகுதி
5. பண்டு – பண்டைய
6. தெங்கு – தேங்காய்

**பயிற்சி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ‘சார்ந்துவரல் மரபின் மூன்று – என்று சார்பெழுத்து பற்றிய நூற்பா இடம்பெறும் நூல்

அ) நன்னூல் ஆ) நேமிநாதம் இ) தொல்காப்பியம் ஈ) வீரசோழியம்

2. மொழி மூவிடத்திலும் ‘ஐ’ குறுகும் என்ற சிறப்புவிதியைக் கூறுபவர்

அ) நன்னூலார் ஆ) தொல்காப்பியர்

இ) ஐயனாரிதனார் ஈ) தண்டியாசிரியர்

3. நன்னூல் எழுத்தை எத்தனை பிரிவுகளாகப் பிரித்திருக்கிறது?

அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 12

4. மக்களைச் சுட்டுவது உயர்திணை மற்றவற்றைச் சுட்டுவது அஃறிணை என்று கூறியவர்

அ) நன்னூலார் ஆ) ஐயனாரிதனார்

இ) தொல்காப்பியர் ஈ) தண்டியாசிரியர்

5. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தருமாயின் அது

அ) பதம் ஆ) பகுபதம் இ) பகாப்பதம் ஈ) எதுவுமில்லை

6. ‘கண் நல்லள்’ என வருவது

அ) பால்வழு ஆ) திணைவழு இ) காலவழு ஈ) இடவழு

**குறு வினாக்கள்**

1. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் யாவை?

2. மொழி முதல், இடை,ஈற்று எழுத்துக்கள் பற்றி நன்னூலார், தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை விளக்குக.
3. தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிடும் முற்றுகர ஈறு, குற்றுகர ஈறு விளக்குக.

## கட்டுரை வினாக்கள்

1. எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர், நன்னூலார் இருவரும் ஒன்றுபடும், வேறுபடும் இடங்களை ஆராய்க.
2. தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிடும் சார்பெழுத்துக்களை ஆராய்க.
3. சாரியை பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
4. தொல்காப்பியர், நன்னூலார் ஒன்றுபடும் வேறுபடும் இடங்களை எழுத்ததிகாரவழி ஆராய்க.

## பாடநூல்

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாவலரேறு பாலசுந்தரனார் உரை - பெரியார் பல்கலைக்கழகம் வெளியிடு - சேலம் - 11, 2012
2. நன்னூல் - காண்டிகை உரை, ஆறுமுகநாவலர் (ப.ஆ), ஆராரோ பதிப்புகூடம், சென்னை 1926

## Web Sources

1. TamilHeritageFoundationwww.tamilheritage.org<http://www.tamilheritage.org
2. Tamilvirtual Universitylibrary-www.tamilvu.org/libraryhttp://www.virtualvu.org/